



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:223 | 27-02-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி






## இன்றைய பஞ்சாங்கம்

27.02.2026 மாசி 15
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.29

திதி:
இன்று அதிகாலை 12.54 வரை தசமி பின்பு இரவு 10.50 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

நட்சத்திரம்:
இன்று காலை 11.05 வரை திருவாதிரை பின்பு புனர்பூசம்.

யோகம் :
இன்று இரவு 7.59 வரை ஆயுஷ்மான் பின்பு சௌபாக்யம்.

கரணம் :
இன்று அதிகாலை 12.54 வரை கரசை பின்பு காலை 11.22 வரை வணிசை பின்பு இரவு 10.50 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.28 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 11.05 வரை அனுஷம் பின்பு கேட்டை

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.

இன்று கரி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### மறைந்த முதுபெரும் அரசியல் தலைவர்

# நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க தமிழக அரசு மரியாதை!

## 'வீர வணக்கம்' என முழக்கமிட்ட மு.க. ஸ்டாலின்!



**சென்னை, பிப்.27:** மறைந்த முதுபெரும் அரசியல் தலைவர் நல்லகண்ணுவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி, 'வீர வணக்கம்' என முதல்வர் மு.க. ஸ்டாலின் முழக்கமிட்டார்.

வயோதிகத்தால் ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், சுதந்திர போராட்ட வீரர் நல்லகண்ணு நேற்று(பிப். 25) பிற்பகல் காலமானார். அவருக்கு வயது 101. அரசியல் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அவரின் உடல், சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் மாநில அலுவலகமான 'பாலன் இல்லத்தில்' வைக்கப்பட்டது.

அரசியல் தலைவர்கள், பிரபலங்கள், பொதுமக்கள் பலரும் அஞ்சலி செலுத்திய நிலையில் இன்று மாலை 4 மணியளவில் நல்லகண்ணுவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதல்வர் மு.க. ஸ்டாலின் இதில் கலந்துகொண்டு நல்லகண்ணுவுக்கு மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் 'வீர வணக்கம், வீர வணக்கம், தகைசால் தமிழருக்கு வீர வணக்கம், வாழ்நாள் போராளிக்கு வீர வணக்கம், செவ்வணக்கம், செவ்வணக்கம் வாழ்நாள் போராளிக்கு செவ்வணக்கம்' என்று உணர்ச்சிவசத்துடன் முழக்கமிட்டார். அவரைப் பின்தொடர்ந்து பலரும் முழக்கமிட்டனர். தொடர்ந்து 72 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதை செய்யப்பட்டது.

இதன் பின்னர் நல்லகண்ணுவின் இறுதி ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு, அவரது விருப்பப்படி ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அவரது உடல் ஒப்படைக்கப்படுகிறது. அவரது இறுதி ஊர்வலத்திலும் பல ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## என்சிஇஆர்டி 8-ஆம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்துக்குத் தடை விதித்து உச்சநீதிமன்றம்

**புதுடில்லி, பிப்.27:** என்சிஇஆர்டி 8-ஆம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்துக்குத் தடை விதித்து உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை (பிப். 26) உத்தரவிட்டது.

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் (என்சிஇஆர்டி) 8-ஆம் வகுப்பு புதிய சமூக அறிவியல் புத்தகத்தில் 'நீதித் துறையில் ஊழல்' என்ற தலைப்பிலான பிரிவில் ஆட்சேபத்துக்குரிய கருத்துகள் இடம்பெற்றதாக வெளியான தகவலின் அடிப்படையில், இந்த விவகாரத்தை தாமாக முன்வந்து வழக்காக எடுத்துக் கொண்டு உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை (பிப். 26) விசாரணை மேற்கொண்டது.

அப்போது, அப்பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள 'நீதித் துறையில் ஊழல்' என்ற தலைப்பிலான பாடப் பிரிவுக்கு உச்சநீதிமன்றம் கடும் ஆட்சேபம் தெரிவித்ததுடன், நீதித்துறைக்கு எதிரான ஆழ்ந்த கண்ணோட்டத்துடன் தீட்டப்பட்ட சதி இதுவென்றும், திட்டமிட்டே இவ்வாறு செய்யப்பட்டிருப்பதாக இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். இவ்விவகாரத்தை நீதித்துறை கவனத்துக்கு எடுத்துச்சென்றமைக்காக ஊடகத்துறைக்கு தலைமை நீதிபதி சூர்ய காந்த் நன்றியையும் பதிவு செய்தார். அதைத் தொடர்ந்து, சமூக அறிவியல் புத்தகத்தை பதிப்பதற்கோ வெளியிடுவதற்கோ தடை விதித்து தலைமை நீதிபதி தலைமையிலான உச்சநீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது. மேலும், இப்புத்தகத்திலுள்ள ஆட்சேபனைக்குரிய உள்ளடக்கங்களை பொதுவெளியில் வெளியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் உரிய விளக்கமளிக்க என்சிஇஆர்டி இயக்குநருக்கும் பள்ளிக்கல்வித் துறை செயலருக்கும் நோட்டீஸூம் அனுப்பப்பட்டுள்ளது. அதில், இத்தகைய செயலுக்குக் காரணமானவர்கள் மீது ஏன் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கூடாதென நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் மார்ச் 4 வரை சில இடங்களில் மழை வாய்ப்பு

**சென்னை, பிப்.27:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (பிப்.27), தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களிலும், பிப்.28 முதல் மார்ச் 1-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், மார்ச் 2-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

3-ம் தேதி தென் கடலோர மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 4-ம் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

## இஸ்ரேல் அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு



**ஜெருசலேம், பிப்.27:** இஸ்ரேல் அதிபர் ஈசாக் ஹெர்சாக்கை பிரதமர் மோடி நேற்று சந்தித்து பேசினார். அப்போது இந்தியா-இஸ்ரேல் உறவுகளை வலுப்படுத்த உறுதுணையாக இருப்பதற்காக அதிபர் ஈசாக்கிற்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். மேலும் விரைவில் இந்தியாவிற்கு வருகை தர வேண்டும் என்றும், அவ்வாறு வரும்போது டெல்லி மட்டுமின்றி இந்தியாவின் மற்ற பகுதிகளையும் சுற்றிப்பார்க்க வேண்டும் எனவும் இஸ்ரேல் அதிபருக்கு மோடி அழைப்பு விடுத்தார்.

இதே போல் இஸ்ரேல் அதிபர் கூறுகையில், மத்திய கிழக்கிற்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது என்று தெரிவித்தார். இந்த சந்திப்பின்போது இந்தியா-இஸ்ரேல் இடையிலான கல்வி, வேலைவாய்ப்பு, புத்தாக்கம், தொலை தொடர்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர். தொடர்ந்து, இஸ்ரேல் அதிபர் அலுவலகத்தில் உள்ள தோட்டத்தில் பிரதமர் மோடி மரக்கன்று ஒன்றை நட்டு வைத்தார்.

## தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல்'

### தலைமைத் தேர்தல் ஆணையருடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆலோசனை



**சென்னை, பிப்.27:** தமிழ்நாட்டில் ஒரே நேரத்தில், ஒரே கட்டமாக தேர்தல் நடத்துமாறு இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரிடம் அரசியல் கட்சி தலைவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் ஓரிரு மாதங்களில் சட்டமன்ற தேர்தல் நடத்தப்பட உள்ளது. இந்த நிலையில், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் இன்று சென்னை எம்ஆர்சி நகரில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் அங்கீகரிப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் அதிமுக, திமுக, தேமுதிக, நாம் தமிழர், விடுதலை சிறுத்தைகள் ஆகிய மாநில கட்சிகளும், இந்திய தேசிய காங்கிரஸ், பாஜக, ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தேசிய மக்கள் கட்சி ஆகிய தேசிய கட்சிகளும் பங்கேற்றன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்கள், தேர்தலை ஒரே கட்டமாக நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அரசியல் கட்சி பிரமுகர்கள் தலைமைத் தேர்தல் ஆணையரிடம் முன்வைத்தனர்.



**சிபிஎம் மாநில செயலாளர் பெ. சண்முகம்**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், "ஒரே நாளில் தேர்தல் நடத்த வேண்டும். திருவிழாக்கள் போன்ற நேரங்களில் தேர்தலை நடத்தக்கூடாது. கூட்டணியில் இருக்கிறோம், கூட்டணி இல்லை என்பது எல்லாம் கிடையாது; நேர்மையான முறையில் தேர்தல் நடைப்பெறவேண்டும். திமுக, அதிமுக போன்ற பிரதான கட்சிகள் வாக்காளர்களுக்கு பரிசு பொருட்களை தருகின்றனர், அதனை தடுக்க வேண்டும்." என்றார்.



**தமிழக காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் தங்கபாலு**

தமிழக காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, "தேர்தல் நடைமுறைகள் நியாயமாக நடைப்பெறவேண்டும். இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பிறகும் நிறைய தகுதியான வாக்காளர்கள் இணைக்கப்படவில்லை. தேர்தல் அதிகாரிகளிடம் உள்ள வாக்காளர்கள் பட்டியல் அங்கீகரிப்பட்ட கட்சிகளுக்கும் வழங்க வேண்டும். வாக்கு சதவிகிதத்தில் மாறுபாடுகள் வருகின்றன. அதுபோல வரக்கூடாது என எடுத்துரைத்தோம். 65 ஆயிரம் வாக்குச்சாவடிகளுக்கு முகவர்களை போட்டுள்ளோம். அவர்களை பதிவு செய்ய வேண்டும். ஒரே நேரத்தில், ஒரே கட்டமாக தேர்தல் நடத்துமாறு அதிகாரிகளிடம் கேட்டுள்ளோம்" என்றார்.



**முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்**

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், "எங்கள் கருத்துகளை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரிடம் கூறினோம். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி பொறுத்த வேண்டும் என கேட்டுள்ளோம். வாக்குப்பதிவின்போது வாக்குச்சாவடி மையத்திலிருந்து 100 மீட்டர் வரை யாரையும் உள்ளே அனுமதிக்க கூடாது.

ஆளும் கட்சி சார்ந்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க முடியாத சூழலில் பறக்கும்படையில் மத்திய அரசு ஊழியர்களை சேர்க்க வேண்டும். தேர்தல் நிறைவடைந்த பிறகு வாக்குச்சாவடி அளவில் வாக்கு செலுத்தியவர்களின் எண்ணிக்கையை தெரிவிக்க வேண்டும். அப்போது தான் இறுதியான வாக்காளர்கள் எண்ணிக்கை வரும்போது ஒப்பிட்டு பார்க்க முடியும் என கூறினோம்.

வாக்குச்சாவடியை அபகரித்து ரவுடிகள் மூலம் கள்ள ஓட்டு போட வாய்ப்புள்ளது என்பதால், அதை தடுக்கும் வகையில் ரவுடிகளை முன்கூட்டியே கைது செய்ய வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திமுகவிற்கு விசுவசமாக இருப்பார்கள். அதனை கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக ஒரே கட்டமாக, ஒரே நாளில் தேர்தல் நடத்த வேண்டும்" என்றார்.


ADVERTISING

FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| Public Notice | Loss of Share |
| Legal Notice | Merger |
| Tender Notice | Acquisition |
| Society Notice | AFR, UFR, etc. |

for just Rs. 249/- only in Daily Print Paper

ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com



## திருக்குறள் குறள்-543

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது
மன்னவன் கோல்



அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



பிறப்பு பெற்றோரின் பரிசு
கல்வி ஆசிரியரின் பரிசு
வேலை நிறுவனத்தின் பரிசு
இல் வாழ்க்கையின் துணை வாழ்க்கையின் பரிசு ஆனால்.....
நல்ல நண்பர்கள் என்பது கடவுளின் பரிசு.....

**உஷாமுத்துராமன்**

## பாடகம் ஊராட்சியில் புதிய பேருந்து செல்ல சட்டமன்ற உறுப்பினர் கொடியசைத்து துவக்கி வைத்தார்





திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாடகம் ஊராட்சியில் புதிய வழித்தடத்திற்கு பேருந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ. சு. தி. சரவணன் அவர்கள் புதிய வழித்தடத்தில் பேருந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் கலசபாக்கம் ஒன்றிய செயலாளர் A.சிவக்குமார் அவர்கள் வழக்கறிஞர் சுப்பிரமணியன் அவர்கள் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் அன்பரசி ராஜசேகரன் அவர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## செங்கரைப்பாளையம் அறிவுத்திருக்கோவிலில் அகத்தாய்வு–II. சான்றிதழ்கள்



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சியை சேர்ந்த செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, அறிவித்திருக்கோவிலில் இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி நடைபெற்றது. மூன்று நாட்களாக நடைபெற்று வந்த பயிற்சியில் கலந்து கொண்ட ஆண், பெண் என இருபால் அன்பர்களுக்கும் நிறைவு நாளான இன்று 26.02.2026 வியாழக்கிழமை மதியம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பேராசிரியர் ஆர். பாலமுருகன் மற்றும் பேராசிரியர் கே.பூமலர் ஆகியோர் முன்னிலையில் அறக்கட்டளை செயலாளர் எஸ்.கிருஷ்ணன் அவர்கள் சான்றிதழ்களை வழங்கி அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். அன்பர்களின் அனுபவ உரைகளுக்குப் பின் உலக நல வாழ்த்துப் பாடலுடன் விழா இனிதே நிறைவுற்றது. **நன்றி ! வணக்கம் ! வாழ்க வளமுடன்**

## எடப்பாடி பழனிசாமி ஜான்பாண்டியன் சந்திப்பு



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தமிழக மக்கள் முன்னேற்ற கழகத் தலைவர் ஜான்பாண்டியன் நேற்று சந்தித்துப் பேசினார்.

## இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியில் இரத்ததான முகாம்: கலைமாமணி முனைவர் முத்து தொடங்கி வைத்தார்



**வந்தவாசி, பிப் 27:** திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டமும், கல்லூரி ஆர்.ஆர்.சி அமைப்பும், தெள்ளாறு ஆரம்ப சுகாதார நிலையமும் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நேற்று இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி தலைவர் கலைமாமணி, முனைவர் வி.முத்து கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் தென்னாறு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ஹித்தேன் டி ஷா, மருத்துவர் சீனுவாசன், குழந்தைகள் நல மருத்துவர் பிரசாந்த், கோதண்டராமன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சேகர், கோபிநாதன், சுகாதார ஆய்வாளர் காளிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். நிகழ்ச்சி ஏற்பாட்டை நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ஜெயப்பிரகாஷ், செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் மாடசாமி ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## வேலூர் மாநகரம் பேரிப்பேட்டை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் 36ஆம் ஆண்டு பிரம்மோற்சவ விழா: விஸ்வகர்மா சமூகத்தினரின் 4ம் நாள் உற்சவம்- சுவாமி வீதியுலா!



**வேலூர், பிப். 27:** வேலூர் மாநகரம், பேரிப்பேட்டை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் 36ஆம் ஆண்டு பிரம்மோற்சவ விழா விஸ்வகர்மா சமூகத்தினரின் 4ம் நாள் உற்சவம் சுவாமி வீதியுலா வெகு விமரிசையாக நடந்தது. வேலூர்மாநகரம்,பேரிப்பேட்டை அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் 36ஆம் ஆண்டு பிரம்மோற்சவ விழா விஸ்வகர்மா சமூகத்தினரின் 4ம் நாள் உற்சவம் நேற்று 4ம் நாள் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நான்காம் நாள் உற்சவ உபயதாரர்கள் தமிழ்நாடு விஸ்வகர்ம நண்பர்கள் நலச்சங்க தலைவர் சி.தேஜோமூர்த்தி, துணைத்தலவர் எல். பன்னீர்செல்வம், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. பரம்பரை அறங்காவலர் வி.துரைசாமி, ராமு வி.டி.என். மார்கபந்து, வி.சத்தியநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விஸ்வகர்ம நண்பர்கள் நலச்சங்க செயலாளர் செ.நா. ஜனார்த்தனன், தலைமை நிலையச் செயலாளர் சு.சோமாஸ்கந்தன், செயற்குழு உறுப்பினர் தி.சு.சக்ரீஸ்வரன், வே.பஞ்சாட்சரம், கே.ஜி. சண்முகம் ஆச்சாரி, மூர்த்தி, கோ.சுவாமிநாதன், தாமோதரன், செல்வி, முரளிதரன், த.கனகா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். காலை கேடய உற்சவம் நடைபெற்றது. மாலை நாக வாகனத்தில் சுப்பிரமணிய சுவாமி வீதியுலா நடைபெற்றது.

கோயில் அர்ச்சகர் வி.என். ஷண்முககுருக்கள்,உமாபதிகுருக்கள், ஆகியோர் பூஜைகள் செய்தனர். டி.எஸ்.கணேசன் குழுவினரின் நாதசுர கச்சேரி நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை உபயதாரர் செ.நா.ஜனார்த்தனன் செய்திருந்தார்.

## வளத்தி ஊராட்சியில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு மண்டபம் திறப்பு






**விழுப்புரம், பிப்.27:** விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் டாக்டர் கலைஞர் நூற்நாண்டு திருமண மண்டபம் மற்றும் நாடகமேடைகள், சத்துணவு சமயலறை கட்டிடங்கள், நியாயவிலைக் கடை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ திறந்துவைத்தார் இந்நிகழ்வில், ஒன்றிய சேர்மேன் கண்மணி நெடுஞ்செழியன் மற்றும் அரசுத் துறைத் சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## கோவை மாநகராட்சி கூட்டம்






கோவை மாநகராட்சி கூட்டம் மேயர் ரங்கநாயகி தலைமையில் நேற்று நடந்தது.

## கோவை நிர்மலா மகளிர் கல்லூரியில் புதுமை மையம்



கோவை நிர்மலா மகளிர் கல்லூரியில் புதுமை மையத்தை மத்திய அமைச்சர் ஜித்தன்ராம் மஞ்சி துவக்கி வைத்தார்.

## ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் துவக்க விழா



விருதுநகர் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் துவக்க விழா திருச்சுழி யில் நடந்தது.

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி




**திருநெல்வேலி, பிப்.27:** திருநெல்வேலி மாவட்டம் பேட்டை காமராஜர் நகர் மன்ற மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் விழிப்புணர்வு மன்றம் சார்பாக மின்னணு வாக்குப்பதிவு முறை செயல்படும் முறை குறித்து விளக்கமாக விளக்கி கூறப்பட்டது .

இந்த நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி இவாஞ்சலின் தலைமை தாங்கினார் . நிகழ்ச்சியில் பள்ளியின் மாணவர்கள் வாக்களிக்கும் முறை வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த தகவல்கள் , மற்றும் பெற்றோர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது .

நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை பள்ளியின் பொருளாதார ஆசிரியரும் வாக்காளர் விழிப்புணர்வு மன்ற பொறுப்பாளருமான முதுகலை பொருளாதார ஆசிரியர் பொன்னுசாமி ஏற்பாடு செய்திருந்தார்

## வாடிப்பட்டியில் விடுதலை சிறுத்தைகள் வீரவணக்கம்




**வாடிப்பட்டி, பிப்.27:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஜெமினி பூங்கா முன்பு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் நல்ல கண்ணு மற்றும் விடுதலை சிறுத்தைகள் முதன்மை செயலாளர் ஏ.சி. பாவரசு ஆகியோர் மறைவுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் தமிழாளன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் பொறியாளர் தமிழ் நிலவன், பேரூர் செயலாளர் அரசு விஜயார்,மாவட்ட நிர்வாகிகள் அதிவீரபாண்டியன், பஞ்சு வீரன், மகளிர் அணி ஜெயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாடிப்பட்டி வளவன் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. பேரூர் செயலாளர் மு. பால்பாண்டியன், ஒன்றிய செயலாளர் பால. ராஜேந்திரன், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் கார்த்திக், கவுன்சிலர் ஜெயகாந்தன், தே.மு.தி.க மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் பொன் யாழினி, பேரூர் செயலாளர் பாலாஜி, பேரூர் நிர்வாகிகள் கோபால், தமிழன் என்ற முருகன், கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் ஜோதி ராமலிங்கம், மச்சராஜ், சுதாகர், ஹனிபா உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் சிறுத்தை பாலன் நன்றி கூறினார்.

## கணித மற்றும் அறிவியல் திருவிழா



**நாகப்பட்டினம். பிப்.27:** கணித மற்றும் அறிவியல் திருவிழா (STEM)நாகப்பட்டினம் நாளது 26.02.2026 நகராட்சி நடுநிலைப்பள்ளி நம்பியார் நகர் வளாகத்தில் கணித மற்றும் அறிவியல் (STEM) திருவிழா நடைபெற்றது.

இந்த திருவிழாவின் மூலம் மாணவர்களின் அறிவியல் சிந்தனை, கணித திறன், ஆராய்ச்சி மனப்பாங்கு மற்றும் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன இதில் மாணவர்கள் தயாரித்த அறிவியல் மாதிரிகள் கணித விளக்கங்கள் புதிர்கள் மற்றும் வினாடி வினா போட்டிகள் இடம் பெற்றன.

இவ்விழாவினை நம் பள்ளியின் பஞ்சாயத்தாரர்கள் திரு வேலாயுதம், திரு திருவேலு அவர்கள் விழாவினை தொடங்கி வைத்தனர் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி ந. உலகாம்பிகை மாணவர்களுக்கு (STEM) கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பள்ளியின் பட்டதாரி அறிவியல் ஆசிரியை திருமதி பா சத்தியகலா மற்றும் வானவில் மன்ற கருத்தாளர்.திருமதி அனுப்பிரியா நிகழ்ச்சிகளை ஒருங்கமைத்து மாணவர்கள் தங்கள் செயல்பாடுகளை விளக்குவதற்கு உறுதுணையாக இருந்தனர் . மேலும் அறிவியல் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மூலமாக என் பள்ளி மாணவர்களுக்கு சர் சி வி ராமன் முகமூடி மற்றும் அவரது வாழ்க்கை வரலாற்று புத்தகம் வழங்கப்பட்டது நிகழ்ச்சிகள் பங்கு பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் திருமதி பா சத்தியகலா பரிசு பொருள்கள் வழங்கினார் இத்தகைய விழாக்கள் மாணவர்களின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் என ஆசிரியர்கள் கருத்து தெரிவித்தனர்

## திமுக செயல்வீரர்கள் கூட்டம்



புதுச்சேரி நெல்லித் தோப்பு பகுதியில் நடந்த திமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. பேசினார்.

## அன்புமணி, தேர்தல் ஆணையத்துக்கு நீதிமன்றம் நோட்டீஸ்

**சென்னை, பிப்.27:**

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தொடர்ந்த வழக்கில், அன்புமணி ராமதாஸ் மற்றும் தேர்தல் ஆணை யம் ஆகியோருக்கு சென்னை உரிமையியல் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. தந்தை-மகன் இடையே ஏற்பட்ட தகராறால் பா.ம.க. இரண்டு அணிகளாக பிரிந்து செயல்பட்டு வரும் நிலையில், கட்சியின் பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை அன்பு மணி பயன்படுத்துவதற்கு தடை விதிக்கவும், தன்னை கட்சி யின் தலைவராக அறிவிக்கவும் கோரி ராமதாஸ் மனுத் தாக்கல் செய்திருந்தார். நீதிபதி எம். தர்மபிரபு முன்பு வந்த இந்த மனு விசாரணை யில் ராமதாஸ் தரப்பினர், கட்சி நிறுவனரின் அனுமதியின்றி பிறர் கட்சியின் பெயர் உட்பட எதையும் பயன்படுத்த முடியாது என வாதிட்டனர். இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அன்பு மணி மற்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் பதில் மனுத் தாக்கல் செய்ய உத்தரவிட்டது. இவ்வழக்கு விசாரணை மார்ச் 9 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பாசிச சக்திகளை வீழ்த்துவோம்! துணை முதல்வர் உறுதி

**சென்னை, பிப்.27:**

அம்பேத்கர் கனவு கண்ட சமத்துவத்தையும் மத நல்லிணக்கத்தையும் காக்க வரவிருக்கும் தேர்தலில் திமுக கூட்டணி 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் கூறினார். சென்னை அருகே ஆதம்பாக்கத்தில் நடைபெற்ற அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில் பேசிய அவர், பெரியா ரும் அம்பேத்கரும் சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிராக யார் எதிரி என்று தெளிவாக அடையாளம் காட்டியவர்கள். தமிழர்கள் எதிரிகளை சரியாக அடையாளம் கண்டுகொண்டதால்தான் பாசிச சக்திகளால் இன்று வரை தமிழ்நாட்டை நெருங்க முடிய வில்லை என்று வலியுறுத்தினார். 12 ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசு தமிழ் நாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவதாக குற்றம் சாட்டிய உதயநிதி, பாசிச சக்திகளும் அவர்களது கூட்டாளிகளும் அனைத்துத் தொகுதிகளிலும் வைப்புத்தொகை இழக்க வேண்டும் என்றார்.

## கூடுதலாக ரூ.6 லட்சம் வசூல்: மாணவிக்கு திருப்பி தர நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, பிப்.27:**

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதலாக வசூலித்த தனியார் பல் மருத்துவக் கல்லூரி ஒன்று, மாணவரிடம் வசூலித்த ரூ.6 லட்சத்தை நான்கு வாரங்களுக்குள் திரும்ப வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜெ.பிரியதர்ஷினி என்ற மாணவி மாதா பல்மருத்துவக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு எதிராக தாக்கல் செய்த மனுவை நீதிபதி டி. பரத சக்ரவர்த்தி விசாரித்து இந்த தீர்ப்பை வழங்கினார். 2015 முதல் 2024 வரையிலான கல்வியாண்டுகளில் பி.டி.எஸ். படிப்பிற்கு கட்டண நிர்ணயக் குழு ஆண்டுக்கு ரூ.1.45 லட்சமும் வளர்ச்சி நிதியாக ரூ.5,000-மும் மட்டுமே வசூலிக்க வேண்டும் என நிர்ணயித்திருந்தது. ஆனால், அந்த கல்லூரி பல்வேறு தலைப்புகளின் கீழ் கூடுதலாக மொத்தம் ரூ.20 லட்சம் வசூலித்ததாக மாணவி குற்றம் சாட்டியிருந்தார். நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது தெளிவாக தெரிகிறது என்று கூறிய நீதிமன்றம், நான்கு வாரங்களுக்குள் ரூ.6 லட்சம் திரும்ப வழங்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் 12 சதவீத வட்டி செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது. மேலும், மாணவிக்கு எட்டு வாரங்களுக்குள் பட்டச் சான்றிதழ் வழங்க வேண்டும் என பல்கலைக்கழகத்திற்கும் ஆணையிட்டது.

## சட்டமன்றத் தேர்தல் முன்னேற்பாடு: காவல்துறை ஆலோசனை

**ஸ்ரீவில்லிபுத்தூர், பிப்.27:**

ஸ்ரீவில்லிபுத்தூர் உட்கோட்ட காவல் துறை சார்பில் சட்டமன்றத் தேர்தலை முன் னிட்டு ஆலோசனைக் கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்திற்கு துணை காவல் கண்காணிப்பாளர் பாலசுந்தரம் தலைமை தாங்கி, தேர்தல் தொடர்பான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாது காப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரி களுக்கு வழிகாட்டுதல் வழங்கினார். கூட்டத்தில் உட்கோட்டத்தில் பணிபுரி யும் 4 காவல் ஆய்வாளர்கள், 13 சார்பு ஆய் வாளர்கள் மற்றும் 110 காவல்துறை பணி யாளர்கள் கலந்து கொண்டனர்.

## புரசைவாக்கத்தில் ரூ.11 கோடியில் நவீன சலவை நிலையம்: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சென்னை, பிப்.27:**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் 10.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன சலவை நிலையம், 12.68 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ள கன்னிகாபுரம் விளையாட்டுத் திடல், ராயபுரம், மூலகொத்தளத்தில் 14.31 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகை மூன்றையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும் 10 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

புரசைவாக்கம் நவீன சலவை நிலையமானது தரைதளம் மற்றும் முதல் தளங்களுடன் மொத்தம் 60 எண்ணிக்கையிலான சலவை நிலையம் அதில் 30 எண்ணிக்கையிலான சலவை இயந்திரங்கள், 30 எண்ணிக்கையிலான சலவை கற்கள் மற்றும் 6 எண்ணிக்கையிலான உலர்வை இயந்திரங்கள், 60 எண்ணிக்கையிலான சேமிப்பு அறைகள் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

3.75 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட கன்னிகாபுரம் விளையாட்டுத் திடலில் 14,708 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில், இறகு பந்து கூடம் மற்றும் உடற்பயிற்சி கூடமும், முதல் தளத்தில் டேபிள் டென்னிஸ், சதுரங்க விளையாட்டு, கேரம் விளையாட்டு பகுதியும், இரண்டாம் தளத்தில் குத்துச்சண்டை வளையம் போன்ற உட்புற விளையாட்டு அரங்கம் ஆகியவை அதிநவன வசதியுடன் கட்டப்பட்டுள்ளன.

கன்னிகாபுரம் விளையாட்டுத் திடலில் கால்பந்து மைதானம், 280 நபர்கள் அமரக்கூடிய வகையில் 2 பார்வையாளர்கள் மாடம், சிலம்பம் மைதானம், கபடி மைதானம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, 3 மீட்டர் அகல நடைபாதை, அக்குபஞ்சர் நடைபாதை, வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குடிநீர் வசதிகள், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

ராயபுரம் முதல்வர் திருமண மாளிகையானது 0.67 ஏக்கர் மொத்த நிலப்பரப்பில் 43,881 சதுர அடி கட்டடப் பரப்பளவில் அடித்தளம், தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது. இத்திரு மண மாளிகையில் 55 எண்ணிக்கையிலான 4 சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகளும், 60 எண்ணிக்கையிலான 2 சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகளும், சமையலறை கூடமும்,

20 எண்ணிக்கையிலான நவீன கழிப்பறை வசதிகளும், 2 எண்ணிக்கையிலான மின்தூக்கி வசதிகளும், 750 இருக்கை வசதிகளுடன் கூடிய திருமண மண்டபமும், ஒரே சமயத்தில் 175 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடமும் மற்றும் 12 எண்ணிக்கையிலான தங்கும் அறைகளுடன் கட்டப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிகளில் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ஆர்.டி.சேகர், அ.வெற்றி அழகன், ஜெ.ஜெ. எபிநேசர், ஆர். மூர்த்தி, ஜோசப் சாமுவேல், நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் கோ.பிரகாஷ், நிலைக்குழுத் தலைவர் தா.இளைய அருணா, துணை ஆணையாளர்கள் எச். ஆர்.கௌஷிக், கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## “வாழ்வியல் முறையில் ஆரோக்கியத்தின் அவசியம்”: டாக்டர் சௌமியா சுவாமிநாதன் அறிவுறுத்தல்




**சென்னை, பிப்.27:**

‘சங்கர நேத்ராலயா’வின் நிறுவனர் அமரர் டாக்டர் எஸ் எஸ் பத்ரிநாத் நினைவு அறக்கட்டளை 3 வது சொற்பொழிவு, சங்கர நேத்ராலயா ஸ்ரீ வி டி சுவாமி அரங்கத்தில் நடந்தது. சிறப்பு விருந்தினராக டாக்டர் சௌமியா சுவாமிநாதன்( தலைவர் எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி) பங்கேற்று, நினைவுசொற்பொழிவாற்றினார். வாழ்வியல் நடைமுறையில் ஆரோக்கியத்தின் அவசியத்தை அவர் அறிவுறுத்தினார்.

சங்கர நேத்ராலயாவின் சிறப்பு கவுரவ ஆலோசகர் டாக்டர் பிரேமா பத்மநாபன் வரவேற்றார். அதன் தலைவர் டாக்டர் டி எஸ் சுரேந்திரன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். நிர்வாக செயல் மருத்துவ இயக்குநர் டாக்டர் கிரிஷ் ஷிவா ராவ், சௌமியாவை கவுரவித்தார். டாக்டர் சௌமியா சுவாமிநாதன் அடிப்படையில் குழந்தைகள் நல பிரபல மருத்துவர். அவர் தனது எச் ஐ வி மற்றும் காச நோய் ஆராய்ச்சிகளுக்காக பெரிதும் கவுரவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் பத்ரிநாத்தின் நண்பர் சி. வேணுபிரசாத், டாக்டர் பத்ரிநாத்துடனான தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார். சங்கர நேத்ராலயாவின் மருத்துவ ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிர்வாகக்குழுவின் கவுரவ செயலாளர் ஜி ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

கண்சிகிச்சையில் முன்னோடி டாக்டர் பத்ரிநாத்தின் சேவையை டாக்டர் சௌமியா நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டினார். “மருத்துவ அனுபவம், ஆராய்ச்சி மற்றும் இரக்கம் ஆகியவற்றை இணைத்து, பொது சேவைக்கான ஒரு தலைமுறையின் முன்னோடி டாக்டர் பத்ரிநாத் என்றார்.

நோய்த் தடுப்புக்கு சுகாதாரம் மற்றும் சுகாதார மேம்பாட்டு மையங்களை வலுப்படுத்துவது முக்கியம் என்றும் ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். அதிகரித்து வரும் உடல் பருமன், நீரிழிவு மற்றும் மன அழுத்தம், பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் அதிகப்படியான டிஜிட்டல் சாதன பயன்பாடு காரணமா சுகாதார சவால்களை சமாளிக்கும் முறையை நாம் கண்டறிந்து அவற்றைக் களைந்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

## குடியாத்தம் கிராம அறிவுசார் மையத்திற்கான சாவி: கலெக்டர் சுப்புலெட்சுமி வழங்கினார்

**வேலூர், பிப்.27:**

குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரங்கசமுத்திரம் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.77.89 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கிராம அறிவுசார் மைய சாவியினையும், காட்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வண்டறந்தாங்கல் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.77.89 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கிராம அறிவுசார் மைய சாவியினை, மையத்தின் பராமரிப்பு குழுக்களிடம் வழங்கினார்.

வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்ற தொகுதிப்பட்ட வண்டறந்தாங்கல் கிராமத்தில் புதிய கிராம அறிவுசார் மையம் விவரம்.




வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதி உட்பட்ட வண்டரந்தாங்கல் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் புதிய கிராம அறிவுசார் மையம் ரூ.77.89 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. இதில் தரைத்தளம் 203.90 சதுர மீட்டர் கொண்ட கிராம அறிவுசார் மையம் கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் கிராம அறிவுசார் மையம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ஆண்கள் கழிவறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பெ ண்கள் கழிவறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. சமையலறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் தரைத்தளம். கழிவறை கட்டடம், சமையலறை கட்டடம் உயர்ந்த வண்ணப் பூச்சுடன் கட்டப்பட்டுள்ளது. வண்டறந்தாங்கல் ஊராட்சியில் 7 குக்கிராமங்களில் சுமார் 7000 மக்கள் வசிக்கின்றனர். அதில் ஆதிதிராவிடர் மக்கள் சுமார் 3,000 பேர் இக்கட்டிடத்தின் மூலம் பயன் பெறுவார்கள். வேலூர் மாவட்டம் குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரங்கசமுத்திரம் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் புதிய கிராம அறிவுசார் மையம் ரூ.77.89 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. இம்மையம் தரைத்தளம் 203.90 சதுர மீட்டர் கொண்ட கிராம அறிவுசார் மையம் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் கிராம அறிவுசார் மையம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ஆண்கள் கழிவறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பெண்கள் கழிவறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.சமையலறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் தரைத்தளம், கழிவறை கட்டடம், சமையலறை கட்டடம் உயர்ந்த வண்ணப் பூச்சுடன் கட்டப்பட்டுள்ளது. குடியாத்தம் ஊராட்சியில் 5 குக்கிராமங்களில் சுமார் 8000 மக்கள் வசிக்கின்றனர். அதில் ஆதிதிராவிடர் மக்கள் சுமார் 5,000 இக்கட்டிடத்தின் மூலம் பயன் பெறுவார்கள்.

இந்நிகழ்வின்போது மாவட்ட தாட்கோ மேலாளர் ரேகா உடனிருந்தார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### முட்டையின் மஞ்சள் கருவை தவிர்ப்பதால் நாம் இழக்கும் சத்துக்கள் என்ன?

பலருக்கும் காலை உணவோடு முட்டை சாப்பிடுவது என்பது மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால், அந்த முட்டைக்குள் இருக்கும் மஞ்சள் கருவை பார்க்கும் போதெல்லாம் “சாப்பிடலாமா? வேண்டாமா?” என்ற தயக்கம் நமக்குள் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.

“மஞ்சள் கருவில் கொழுப்பு அதிகம், அது இதயத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்” என்ற கருத்து நம்மிடையே ஆழமாகப் பதிந்துவிட்டது. இதனால், பலரும் மஞ்சள் கருவை தூக்கி எறிந்துவிட்டு, வெள்ளைக்கருவை மட்டும் சாப்பிடும் பழக்கத்திற்கு மாறிவிட்டனர்.

ஆனால், அறிவியல் வளர்ச்சியும் சமீபத்திய ஆய்வுகளும் இந்த தயக்கத்திற்கு புதிய விளக்கங்களை அளித்துள்ளன. நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் அதே வேளையில், எதை சாப்பிட வேண்டும் என்பதில் தெளிவான புரிதல் இருப்பது அவசியம் என்கிறது இந்த ஆய்வு.

முட்டையின் மஞ்சள் கரு உண்மையில் இதயத்திற்கு பாதிப்பா? நீண்ட காலமாகவே முட்டையின் மஞ்சள் கருவில் உள்ள கொலஸ்ட்ரால் இதய நோய்களுக்குக் காரணமாக சொல்லப்பட்டது. ஆனால், நவீன மருத்துவ ஆய்வுகள் ஆரோக்கியமான மனிதர்களுக்கு, முட்டையில் உள்ள கொலஸ்ட்ரால் ரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவை மிகக் குறைந்த அளவே பாதிக்கிறது என்கிறது.

உண்மையில், நம் ரத்தத்தில் ‘கெட்ட கொழுப்பு’ (LDL) அதிகரிப்பதற்கு முட்டையை விட, நாம் உண்ணும் துரித உணவுகளில் உள்ள நிறைவுற்ற கொழுப்புகளும், டிரான்ஸ் கொழுப்புகளுமே முக்கிய காரணம். சில ஆய்வுகளின்படி, மிதமான அளவில் முட்டை உட்கொள்வது இதயத்தை பாதுகாக்கும் ‘நல்ல கொழுப்பை’ (HDL) அதிகரிக்க உதவுகிறது என்று தெரிய வந்துள்ளது.

கொலஸ்ட்ரால் அளவு எப்படிப் பாதிக்கப்படுகிறது? பெரும்பாலானோருக்கு முட்டை சாப்பிடுவதால் பெரிய பாதிப்பு இல்லை என்றாலும், உடலின் எதிர்வினை நபருக்கு நபர் மாறுபடும். குறிப்பாக, மரபணு ரீதியாக ரத்த கொழுப்பு பிரச்சனை உள்ளவர்கள் அல்லது அதிகப்படியான கொழுப்பு சத்துள்ள உணவுகளை ஏற்கனவே உட்கொள்பவர்கள் முட்டை விஷயத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும். சர்க்கரை நோய் (DIABETES) அல்லது ஏற்கனவே இதய நோய் உள்ளவர்களுக்கு முட்டை ஒரு சிக்கலான விஷயமாகவே பார்க்கப்படுகிறது. இவர்கள் ஒரு நாளைக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முட்டை சாப்பிடுவது சில நேரங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இத்தகைய சூழலில் இருப்பவர்கள் மருத்துவரின் ஆலோசனையை பெறுவது சிறந்தது.

### மஞ்சள் கருவை தவிர்ப்பதால் நாம் இழக்கும் சத்துக்கள் என்ன?

மஞ்சள் கருவை வெறும் கொழுப்பு என்று மட்டும் நினைப்பது தவறு. அதில் உடலுக்கு தேவையான மிக முக்கியமான சத்துக்கள் நிறைந்துள்ளன. வைட்டமின் A, D, E மற்றும் B12. குறிப்பாக இரும்புச்சத்து, கோலின் மூளை வளர்ச்சிக்கும் அதன் செயல்பாட்டிற்கும் இன்றியமையாதது. கண்ணின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் லுடீன் (LUTEIN) மற்றும் ஜியாக்சாண்டின் (ZEAXANTHIN). உயர்தர புரதம் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள். மூளைச் செயல்பாட்டிற்கு தேவையான ‘கோலின்’ சத்து பலருக்குக் கிடைப்பதே இல்லை. மஞ்சள் கருவை முற்றிலுமாக தவிர்ப்பது, இத்தகைய அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் குறைபாட்டிற்கு வழிவகுக்கும். ஒரு நாளைக்கு எத்தனை முட்டைகள் சாப்பிடலாம்? ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு முட்டையின் அளவு நபருக்கு நபர் மாறுபடும்.

ஆரோக்கியமானவர்கள்: ஒரு நாளைக்கு 1 முதல் 2 முட்டைகள் அல்லது வாரத்திற்கு 7 முட்டைகள் வரை தாராளமாகச் சாப்பிடலாம்.

முதியவர்கள் (65 வயதுக்கு மேல்): தசை வலிமைக்கும் மூளைச் செயல்பாட்டிற்கும் தினமும் 1 முதல் 2 முட்டைகள் எடுத்துக்கொள்வது நல்லது.

சர்க்கரை நோயாளிகள்: வாரத்திற்கு 3 முதல் 4 முட்டைகள் வரை கட்டுப்படுத்திக் கொள்வது பாதுகாப்பானது.

இதய நோயாளிகள்: மருத்துவரின் ஆலோசனைப்படி வாரத்திற்கு 3 முதல் 4 முட்டைகள் மட்டும் எடுத்துக்கொள்ளலாம்.

குழந்தைகள் மற்றும் சிறுவர்கள்: சரிவிகித உணவின் ஒரு பகுதியாக தினமும் 1 முதல் 2 முட்டைகள் கொடுக்கலாம்.

## திருட்டு வழக்கில் 3 பேர் கைது: நகைகள், பணம் மீட்பு

**இராஜபாளையம், பிப்.27:**

இராஜபாளையம் பச்சமடம் அருகே விஜபி நகரில் வசித்து வரும் ராஜேஸ்வரி (67) வீட்டில் நடைபெற்ற திருட்டு சம்பவம் தொடர்பாக 3 பேரை போலீசார் கைது செய்து நகைகள் மற்றும் பணத்தை மீட்டுள்ளனர். ராஜேஸ்வரி தனது கணவர் பன்னீர் செல்வம் மறைவுக்குப் பிறகு தனியாக வசித்து வந்தார். கடந்த 13.11.2025 அன்று அமெரிக்காவில் வசிக்கும் தனது மகன் சென்னை வருவதாக தகவல் கிடைத்ததால், வீட்டை பூட்டிவிட்டு மகள் பார்வதியுடன் சென்னை சென்றிருந்தார். மறுநாள் காலை வேலைக்குச் வந்த உதவியாளர் சுப்பு லட்சுமி, வீட்டு பூட்டு உடைக்கப்பட்டு இருப் பதை கண்டு அதிர்ச்சி அடைந்து, ராஜேஸ் வரி மற்றும் தெற்கு காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். இன்ஸ்பெக்டர் ராஜேஷ் தலைமை யிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

பீரோவில் இருந்த சில நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. அதே நேரத்தில், வீட்டில் மறைவாக வைக்கப்பட்டிருந்த சுமார் 400 பவுன் நகைகள் மற்றும் ரூ.4 லட்சம் ரொக்கம் திருடர்களால் கண்டுபிடிக்கப்படாமல் இருந்ததால் அவை பாதுகாப்பாக மீட்கப் பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## ரூ.33 லட்சம் முறைகேடு லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு

**விருதுநகர், பிப்.27:**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருகே உள்ள மம்சாபுரம் பேரூராட்சியில் ரூ.32.78 லட்சம் முறை கேட்டில் ஈடுபட்ட அரசு அலுவலர்கள் 7 பேர் உட்பட 8 பேர் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மம்சாபுரம் பேரூராட்சியில் கடந்த 2022- 2023 ஆண்டில் மின் மோட்டார் வாங்கியது, பழுது நீக்கியது, சிறு விளக்கு கள் அமைத்தது என பணியே செய்யாமல் போலியாக ரசீதுகளை தயாரித்து பண மோசடி செய்திருப்பதாக பரூக் ராஜா என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, லஞ்ச ஒழிப்பு போலீசார், உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க உத்தர விட்டார். இதைடுத்து விருதுநகர் லஞ்ச ஒழிப்பு ஏடிஎஸ்பி ராமச்சந்திரன் தலைமையிலான போலீசார், மம்சாபுரம் பேரூராட்சியில் இருந்த ஆவணங்களை ஆய்வு செய்த னர். அதில் ரூ.32,78,616 மோசடி நடைபெற்றிருப்பது தெரிய வந்தது. அதன் பேரில் அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் மணிகண்டன், அலுவலகப் பணியாளர்கள் உஷா கிரேஸ், திலீபன், பிள்ளையார், சத்தியமூர்த்தி, கார்த்திக் முருகேசன் மற்றும் எலக்ட்ரிக்கல் கடை உரிமை யாளர் வீரபாண்டி ஆகியோர் மீது விருதுநகர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசித் திருவிழா

**திருச்செந்தூர், பிப்.27:**



முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசித் திருவிழா கடந்த 21-ந் தேதி தொடங்கி விமரிசையாக நடைபெற்று வருகிறது. தினமும் சுவாமியும், அம்பாளும் காலை மற்றும் மாலையில் ஒவ்வொரு வாகனத்திலும் 8 வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுத்து வருகின்றனர்.

5-ம் திருநாளான நேற்று அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. தொடர்ந்து 5.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடந்தது. மாலை 4 மணிக்கு சாயரட்சை தீபாராதனை நடந்தது.

குடவருவாயில் தீபாராதனை: இரவு 7.15 மணிக்கு ஆனந்தவல்லி அம்பாள் சமேத சிவக்கொழுந்தீசுவரர் கோவில் பிரதான வாயில் அடைக்கப்பட்டது. குமரவிடங்க பெருமான், தெய்வானை அம்பாள் தனித்தனி தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளினர். பின்னர் பிரதான வாயில் திறக்கப்பட்டு, குடவருவாயில் தீபாராதனை நடந்தது. தொடர்ந்து கீழ ரதவீதி பந்தல் மண்டப முகப்பில் வெள்ளி சப்பரத்தில் எழுந்தருளி இருந்த சுவாமி ஜெயந்திநாதருக்கு எதிர்சேவை தீபாராதனையும் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

மாசித் திருவிழவைக் காண பக்தர்கள் குவிந்தவண்ணம் உள்ளனர். பலர் பாதயாத்திரையாக வந்தும், காவடி எடுத்தும் முருகப்பெருமானை வழிபடுகின்றனர்.

வெள்ளி தேர்

6-ம் திருநாளான இன்று (வியாழக்கிழமை) காலையில் சுவாமி கோ ரதத்தில் எழுந்தருளி எட்டு வீதிகளிலும் உலா வந்து பக்தக்ளுக்கு அருள்பாலித்தார். இரவு 8 மணியளவில் சுவாமி வெள்ளித் தேரிலும், அம்மன் இந்திர விமானத்திலும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்கள்.

7-ம் திருநாளான நாளை (வெள்ளிக்கிழமை) அதிகாலை 1 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாரானையும், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகமும், அதிகாலை 5 மணிக்கு மேல் 5.30 மணிக்குள் சுவாமி சண்முகர் உருகுசட்ட சேவை நடக்கிறது. பின்னர் 9 மணியளவில் சுவாமி வெற்றிவேர் சப்பரத்தில் எழுந்தருள்கிறார். மாலை 4.30 மணிக்கு சிவப்பு சாத்தி சிவப்பு சாத்தி கோலத்தில் சுவாமி சண்முகர் தங்க சப்பரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுக்கிறார்.

8-ம் திருநாள் (சனிக்கிழமை) அதிகாலையில் சுவாமி சண்முகர் பெரிய வெள்ளி சப்பரத்தில் வெள்ளை சாத்தி கோலத்திலும், பகல் 10.30 மணிக்கு சுவாமி பச்சை சாத்தி கோலத்திலும் எழுந்தருளி வீதி உலா வருகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலில் மாசித் திருவிழா கொடியேற்றம்

**ஆழ்வார்திருநகரி, பிப்.27:**



தாமிரபரணி ஆற்றின் கரையில் உள்ள நவதிருப்பதிகளில் ஒன்பதாவதான ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவில் மாசித் திருவிழா கொடியேற்றம் நேற்று நடந்தது. இந்த உற்சவம் நம்மாழ்வார் விக்ரகம் கிடைத்த மாசி விசாக நட்சத்திரம் முடிய 12 நாட்கள் நடைபெறுகிறது.

முதல் நாளில் காலை 5 மணிக்கு விஸ்வரூபம், 6.30 மணிக்கு திருமஞ்சனம், 7.45 மணிக்கு நித்தியலைத் தொடர்ந்து 8 மணிக்கு கொடிமரம் முன்னர் நம்மாழ்வார் உற்சவர் எழுந்தருளினார். 8.15 மணிக்கு கொடி பட்டம் மாடவீதி சுற்றி வந்தது. 8.45 மணிக்கு கொடியேற்றம் நடந்தது. அர்ச்சகர் கண்ணன் கொடியேற்றினார். இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

தினசரி காலை தோளுக்கினியானில் ரதவீதி புறப்பாடு நடைபெறும். மாலை 6.30 மணிக்கு பரங்கி நாற்காலி. பூம்பல்லாக்கு, புன்னைமர வாகனம், திருப்புளியடி வாகனம் என தினமும் ஒரு வாகனத்தில் பகவான் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். மார்ச் 2 ந்தேதி கருடசேவை, 6 ந்தேதி தேரோட்டம், 7, 8 ஆகிய நாட்களில் தெப்ப உற்சவம் நடைபெறுகின்றது.

## அருணாப்பேரி முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்ற குருபூஜை விழா

**பாவூர்சத்திரம், பிப்.27:**



அருணாப்பேரி அழகு முத்துமாரியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற 36 - ஆம் ஆண்டு குருபூஜை விழாவை முன்னிட்டு அம்பாளுக்கு புஷ்ப அலங்காரத்தில், விவசாயிகள் விளைவித்த 1 டன் காய், கனி, 1 டன் அரிசியினை படைத்து பொது மக்கள் வழிபட்டனர்.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள அருணாப்பேரி, ஸ்ரீ அழகு முத்துமாரியம்மன் திருக்கோவிலில் 36-வது ஆண்டு குருபூஜை விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவில், அழகு முத்துமாரியம்மனுக்கு 500 கிலோ எடையில் கேந்தி, மல்லி, தாமரை, ரோஜா உள்ளிட்ட பல்வேறு மலர்களால் சிறப்பு அலங்காரம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து விவசாயத்தையே பிரதான தொழிலாக கொண் அருணாப்பேரி கிராமத்தில் விவசாயிகள் விளைவித்த 1டன் எடையிலான பனங்கிழங்கு, சோளம், நெல்லி, சீனிக்கிழங்கு, வாழைப்பழங்கள், தர்ப்பூசணி, வாழை, முட்டைகோஸ், கப்பகிழங்கு, பலாப்பழம், நுங்கு, திராட்சை உள்ளிட்ட காய்கறிகள், பழங்கள், கிழங்குகள் மற்றும் 3 ஆயிரம் வடை, 3 ஆயிரம் லட்டு போன்றவற்றை அம்பாளுக்கு படைத்து மகா தீபாராதனை நடைபெற்றது.

இவ்விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.




## மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் தெப்பல் உற்சவம்



**செஞ்சி, பிப்.27:**

விழுப்புரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தளமாக உள்ள அங்காளம்மன் கோயிலில் ஆண்டு தோறும் மாசி பெருவிழா நடைபெற்று வருவது வழக்கம். இந்நிலையில் மாசி பெருவிழா கடந்த 15ம்தேதி மகா சிவராத்திரி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. 16 ஆம் தேதிமயான கொள்ளை திருவிழாவும் 19ஆம் தேதி தீமிதி திருவிழாவும் நடைபெற்றது. 7ம் நாள் திருவிழாவான திருத்தேர் வடம் பிடித்தல் 21ந் தேதி மாலை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 23ந் தேதி பூப்பலுக்கு விழா நடைபெற்றது

இதைத் தொடர்ந்து நேற்றிரவு அங்காளம்மனுக்கு தெப்பல் உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதையொட்டி மூலவர் அங்காளம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாரதனை காண்பிக்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட உற்சவர் அங்காளம்மன் தங்க நிற பல்லக்கில் வீதி உலா வந்தார். அக்னி குளத்தில் இருந்து தீர்தவாரி மண்டகப்பாடி ஊர்வலமாக மேளம் தாளம் முழங்க கோவில் குளத்திற்கு கொண்டு வரப்பட்டு உற்சவர் அங்காளம்மன் தெப்பல் உற்சவத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தொடர்ந்து ஒன்பது முறை தெப்பலில் வலம் வந்த உற்சவர் அங்காளம்மனுக்கு சிறப்பு தீபாரதனை நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## விருதுநகர் மாவட்டத்தில் 1,999 வாக்குச்சாவடிகள்: ஆட்சியர் தகவல்

**விருதுநகர், பிப்.27:**

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 1,999 வாக்குச்சாவடிகள் உள்ளதாக மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய் திக்குறிப்பில் கூறியதாவது: மாவட்டத்தில் உள்ள 7 சட்டப்பேர வைத் தொகுதிகளில், 1,200-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் கொண்ட வாக்குச்சாவடி கள் பிரிக்கப்பட்டு புதிய வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்படி, முன்னர் 1,901 ஆக இருந்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை தற் போது 98 அதிகரித்து மொத்தம் 1,999 ஆக உயர்ந்துள்ளது. இதில் 88 வாக்குச்சாவடி கள் ஏற்கனவே செயல்பட்டு வந்த மையங் களிலேயே அமைக்கப்பட்டுள்ளன

## ரத்த அழுத்த மாத்திரைகளுக்கு விடை கொடுக்கும் ஊசி: ஆய்வில் தகவல்

நமது வீட்டில் இருக்கும் பெரியவர்கள் முதல் அலுவலகம் செல்லும் இளைஞர்கள் வரை இன்று பலரும் சந்திக்கும் ஒரு பொதுவான பிரச்சனை ரத்த அழுத்தம் (BP). காலையில் எழுந்தவுடன் காபி குடிக்கிறோமோ இல்லையோ, ரத்த அழுத்தத்திற்கான மாத்திரையை தேடி எடுப்பது பலரது அன்றாட வழக்கமாகிவிட்டது.

ஒரு நாள் மாத்திரையை தவறவிட்டால் என்னவாகுமோ என்ற பயமும், வாழ்நாள் முழுவதும் இந்த மாத்திரைகளை சுமக்க வேண்டுமே என்ற சலிப்பும் பலருக்கு உண்டு. பிஸியான வேலைகளுக்கு இடையே மாத்திரை போடுவதை மறந்துவிடுவது, வெளியூர் செல்லும்போது மாத்திரை அட்டையை எடுக்க தவறுவது என நடைமுறை சிக்கல்கள் ஏராளம். இந்த சூழலில், "தினமும் மாத்திரை போடுவதற்கு பதில், ஆண்டுக்கு இரண்டு முறை மட்டும் ஊசி செலுத்திக்கொண்டால் போதும்" என்கிறது தி லான்செட் ஆய்வு.

தற்போதைய சவாலும் புதிய தீர்வும்: உயர் ரத்த அழுத்தம் என்பது ஒரு 'சைலண்ட் கில்லர்' (SILENT KILLER). இது இதய பாதிப்பு, பக்கவாதம் மற்றும் சிறுநீரக கோளாறுகளை ஏற்படுத்தும் என்பது தெரிந்திருந்தும், பலரால் மாத்திரைகளை தடையின்றி உட்கொள்ள முடிவதில்லை. இந்தியாவில் மட்டும் மூன்றில் ஒருவருக்கு ரத்த அழுத்தம் இருப்பதாக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

ஆனால், இதில் பாதிக்கும் குறைவானவர்களுக்கே தங்களுக்கு பாதிப்பு இருப்பது தெரிவதாக ஆய்வு கூறுகிறது. மேலும்,



முறையான சிகிச்சையில் இருப்பவர்களிலும் மிக குறைந்த சதவீதத்தினரே ரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் என்பதையும் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

இதற்கு காரணம், தினசரி மாத்திரை உட்கொள்வதில் உள்ள நடைமுறை சிரமங்கள். இந்த சூழலில், ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த ஆண்டுக்கு இரண்டு முறை மட்டும் செலுத்தப்படும் நீண்ட கால ஊசி மருந்துகள் (LONG-ACTING INJECTIONS) தற்போது இறுதிக்கட்ட சோதனையில் உள்ளதாக ஆய்வு கூறுகிறது.

பொதுவாக நாம் உட்கொள்ளும் மாத்திரைகள் உடலில் சில மணிநேரங்கள் மட்டுமே தங்கி வேலை செய்யும். அதனால் தினமும் மாத்திரை எடுக்க வேண்டியது அவசியம். ஆனால், இந்த ஊசி மருந்து உடலில் உள்ள 'ரெனின்-ஆஞ்சியோடென்சின்' (RENIN-ANGIOTENSIN SYSTEM) என்ற ஹார்மோன் மண்டலத்தை குறிவைத்து செயல்படுவதாக தெரியவந்துள்ளது. இந்த மண்டலம் தான் நமது ரத்த நாளங்களின் சுருக்கம் மற்றும் நீர்ச்சமநிலையை கட்டுப்படுத்துகிறது. இந்த ஊசியை செலுத்தும்போது, அது ரத்த அழுத்தத்தை உயர்த்தும் காரணிகளை நீண்ட காலத்திற்கு தடுத்து நிறுத்துகிறது எனவும் இதன் மூலம் ஒருமுறை ஊசி போட்டால், பல மாதங்களுக்கு ரத்த அழுத்தம் சீராக பராமரிக்கப்படும் என்கிறது ஆய்வு. யாருக்கெல்லாம் இது வரப்பிரசாதம்? இந்த ஊசி முறை பயன்பாட்டிற்கு வரும்போது, அது பல தரப்பட்ட மக்களுக்கு பெரிய மாற்றத்தை கொடுக்கும். குறிப்பாக, பலவிதமான நோய்களுக்குப் பத்து பதினைந்து மாத்திரைகள் எடுக்கும் முதியவர்களுக்கு, ஒரு மாத்திரை குறைவது வரப்பிரசாதமாகும்.



வேலையின் அவசரத்தில் அல்லது பயணங்களில் மாத்திரை போட மறந்துவிடுபவர்களுக்கு இது பாதுகாப்பானது. கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் ஒவ்வொரு முறையும் மருந்துச் சீட்டுக்காகவோ, மாத்திரை வாங்கவோ அலைவதைத் தவிர்க்கலாம். முழுமையான மாற்றமா? மாத்திரை உட்கொள்ள சிரமப்படுபவர்களுக்கும், அதிகப்படியான இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்களுக்கும் இது ஒரு சிறந்த மாற்றாக அமையும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

# சேமிப்பு சிறார் கதை

ராகவன் திண்ணையில் உட்கார்ந்து வெளியில் தெருவையேப் பார்த்தப்படி இருந்தார், எப்போதும் கலக்கலப்பாக இருப்பவர், கொஞ்சம் இறுக்கமான முகத்தோடுவே இருந்தார், அந்த சமயத்தில்தான் அவரின் மகன் ராஜா எங்கோ வெளியில் போய்விட்டு வந்துக்கொண்டிருந்தான், அவனுக்கு கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கு ஆனால் அவனுக்கு உருப்படியான வேலையும் இல்லை, அப்படியே இருந்தாலும் தொடர்ந்து வேலைக்குப் போக அவன் விரும்புவதுமில்லை, அப்படியே சுத்துறது, கெடச்ச வேலைக்கு போறது, எப்போதாவது வீட்டுக்கு செலவுக்கு காசு தருவான் மற்றப்படி குடும்பம் ராகவனின் பென்சனில்தான் நடக்கிறது, வீட்டு வாசப்படியில் ஏறியவனை பார்த்த ராகவன் அமைதியாக ஆனால் கம்பீரத்தோடு,,,

"ராஜா, இங்கே வாப்பா, உண்டியலை உடைச்சது யாரு,,,?" திடீர் கேள்வியில் அதிர்ந்துப்போனவன், சுதாரித்துக் கொண்டு,,,

"எந்த உண்டியல் அப்பா"

"நம்ம வீட்ல எத்தனை உண்டியல் இருக்கு"

"ஒன்னுதாப்பா"

"அதைதான் யாரு உடைச்சதுன்னு கேட்டேன்", என குரலை உயர்த்தினார்"

"அப்பா, சத்தியமா எனக்கு தெரியாது, நான் உடைக்கல அப்பா"

"டேய், ராஜா அந்த உண்டியல் போன வருசம் வேளாங்கண்ணி திருவிழாவுக்கு போய்ட்டு வரும்போது வாங்கிட்டு வந்தேன், பல கனவுகளோடு காசும் சேர்த்தேன்,சேர்த்து வச்ச காசை நானா செலவுப் பன்னப்போறேன், என் பேத்திக்கு ஏதாவது வாங்கி தரலாமுன்னு இருந்தேன், அதை இப்படி நாசம் பன்னிட்டியே இது சரியாடா"

"அப்பா, கொரோனா சமயத்துல கடைக்கரவங்க, அரிசி,பருப்பு, இப்படி மளிகை சாமானெல்லாம் பதுக்கி வைக்கும்போது, நீங்கதானே எதையும் பதுக்கி வைக்கக் கூடாதுன்னு சொன்னீங்க, அதான் எடுத்து செலவு பன்னிட்டேன்" ராகவன் ஆத்திரத்தோடு கத்தினார்

"டேய் முட்டாள், பதுக்கி வைப்பது பொருளாதாரத்தை சீர்குலைக்கும், சேமிப்பு பொருளாதாரத்தை வளர்க்கும், உண்டியலில் போடும் காசுக்கு பேரு பதுக்குல் இல்லடா சேமிப்பு, பதுக்கல் வேற, சேமிப்பு வேற, இதுக்கூட புரியாமல் ஜடமா இருக்கியேடா" தாத்தா கோபத்தில் கத்துவைக் கண்ட பேத்தி சியாமளா ஓடிவந்து நிலப்படி அருகே நின்னு கவனித்தவள், தாத்தா அருகே வந்து,,,

"என்ன தாத்தா அப்பாவை திட்டுறீங்க"

"அந்த வீணாப்போனவன், என் உண்டியலை உடைச்சி பணத்தை திருடிட்டான்மா, நான் எவ்வளவு கஷ்டப்பட்டு சேமித்தேன் தெரியுமா"

"ஓ... தாத்தா நீங்க சேமிக்கிறீங்களா,,,? நானும் சில்லரை காசெல்லாம் சேமித்து வச்சிருக்கேன், ரொம்ப காசு இருக்கு"

"என்னம்மா சொல்றே, நீ சேமிக்கிறீயா,,, உன்னோட உண்டியலை எடுத்துக்கொண்டு வா பார்க்கலாம்,"

"என் காசு இங்க இல்ல தாத்தா, எங்க ஸ்கூல் மிஸ் சேமிக்கச் சொன்னாங்களா, நான் தினமும் நீங்க, அப்பா, அம்மா, இவங்க கொடுக்குற காசெல்லாம் எங்க மிஸ்க்கிட்டே கொடுப்பேன் தாத்தா, அவங்க தினமும் எல்லார் காசையும் வாங்கிட்டுப் போயி போஸ்ட் ஆபிஸில அவுங்க அவுங்க கணக்குல வரவு வச்சிருவாங்க, நமக்கு படிப்பு முடிஞ்சி வரும்போது எடுத்து தருவாங்க"

"அடா,அடா,அறிவே பாருடா அந்த பச்ச மண்ணு அறிவை, நீயும் இருக்கியே, போ,,, போயி நல்லா கொட்டிக்கிட்டு பாயை விரிச்சி தூங்கு, சியாமளா நீ நல்லா வருவே, இனிமேல் உனக்கு காசு நிறையத் தரேன், சரியா,,,"


"ஓக்கே தாத்தா, எங்க மிஸ்தான் சொன்னாங்க, இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்புன்னு, அதான் சேமிக்கிறேன் தாத்தா"

ராஜா வெட்கித்தலைக் குனிந்து நின்றான், ராகவன் பேத்தியை உச்சி முகர்ந்து, இவளின் வாழ்க்கை எதிர்காலத்தில் பிரகாசமாக இருக்கும் என்ற நம்பிக்கையில், பேத்தியிடம் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்.



**-நாகை ஆசைத்தம்பி**
கோவை

# "வளையாத நாணல்கள்"



காட்டூர் கிராமத்தில் தேர்தல் காற்று வீசத் தொடங்கியது.

முந்தைய தேர்தல்களில் நடந்தது போலவே இந்த முறையும் இரவு நேரங்களில் சில வண்டிகள் வந்து நின்றன. மூடிய கவர்களில் பணம்.

“வாங்கிக்கங்க... மறக்காம நம்ம சின்னத்துல போட்டுடுங்க!” என்ற கெஞ்சல்கள்.

ஆனால், இந்த முறை கிராமம் மாறியிருந்தது.

மரக்கன்றுகளை நட்டுக் கொண்டிருந்த இளைஞன் கார்த்திக், கவரை பார்த்து சிரித்தான். "அண்ணே, எங்களுக்குக் காசு வேண்டாம்.... அதுக்கு பதில் ஊருக்கு ரோடு போடுங்க.... தண்ணீர் தாருங்க.... அது போதும்!” என்றான்.

வீட்டுக்கு வீடு கவர்கள் போனது. ஆனால் எல்லா வீட்டிலும் ஒரே பதில்.

“ஓட்டு எங்களோட உரிமை. அது விலைக்குப் போகாது.”

ஊர்ப்பெரியவர் ராமசாமி, தன் வீட்டின் வாசலில் கவரை தரையில் போட்டார். “நாணல் காற்றுக்கு வளையும்.... இந்தக் கிராமம் நாணல் இல்லை.... வேர் பிடிச்சு நிற்குற ஆலமரம்!" என்றார்.

அடுத்த நாள் காலை, கிராமம் முழுக்க ஒரு காட்சி.

எல்லா வீடுகளிலும் வீசப்பட்ட கவர்களையெல்லாம் ஒன்றாகச் சேகரித்து, பஞ்சாயத்து மண்டபத்தில் மேசையின் மீது அடுக்கினர்.

அதன் மேலே ஒரு பலகை.

“எங்கள் ஓட்டு எங்கள் எதிர்காலம் அதற்கு விலை பேச வேண்டாம்.”

செய்தி ஊடகங்கள் வந்தன. அக்கம்பக்க கிராமங்கள் அதைப் பேசத் தொடங்கின.

“காட்டூர் மாதிரி நாமும் இருக்கலாமே?” என்ற குரல்கள் எழுந்தன.

தேர்தல் நாள் வந்தது. அந்தக் கிராமத்தில் 100% வாக்குப்பதிவு.

முடிவுகள் வெளியானபோது, பணம் வீசிய வேட்பாளர் தோற்றார். வெற்றி பெற்றவர் யார்? என்ற கேள்வி எழுந்தது.

அன்று மாலை பஞ்சாயத்து மண்டபத்தில் சுயேட்சையாக நின்று வெற்றி பெற்ற ராமசாமி சிரித்தார்.

“ஜெயிச்சது நான் இல்லை மக்களே... இந்தக் கிராமத்தோட மனசாட்சிதான் ஜெயிச்சிருக்கு.”


காற்று வீசினால் நாணல்கள் வளையலாம். ஆனால் காட்டூரில், அந்த நாணல்கள் கூட வளையவில்லை.



**-முகில் தினகரன்**
கோயம்புத்தூர்.

# சமையல் டிப்ஸ்

## மொச்சை கொட்டை காரக்குழம்பு



பொதுவாக பயிரில் அதிகப்படியான சத்துக்கள் நிறைந்துள்ளது. அந்த பயிறு வகைகளில் ஒன்றான மொச்சை கொட்டையை வைத்து சுவையான காரக்குழம்பு எப்படி செய்வது என்பதைத் தான் இப்பதிவில் பார்க்கப்போகிறோம். மொச்சை குழம்பு பல பேர் வைத்திருக்க மாட்டீர்கள். கிராமங்களில் தான் இந்த மொச்சை குழம்பு அடிக்கடி செய்வார்கள். ஓகே வாருங்கள் இந்த மொச்சை கொட்டை காரக்குழம்பு சுவையாக செய்வது என்று இப்பதிவில் படித்து தெரிந்து கொள்ளலாம்.

**மொச்சை குழம்பு செய்ய தேவையான பொருட்கள்:**

வெள்ளை மொச்சை- தேவையான அளவு
கத்திரிக்காய் 4
தேங்காய்- சிறிதளவு
வெல்லம்- சிறிதளவு
நல்லெண்ணெய்- தேவையான அளவு
வெந்தயம்- 1/2 ஸ்பூன்
கடுகு- 1/2 ஸ்பூன்
கருவேப்பிலை- 2 கொத்து
பூண்டு- 15 பல்லு
காய்ந்த மிளகாய்- 3
தக்காளி- 2
சின்ன வெங்காயம் 30
புளி- சிறிதளவு (எலுமிச்சை அளவு)
உப்பு- தேவையான அளவு
மஞ்சள் தூள்- 1/2 டீஸ்பூன்
மிளகாய் தூள்- 2 ஸ்பூன்
குழம்பு தூள்- 3 ஸ்பூன்
பெருங்காயத் தூள்- 1/2 டீஸ்பூன்
மசாலா செய்ய தேவையான போட்கள்:
கடலைப்பருப்பு- 1 ஸ்பூன்
மிளகு- 1 ஸ்பூன்
வெந்தயம்- 1/2 ஸ்பூன்
சீரகம்- 1 ஸ்பூன்

முதல் நாள் இறவே மொச்சையை தண்ணீரில் ஊறவைத்து விடுங்கள். மறுநாள் குழம்பு வைப்பதற்கு முன் புளியை ஊறவைத்து கரைத்து கொள்ளுங்கள்.

அதன் பின், ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி எண்ணெய் காய்ந்ததும் அதில் கடுகு, வெந்தயம் சேர்த்து கொள்ளவும். கடுகு, வெந்தயம் பொரிந்ததும் அதனுடன் சின்ன வெங்காயம் சேர்த்து வதக்க வேண்டும். பிறகு அதனுடன் காய்ந்த மிளகாய், பூண்டு சேர்த்து கொள்ளுங்கள். அதன் பின் அடுப்பை குறைவாக வைத்து அதனுடன் தக்காளி மற்றும் கருவேப்பிலை சேர்த்து நன்றாக வதக்கி கொள்ளுங்கள்.

மொச்சை குழம்பு செய்வது எப்படி

இவை அனைத்தும் நன்றாக வதங்கியதும் அதில் ஊறவைத்த மொச்சை மற்றும் நறுக்கி வைத்த கத்திரிக்காய் சேர்த்து வதக்கவும்.

பாகற்காய் குழம்பு கசப்பில்லாமல் இப்படி செய்யுங்க..! யாரும் வேண்டான்னு சொல்ல மாட்டாங்க...!

அடுப்பில் உள்ள பொருட்கள் வதங்கியதும், அதில் புளி கரைசலை சேர்த்து அதனுடன், மஞ்சள் தூள், மிளகாய் தூள், குழம்பு தூள் போட்டு நன்றாக கலந்து விடவும். பிறகு தேவையான அளவு தண்ணீர், உப்பு மற்றும் பெருங்காயத்தூள் சேர்த்து கொதிக்க விடவும்.

பிறகு அதனுடன் சிறிதளவு தேங்காயை அரைத்து சேர்த்து கொள்ளுங்கள்.

இப்போது அதில் ஒரு சிறிய அளவில் வெல்லத்தை சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விடுங்கள்.

பிறகு ஒரு வாணலில் சீரகம், வெந்தயம், மிளகு, கடலைப்பருப்பு சேர்த்து பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொள்ளுங்கள். இதை 5 நிமிடம் கழித்து ஒரு மிக்சி ஜாரில் போட்டு அரைத்துக் கொள்ளுங்கள்.

## அரிசி மாவில் சுவையான ஸ்வீட் செய்வது எப்படி?



அரிசி மாவு ஸ்நாக்ஸ்: ஹலோ ஃப்ரண்ட்ஸ்..! இன்றைய பொதுநலம் பதிவில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடக்கூடிய அரிசி மாவில் சுவையான ஸ்வீட் வீட்டிலே எப்படி செய்யலாம்னு பார்க்கலாம் வாங்க..!

வையான பொருட்கள்:
அரிசி மாவு 1 கப்
பால் 1 கப்
சர்க்கரை 1/2 கப்
தேங்காய் துருவல் 1/2 கப்
ஏலக்காய் தூள் சிறிதளவு

**அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 1:**

முதலில் அரிசி மாவு 1 கப் எடுத்துக்கொள்ளவும். அடுத்து இந்த ரெசிபி ரெடி பண்ண கடாயில் 1 கப் பால் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பால் சுவை பிடிக்காதவர்கள் தண்ணீர் கூட சேர்த்துக்கொள்ளலாம்.

இந்த பால் மிதமான அளவிற்கு சூடு வந்தால் போதும். அதன்பிறகு பாலுடன் சர்க்கரை 1/2 கப் சேர்த்து மிதமான சூட்டில் வைத்து நன்றாக கிளற வேண்டும்.

**அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 2:**

Rice Flour Sweet: அடுத்து தேங்காய் துருவல் 1/2 கப், பாலுடன் சேர்த்து நன்றாக கிளறிக்கொள்ள வேண்டும்.

அடுத்து வாசனைக்காக சிறிதளவு ஏலக்காய் தூள் சேர்த்துக்கொள்ளுங்கள்.

ஏலக்காய் தூள் சேர்த்தபிறகு இதனையும் நன்றாக கிளற வேண்டும்.

**அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 3:**

அரிசி மாவு ரெசிபி: அடுத்து அந்த பாலில் எடுத்துவைத்துள்ள அரிசி மாவை இதனுடன் சேர்க்க வேண்டும். மிதமான சூட்டில் வைத்தே இதை நன்றாக கிளறிவிட வேண்டும்.

அடுத்து நன்றாக கிளறிய பிறகு அடுப்பை நிறுத்தி கொள்ளலாம். 1 மணி நேரம் இதை மூடிவைக்க வேண்டும். நன்றாக ஆறியபின் தனியாக ஒரு பவுலில் மாற்றிக்கொள்ளவும்.

அடுத்து இந்த மாவை சப்பாத்தி மாவின் பதம் போல் நன்றாக பிசைந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 4:**

அரிசி மாவு ரெசிபி: அடுத்து சப்பாத்தி மாவின் பதம் போல் வந்த பிறகு உருண்டையாக உருட்டி அதை தட்டி கொள்ளவும்.

மாவை உருண்டை வடிவில் தட்டிய பிறகு பாத்திரத்தின் மூடி அல்லது குக்கி கட்டரால் கட் செய்துகொள்ளவும்.

எல்லா மாவையும் இதே போல் செய்து தனியாக ஒரு தட்டில் எடுத்துவைத்து கொள்ளவும்.

**அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 5:**

அரிசி மாவு ஸ்நாக்ஸ்: அடுத்து இந்த அரிசி மாவில் நட்ஸ் வகைகளையும் சிறிதாக நறுக்கி சேர்த்து செய்தால் இன்னும் சுவை கிடைக்கும்.

இப்போது தனியாக தட்டில் எடுத்து வைத்ததை வேக வைக்க வேண்டும்.

## ஆந்திரா ஸ்டைல் பூண்டு பருப்பு பொடி செய்வது எப்படி..?



நம் அனைவருக்குமே ஆந்திரா ஸ்டைல் உணவுகள் அனைத்தும் பிடிக்கும். அதிலும் குறிப்பாக ஆந்திரா என்றால் திருப்பதி லட்டும், பருப்பு பொடி தான் நம் நினைவிற்கு வரும். அந்த அளவிற்கு மிகவும் பிரபலமானது ஆந்திரா உணவு வகைகள். பருப்பு பொடி செய்து வைத்துக்கொண்டு சூடான சாதத்தில் போட்டு நெய் ஊற்றி சாப்பிட்டால் அவ்வளவு அருமையாக இருக்கும்.

இதற்காகவே, பலபேர் வீட்டில் பருப்பு பொடி தீராமல் பார்த்துக்கொள்வார்கள். அந்த வகையில் நீங்கள் வீட்டிலேயே ஆந்திர ஸ்டைலில் பூண்டு பருப்பு பொடி செய்ய விரும்பினால், இப்பதிவு உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இப்பதிவில் ஆந்திரா ஸ்டைல் பூண்டு பருப்பு பொடி செய்வது எப்படி.? என்பதை விவரித்துள்ளோம்.

# மாசி, மிருகசீரிஷம் திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்திரம்!

"ஸ்ரீமத் காஞ்சிமுநிம் வந்தே கமலாபதி நந்தனம்| வரதாங்க்ரி ஸதாஸங்கி ரஸாயன பராயணம்||" -தனியன் (எம்பெருமானார்) – ஸ்ரீவரதராஜப் பெருமாளின் திருவடித் தாமரைகளை ஸேவிக்கும் ரஸமான அனுபவத்தில், ஒரு கணம் கூட விடாமல் பராயணராயிருப்பவரும், ஸ்ரீயப்பதியான எம்பெருமானுடைய திருநாமத்தை கொண்ட திருத்தகப்பனராக பெற்றிருப்பவரும், காஞ்சிபுரத்தில் முனிவராக வாழும் திருக்கச்சி நம்பிகளுக்கு நமஸ்காரம்!

பூவிருந்தவல்லியில் (பூந்தமல்லி) சபரி யினுடைய அம்சமாக அவதரித்தவர்! இவருடைய பிற திருநாமங்கள் பார்கவப்ரியர், கஜேந்திர தாஸர், காஞ்சி முனி, காஞ்சி பூர்ணர்!

பொதுவாக ஆசார்யர் தான் சிஷ்யருக்கு ஸ்ரீவைஷ்ணவ மார்க்கத்தையும், எம்பெருமானையும் புருஷாகாரம் செய்விப்பர்! ஆனால் திருக்கச்சி நம்பிகளுக்கு தேவப்பெருமாளே கனவில் தோன்றி தமக்கு கைங்கர்யம் செய்யுமாறு நியமித்தார்!

கனவில் வந்தவர் யாரென்று தெரியாததால், தேவப்பெருமாளிடமே, தேவரீர் திருநாமம் என்ன? திவ்யதேசம் யாது? என்று வினவ, பெருமாளும் உலகேத்தும் ஆழியான் அத்தியூரான் காணும் நாம்; காமருபூங்கச்சி நகர் காணும் நம்மூர் என, நம்பி மீண்டும், உம்மூருக்கு வழியறியேன் என்ன, இங்கு நின்று நம்மூரைக் குறித்துப் புறப்படக்கடவீர், உமக்கு எவ்வழியில் செங்கழுநீர் புஷ்பம் சிந்திக் கிடக்கிறதோ, அவ்வழியே வந்தால், நம்மூரைக் காணலாகும் என்றருளினார்! நம்பியும் அவ்வாறே காஞ்சி சென்று, பேரருளாளனை கைங்கர்யம் வேண்டி பிரார்த்திக்க அவர் நியமனப்படி திருஆலவட்டம் (விசிறி) வீசும் கைங்கர்யம் செய்து வந்தார்! திருக்கச்சி நம்பிகளுக்கு ஆளவந்தார் சூட்டிய நாமம் பேரருளாள தாஸர்! சூட்டிய திருநாமத்திற்கேற்ப பேரருளாளனுக்கு தாஸனாய் இருந்து, தமக்கு புழுங்கும் போதெல்லாம் வரதனுக்கு விசிறிவிட்டு, தமக்கு பசிக்கும் போதெல்லாம் வரதனுக்கு அமுது செய்வித்து கைங்கர்ய பரராய் இருந்தார்! வரதனும் தம் அர்ச்சை நிலையைக் கடந்து இவரோடு அனுவரதமும் பேசிக்கொண்டு இருப்பாராம்!

நம்பியை ஆசார்யராக அபிமானித்த ஒரு பிராமணரை அவரது குடும்பம் ஜாதிபிரதிஷ்டை செய்ய, அவர் நம்பியைப் பிரிய மனமின்றி அவர் முன்னமே பரமபதம் எய்தினார்!

அந்த பிராமணர் மோக்ஷத்திற்கு போயிருப்பாரோ? நம்பிக்கு சந்தேகம்! வரதனிடத்தில் அவர்பற்றி கேட்கின்றார்.



அவருக்கு மோக்ஷம் நிச்சயம்- ஏனெனில் அவன் உம்மை ஆசார்யனாகப் பற்றினான்! - வரதன் எனக்கும் மோக்ஷம் உண்டா, ப்ரபோ!? -நம்பி உமக்கு கிடையாது! நம்பி அதிர்கின்றார்! "இவ்வளவு நாள் நீர் அர்ச்சை நிலையைக் கடந்து என்னுடன் பேசியதெல்லாம்?"

"நீர் விசிறினீர் - நான் பேசினேன்" இரண்டும் சாம்யமாயிற்று!

ப்ரபோ! என்னதான் கதியெனக்கு? நம்பி விம்முகின்றார்.

"நல்லதொரு ஆசார்யனை அடைந்து, என்னிடத்தே வாரும்" என்று வரதன் அனுப்பிவிட்டார்!

பகவானுடனேயே பேசியவரை எவர் தாம் சீடராக ஏற்பர்? நம்பி அலைகின்றார்.

கடைசியில் திருக்கோஷ்டியூர் நம்பியிடத்து, மாறுவேடத்தில் மாடு மேய்ப்பவனாக கைங்கர்யம் செய்கின்றார்! ஒரு கட்டத்தில் திருக்கோஷ்டியூர் நம்பிகளால் நம்பையல் என்று அபிமானிக்கப்படுகிறார்! பிறகு வரதனால் அங்கீகரிக்கப்பட்டு, வைகுந்தம் எய்தினார்! ஸ்ரீராமாநுஜரை ஆளவந்தாருக்கு அடையாளம் காட்டியவர் திருக்கச்சி நம்பிகளே! அப்போதுதான் ஆளவந்தார் ராமாநுஜரை "ஆம், முதல்வன்!" என்று கொண்டாடினார்!

யாதவப்பிரகாசரிடம் பாடம் கேட்டு வந்த இராமாநுஜரை திருத்திப்பணி கொண்டு, தேவப்பெருமாளிடம் "ஆறு வார்த்தை" பெற்றருளி, வரதனே அவரை "யதிராஜர்" ஆக்கி, பின்பு அவர் ஸ்ரீரங்கம் எழுந்தருள்வதற்கான எல்லா ஆயத்தங்களை செய்தவர் திருக்கச்சி நம்பிகளே!

திருக்கச்சி நம்பிகள் அருளிச்செய்த ஒரே கிரந்தம் "தேவராஜ அஷ்டகம்" - எட்டு ஸ்லோகங்களைக் கொண்டது!!

- Sampath

# தினம் ஒரு தலைவர்கள் ஆர்.உமாநாத் வரலாறு

ஆர். உமாநாத் என்று பரவலாக அறியப்படும் இராம்நாத் உமாநாத் செனாய் (21 திசம்பர் 1921 – 21 மே 2014) மார்க்சிய பொதுவுடமைக் கட்சியின் ஆட்சிக்குழுவில் (பொலிட்பீரோ) 1998 முதல் அங்கம் வகித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பொதுவுடமை அரசியல்வாதி ஆவார். தமிழ்நாடு மாநிலச் செயலாளராகவும் சி.ஐ.டி. யூவின் தலைவராகவும் விளங்கியவர்.

### பிறப்பு, ஆரம்ப வாழ்க்கை

1921ஆம் ஆண்டு கேரளத்தின் காசர்கோட்டில் இராம்நாத் ஷெனாய், நேத்ராவதி தம்பதியினருக்கு கடைசி மகனாகப் பிறந்த இவர் தமது மாணவப் பருவத்தில் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பின்போது, சுப்பிரமணிய சர்மாவின் அறிமுகக் கடிதத்துடன் பல்கலைக்கழகத்தில் இருந்த பொதுவுடைமைக் குழுவில் சேர்ந்தார்.

### அரசியல் வாழ்க்கை

பொதுவுடைமை இயக்கத்தில் கட்சி கேட்டுக் கொண்டதன் படி, கல்லூரிப் படிப்பைத் துறந்து, சென்னையில் உள்ள தலைமறைவு மையத்திலிருந்து மாநிலம் முழுவதும் ரகசியமாகத் தகவல்களைக் கொண்டு சேர்க்கும் கூரியர் பணியை ஏற்றுக் கொண்டு, முழுநேர ஊழியராகக் கட்சிப்பணியில் ஈடுபட்டார். 1940ல் சென்னை சதி வழக்கில் பி. ராமமூர்த்தியுடன் கைதுசெய்யப்பட்ட அவர் மூன்று ஆண்டுகளை சிறையில் கழித்தார். அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஒட்டுமொத்தமாக ஒன்பதரை ஆண்டுகளை சிறையில் கழித்திருக்கும் அவர், 7 ஆண்டுகள் தலைமறைவாகவும் இருந்திருக்கிறார் . இந்தியா விடுதலை பெற்ற பிறகு 1949ல் ரயில்வே தொழிலாளர் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்.1951 ஆம் ஆண்டு கட்சியின் மீதிருந்த தடை நீக்கப்பட்டபோது திருச்சி சதி வழக்கில் தண்டனை பெற்றிருந்ததால் அவர் விடுவிக்கப்படவில்லை. 1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள்தான் அவர் விடுவிக்கப்பட்டார். நெருக்கடி நிலை காலகட்டத்திலும் பல அடக்குமுறைகளைச் சந்தித்துள்ளார்.



தொழிற்சங்கப் பணிகள் 1970ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற ஸ்தாபன மாநாட்டில் அகில இந்திய நிர்வாகியாகவும், முதல் மாநாட்டிலிருந்து தமிழ் மாநில பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு 1993ம் ஆண்டு வரை அப்பொறுப்பில் இருந்தார் .ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சட்ட சலுகைகளையும், உரிமைகளையும் பெறுவதற்கு பி.ராமமூர்த்தி மற்றும் கே.ரமணி இவர்களோடு இணைந்து வெற்றிகரமான வேலை நிறுத்தங்களை நடத்தியவர் . டால்மியாபுரம் சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தின் போது பி. ராமச்சந்திரன் பத்து நாள் உண்ணாவிரதம் இருந்தார்.அதைத் தொடர்ந்து உமாநாத் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டபோது அண்ணா அரசாங்கம் தலையிட்டு பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினராக

1962ல் புதுக்கோட்டை மக்களவைத் தொகுதியில் நடந்த தேர்தலில் உமாநாத்தை பொதுவுடைமைக் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார் . காங்கிரஸ் கட்சி சார்பில் பிரபல பஞ்சாலை முதலாளி நின்றார். 30,000 வாக்கு வித்தியாசத்தில் உமாநாத் வெற்றிபெற்றார். 1967ல் பிரபல தோல் ஆலை முதலாளி நாகப்ப செட்டியாரைக் காங்கிரஸ் நிறுத்தியது. இருப்பினும் மீண்டும் உமாநாத் வெற்றி பெற்றார்.

### தனி வாழ்க்கை

1952 ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று பாப்பா உமாநாத்தை திராவிட இயக்கத் தலைவர் ஈ. வெ. இராமசாமி தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்தார். இந்தத் தம்பதியினரின் இலட்சுமி, வாசுகி, நிர்மலா என்ற மூன்று மகள்களில் மருத்துவரான லட்சுமி ஏற்கனவே இறந்துவிட்டார். பாப்பா உமாநாத் 2010ஆம் ஆண்டில் காலமானார்.

### இறப்பு

உடல் நலக் குறைவால் சில காலம் அவதிப்பட்டு வந்த உமாநாத் திருச்சியில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார். அவரது மரணம் மருத்துவர்களால் உறுதிசெய்யப்பட்டவுடன், அவரது விருப்பத்தின்படி, அவரது கண்கள் தானம் செய்யப்பட்டன. திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை மருத்துவர்கள் அவரது கண்களைப் பெற்றுச்சென்றனர்.

# 'ஜாலியா இருந்த ஒருத்தன்' படத்தின் கதாநாயகி இவரா?



கடந்த 2009-ம் ஆண்டு ராஜேஷ் இயக்கத்தில் ஜீவா நடிப்பில் வெளியான 'சிவா மனசுல சக்தி' திரைப்படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து இக்கூட்டணி மீண்டும் இணையுமா? என்று ரசிகர்கள் காத்துக்கொண்டு இருந்தனர்.

இதனிடையே, ராஜேஷ் இயக்கத்தில் ஜீவா புதிய படம் ஒன்றில் நடித்துள்ளார். அப்படத்திற்கு 'ஜாலியா இருந்த ஒருத்தன்' என பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். Malik Streams Corporation தயாரிக்கும் இப்படத்தை கோடையில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி இப்படம் குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், 'ஜாலியா இருந்த ஒருத்தன்' படத்தின் கதாநாயகியாக இவானா நடித்துள்ளார். இவானாவின் பிறந்தநாளை படக்குழுவினர் கொண்டாடிய நிலையில் புகைப்படத்தை பகிர்ந்து படக்குழு அறிவித்துள்ளது.

# 'தி கேரளா ஸ்டோரி 2' ரிலீசுக்கு இடைக்காலத் தடை கேரளா ஐகோர்ட் அதிரடி

வெளிநாட்டு விநியோக உரிமைகள் ஏற்கனவே விற்றுவிட்டதாகவும் நீதிபதியிடம் தெரிவித்தார்.

மத தீவிரமயமாக்கலை சித்தரிப்பது போன்று வெளியான 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் கேரளா மட்டுமின்றி நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த படத்திற்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டன. இந்த நிலையில் அதன் தொடர்ச்சியாக 'தி கேரளா ஸ்டோரி 2' தயாரிக்கப்பட்டு நாளை (வெள்ளிக்கிழமை) வெளியாக உள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தை தடை செய்ய கேட்டு கேரள ஐகோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த படத்தில் கேரளாவை வகுப்பு வாத கண்ணோட்டத்தில் காட்டுவதாகவும், இது சட்டம், ஒழுங்கை பாதிக்ககூடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த மனுக்கள் மீதான விசாரணை இன்னும் நடைபெறாத நிலையில் படம் நாளை வெளியாகுமா? என பரபரப்பு ஏற்பட்டு வந்தது.

இது தொடர்பாக கேரள ஐகோர்ட்டில் நேற்று மூத்த வக்கீல் ஸ்ரீகுமார் ஆஜராகி, படம் வெள்ளிக்கிழமை திரையரங்குகளில் வெளியாகும் என்றும், வெளிநாட்டு விநியோக உரிமைகள் ஏற்கனவே விற்றுவிட்டதாகவும் நீதிபதியிடம் தெரிவித்தார்.

இதனை கேட்ட நீதிபதி, அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்பதாகவும், இந்த வாதங்கள் முடியும் வரை வெளியீட்டை ஒத்திவைக்கலாம் என்றும் நீதிபதி குறிப்பிட்டார். அப்போது வக்கீல் ஸ்ரீகுமார் 2 நிமிட டீசரை மட்டும் வைத்து நிவாரணங்களை வழங்க முடியாது என்று வாதிட்டார்.

படம் அனைத்து சட்டத் தேவைகளையும் பூர்த்தி செய்து உள்ளது என்றும், மத்திய திரைப்பட வாரியம் அதைச் சான்றளித்தவுடன், ஐகோர்ட்டு அதன் சொந்தக் கருத்தை மாற்ற முடியாது என்றும் அவர் வாதிட்டார். டீசர் வெளியான 16 நாட்களுக்குப் பிறகு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், மனுதாரர்கள் "கேரள மக்களின் கூட்டு கண்ணியத்தை" பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் படத்திற்கு எதிரான நிலுவையில் உள்ள மனுக்கள் இறுதியாக விசாரிக்கப்பட்டு முடிவு செய்யும் வரை படத்தை வெளியிட வேண்டாம் என்று தயாரிப்பாளர்களுக்கு கேரள ஐகோர்ட்டு உத்தரவிட்டது.







# விஜய்க்கு சவால் விட்ட பிக்பாஸ் ஜூலிக்கு நடிகை சனம் ஷெட்டி பதிலடி

விஜய் ரசிகர்களின் விமர்சனத்திற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஜூலி வீடியோ ஒன்றை வெளியிட்டார். வேலூர் மாவட்டத்தில் தவெக தலைவர் விஜய் நேற்று முன்தினம் தனது கட்சி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தை நடத்தினார்.

அந்த கூட்டத்தில் விஜய் கூறிய குட்டிக்கதையை விமர்சித்து பிக்பாஸ் ஜூலி வீடியோ வெளியிட்டிருந்தார். விஜயை விமர்சித்து வீடியோ வெளியிட்டதால், அவரது ரசிகர்கள் பலரும் ஜூலியை ஆபாச வார்த்தைகளில் விமர்சித்தனர்.

இந்நிலையில் விஜய் ரசிகர்களின் விமர்சனத்திற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஜூலி புது வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். கரூர் கூட்டநெரிசல் சம்பவத்திற்கு பின்னர் முதலமைச்சர் மு.க ஸ்டாலினை நோக்கி விஜய் பேசியதைப் போலவே, ஸ்லோ மாடுலேஷனில் பேசி ஜூலி வீடியோ வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ தற்போது இணையதளத்தில் வேகமாக பரவி வருகிறது.

அந்த வீடியோவில், "விஜய் அண்ணா உங்களுக்கு என்னை பழி வாங்கணும்னா நான் என் வீட்டில் இருப்பேன், இல்லைனா ஆபீஸ்ல இருப்பேன். என்னை என்ன வேணாலும் பண்ணுங்க. ஆனால் அவங்களை விட்டுவிடுங்க. நீங்க பனையூரை விட்டு வெளியே வரமாட்டீங்கல்ல?. நான் இன்னும் உயிரோட தான் இருக்கிறேன், நான் வேண்டுமானால் பனையூர் வருகிறேன்" என்று கிண்டலாக பேசியுள்ளார்.



இந்நிலையில், விஜய்க்கு சவால் விட்ட பிக்பாஸ் ஜூலிக்கு நடிகை சனம் ஷெட்டி பதிலடி கொடுத்து வீடியோ வெளியிட்டுள்ளார். அந்த வீடியோவில், "ஒவ்வொரு முறையும் விஜய் பேசினால் என்ன ஒரு பயம் ஏற்படுகிறது. விஜய் இப்படி பேசுகிறார். அவரின் ரசிகர்கள் இப்படி செய்வார்கள். இதனால உயிர்கள் போயிரும்ன்னு நடக்காத ஒன்றை இவர்களே சீன்களை உருவாக்கி மக்களை தூண்டி விட்டு ஒரு அஜென்டா செட் செய்து இப்படி பண்ணுவது நியாயமா?

ஜூலி உங்க மேல இருக்கும் அக்கறையில் ஒரு விஷயம் சொல்றேன் என கூறி தன்னுடைய டிசர்ட்டில் இடம் பெற்றிருந்த "Be Yourself" என்ற வார்த்தையை காட்டினார்.

யாரோ எப்பவோ பிக்பாஸில் போய் ட்ரெண்ட் செட் செய்தார்கள். நாமும் அப்படியே செய்யலாம் என அவர்கள் பண்ணியதை நீங்கள் பண்ணினால் இதோ இப்படித்தான் நடக்கும். அப்படி விஜய் என்ன சொல்லி விட்டார். குட்டி கதை கூறுகிறார். தமிழ்நாடு அரசியல் அடங்காத ஒரு காளை மாடு மாதிரி. அனுபவம் இல்லாத ஒரு புது கட்சியாக நாங்க வந்திருக்கிறோம். அனுபவத்தை பார்க்க வேண்டாம். நோக்கத்தைப் பாருங்கள் என பேசினார். மக்கள் பிரச்னை என்ன என்பது எங்களுக்கு புரியும். உங்களுக்காக நாங்க நிறைய செய்வோம். நம்பி ஓட்டு போடுங்க என்று தானே கூறுகிறார். இதில் தவறாக புரிந்து கொள்வதற்கான இடமே இல்லையே.உண்மையிலே விஜய் பேச்சைக் கேட்டு சின்ன பசங்க தப்பு பண்ணி விடக்கூடாதுன்னு அக்கறையில் பேசுகிறீர்கள் என பார்த்தால் அதுவும் இல்லை. முதல் வீடியோ விஜயை தாக்கியும் இரண்டாவது வீடியோ தனி மனித தாக்குதல் என்பதும் தெளிவாக தெரிகிறது. சட்டப்படி தனி மனித தாக்குதல் என்பது தவறு. அது உங்களுக்கு நடந்தாலும் நான் கண்டிப்பேன்" என்று சனம் ஷெட்டி பேசியுள்ளார்.




நடிகை பிரிகிடா சகா வெப் சீரிஸில் டீச்சர் ஆக நடித்து பிரபலம் ஆகி அதன் பின் படங்களில் நடிக்க தொடங்கியவர். தற்போது வளர்ந்து வரும் நடிகையாக தமிழ் சினிமாவில் இருந்து வருகிறார்.

பிரிகிடா சகா ஆரம்பகட்டத்தில் ஹோம்லியாக மட்டுமே நடித்தார். இன்ஸ்டாவில் அவர் வெளியிடும் போட்டோக்களும் ஹோம்லியாகவே இருக்கும்.

தற்போது அவரும் கிளாமர் பக்கம் சென்றுவிட்டார். கிளாமர் ஆகவும் இன்ஸ்டாவில் போட்டோக்கள் வெளியிட தொடங்கி இருக்கிறார்.

இப்போது அவர் கோட் சூட்டில் ட்ரெண்டியாக போட்டோஷூட் எடுத்திருக்கிறார். இதோ பாருங்க.



# சம்பாதிக்கும் பணத்தை என்ன செய்யலாம்? தமன்னா தரும் 'டிப்ஸ்'

நகை விற்பனையகம் தொடங்கி தொழில் அதிபராகவும் கலக்க தொடங்கி இருக்கிறார்.

சரியாக முதலீடு செய்து பல மடங்கு பெருக்குவது எப்படி? என யோசித்து பார்க்க வேண்டும்.

வெள்ளாவி வச்சு வெளுத்த மேனி கொண்ட நடிகையான தமன்னா, இந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக திகழ்கிறார். தற்போது நகை விற்பனையகம் தொடங்கி தொழில் அதிபராகவும் கலக்க தொடங்கி இருக்கிறார். இதற்கிடையில் சினிமாவில் சம்பாதிக்கும் பணத்தை என்ன செய்யலாம்? என்பது குறித்து 'டிப்ஸ்'களை நடிகர்- நடிகைகளுக்கு அறிவுரையாக வழங்கியுள்ளார்.

அவர் கூறுகையில், "சினிமா பிரபலங்கள் என்னதான் கோடிகளில் சம்பாதித்தாலும், அதை சரியாக முதலீடு செய்து பல மடங்கு பெருக்குவது எப்படி? என யோசித்து பார்க்க வேண்டும்.

இல்லை என்றால் இறுதியில் எதுவுமே இல்லாமல் போய்விடும். எனவே சரியான முதலீடு தான் நம்மை காப்பாற்றும்" என்று அறிவுறுத்தியுள்ளார்.

## ஜமா புகழ் பாரி இளவழகன் இயக்கி நடித்துள்ள புதிய படத்தின் அப்டேட்



ஜமா புகழ் பாரி இளவழகன் - NEEK படத்தில் நடித்த ரம்யா ரங்கநாதன் இணைந்து நடிக்கும் பெயரிடப்படாத புதிய படத்தின் படப்பிடிப்பு நிறைவு பெற்றது. பாரி இளவழகன் இப்படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி கதாநாயகனாகவும் நடித்துள்ளார்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு முக்கிய வேடத்தில் நடிகை ரோஜா நடித்துள்ளார். இந்த படத்தை வரும் கோடையில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. 'குட் நைட்', 'டூரிஸ்ட் ஃபேமிலி' ஆகிய வெற்றி படங்களை தயாரித்திருந்த மில்லியன் டாலர் ஸ்டூடியோஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது.

இந்த நிலையில், பாரி இளவழகன் இயக்கி நடிக்கும் புதிய படத்திற்கு 'அன்பே டயானா' என பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இசையமைப்பாளர் அனிருத் வெளியிட்டு படக்குழுவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

விரைவில் இப்படத்தின் அடுத்தடுத்த அப்டேட்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டகத்தி, எதிர்நீச்சல், முண்டாசுப்பட்டி தொடங்கி தமிழ் சினிமாவில் ஏராளமான படங்களில் நடித்தவர் நந்திதா ஸ்வேதா. தற்போது அவர் தமிழ் சினிமாவில் அவர் நடிக்கும் படங்களும் குறைந்துவிட்டது.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த filmfare விருது விழாவில் நந்திதா கலந்துகொண்டிருக்கிறார். அங்கு அவர் தாராள கவர்ச்சி உடையில் தான் சென்றிருக்கிறார்.

ஹாட் உடையில் இருக்கும் ஸ்டில்களை நீங்களே பாருங்க.



## வெளியானது 'ஓ பட்டர்பிளை' படத்தின் டிரெய்லர்



ஆண்ட்ஹில் சினிமா மற்றும் பாலம்பூர் டாக்கீஸ் இணைந்து தயாரித்துள்ள படம் 'ஓ பட்டர்பிளை'. விஜய் ரங்கநாதன் எழுதி இயக்கி உள்ள இப்படத்தில் நிவேதிதா சதீஷ், சிபி, நாசர், லட்சுமி பிரியா, சந்திர மௌலி, கீதா கைலாசம் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கணவன், மனைவிக்குள்ளான காதல் மற்றும் திகில் கலந்த கதைக்களத்தில் உருவாகி உள்ள இப்படத்திற்கு வைசாக் சோமநாத் இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் டீசர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது.

மேலும், 'ஓ பட்டர்பிளை' படம் வருகிற 6-ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என போஸ்டர் வெளியிட்டு படக்குழு அறிவித்தது.

இந்த நிலையில், 'ஓ பட்டர்பிளை' படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. 2.28 நிமிடங்கள் கொண்ட டிரெய்லரில் தம்பதிக்குள் ஏற்படும் பிரச்சனை, இதனிடையே, அவர்களுக்கிடையே வரும் கதாநாயகியின் முன்னாள் காதலனால் ஏற்படும் பிரச்சனை அதனால் நடைபெறும் கொலை என முடிவடைகிறது. இந்த டிரெய்லர் ரசிகர்களின் கவனத்தை பெற்றுள்ளது.

## யம்மா கஜினி..!- காதல் ரீசெட் ரிபீட் டிரெயிலர் ரிலீஸ்




மாலி மான்வி மூவி மேக்கர்ஸ், D Studios, சன்னி டென்வி (Denvi Productions) தயாரிப்பில், பிரபா பிரேம்குமார் இணை தயாரிப்பில், விஜய் இயக்கத்தில் உருவாகியுள்ள 'காதல் ரீசெட் ரிபீட்' திரைப்படத்தின் டீசர் வெளியானது.

முன்னணி இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் ஏற்கனவே வெளியான பாடல்கள் பெரும் வரவேற்பை பெற்ற நிலையில், புதுமையான காதல் கதையை சொல்லும் இந்தப் படத்தின் டீசர், சமூக வலைத்தளங்களில் வெளியான சில மணி நேரங்களிலேயே ரசிகர்களிடையே கவனத்தை ஈர்த்தது.

இந்தப் படத்தில் மதும்கேஷ், ஜியா சங்கர் ஜோடியோடு மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திரமான அர்ஜுன் அசோகன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவர்களோடு எம்.எஸ். பாஸ்கர், ஜெயபிரகாஷ், விஜி சந்திரசேகர் உள்ளிட்ட பலர் இணைந்து நடித்துள்ளனர்.

ஒளிப்பதிவாளர் அரவிந்த் கிருஷ்ணா காட்சிகளுக்கு அழகிய காட்சித் தன்மையை வழங்கியிருக்கிறார், ஆண்டனி படத்தொகுப்பை மேற்கொண்டிருக்க, கலை இயக்கத்தை சரவணன் வசந்த், சண்டை இயக்கத்தை மனோகர் வர்மா, உடை வடிவமைப்பை ருச்சி முனோத் கவனித்துள்ளனர். மார்ச் 6ஆம் தேதி 'காதல் ரீசெட் ரிபீட்' திரைப்படம் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், காதல் ரீசெட் ரிபீட் படத்தின் டிரெயிலர் வெளியாகியுள்ளது.

## என் அழகிற்கு காரணம் இவர்கள் தான் அஞ்சு குரியன்





'நேரம்', 'சென்னை டூ சிங்கப்பூர்', 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஓஹோ எந்தன் பேபி', 'அதர்ஸ்' போன்ற படங்களில் நடித்த அஞ்சு குரியன், மலையாளம் மற்றும் தெலுங்கு மொழிகளிலும் முன்னணி நடிகையாக திகழ்கிறார்.

சமீபகாலமாக பட விழாக்களில் கவர்ச்சி உடைகளில் தரிசனம் தந்தும் பார்ப்போர் கண்களை கவர்ந்தும் வருகிறார். இதுதவிர சமூக வலைதளங்களில் கவர்ச்சி படங்களை வெளியிட்டு ரசிகர்களை குஷிப்படுத்தியும் வருகிறார்.


அவர் கூறுகையில், "அழகை ரசிப்பதில் என்றுமே தவறு கிடையாது. எல்லை மீறாத வரை இங்கு எதுவுமே ஏற்புடையது தான். எனக்காக ரசிகர்கள் தரும் அன்பும், ஆதரவும் என்னை எப்போதுமே ஆனந்தமாய் வைத்திருக்கிறது. ரசிகர்களின் அன்புதான் என் அழகுக்கு காரணம் என்று சொல்வேன்", என்கிறார்.

## அதிரடி ஆக்ஷனில் மிரட்டும் ஷர்வா... போகி ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு

'சார்மிங் ஸ்டார்' ஷர்வா முதன்முறையாக அதிரடி ஆக்சன் இயக்குநர் சம்பத் நந்தி இயக்கத்தில் 'போகி' எனும் பிரம்மாண்டமான பான் இந்திய திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த திரைப்படத்தை ஸ்ரீ சத்ய சாய் ஆர்ட்ஸ் நிறுவனம் சார்பில் கே.கே. ராதா மோகன் தயாரிக்கிறார். மேலும் இதனை லட்சுமி ராதா மோகன் வழங்குகிறார். ஷர்வாவின் திரையுலக பயணத்தில் மிக பிரம்மாண்டமான படைப்பாக இந்த திரைப்படம் தயாராகி வருகிறது. இதன் ஃபர்ஸ்ட் லுக்கை தயாரிப்பாளர்கள் இன்று வெளியிட்டுள்ளனர்.

இதில் ஷர்வா முரட்டுத்தனமான மற்றும் மூர்க்கத்தனமான தோற்றத்தில் தோன்றுகிறார். இந்த போஸ்டர் கடுமையான மற்றும் நெருக்கடியான காட்சியை பிரதிபலிக்கிறது. அத்துடன் வெகுஜன மக்களை கவரும் அவதாரமாகவும் தோன்றுகிறது. அவரது அடர்த்தியான ஒழுங்கற்ற தாடி, மீசை, சுருள் முடி.. ஆகியவை அவருக்குள் ஒரு தீவிரமான போர்க்குணம் இருப்பதை காட்சிப்படுத்துகிறது.

ஷர்வா 'போகி' படத்திற்காக ஒரு தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அவரது கதாபாத்திரத்தின் தீவிரத்தை முழுமையாக வெளிப்படுத்தும் வகையில் ஒரு துணிச்சலான தோற்றத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இதற்கு முன் பார்த்திராத நடிகரின் மற்றொரு பக்கத்தையும் இது காட்டுகிறது. அத்துடன் போஸ்டரில் இடம் பிடித்துள்ள ஒவ்வொரு அம்சமும் ஒரு விசயத்தை குறிக்கிறது. அது ஷர்வா முழுமையாக ஒரு மிருகத்தனமான முயற்சியில் அடியெடுத்து வைக்கிறார் என்பதை குறிக்கிறது.




இந்தப் படக்குழு தற்போது ஐதராபாத்தில் மிகப்பெரிய அரங்கில் அதிரடி ஆக்சன் காட்சிகளை படமாக்கி வருகிறது. இதில் பிரபல ஸ்டண்ட் மாஸ்டர் திலீப் சுப்பராயன் இரண்டு பெரிய அளவிலான அதிரடி அத்தியாயங்களை படமாக்குகிறார். இந்தப் படத்தில் அனுபமா பரமேஸ்வரன் மற்றும் டிம்பிள் ஹயாதி ஆகியோர் முன்னணி நடிகைகளாக நடிக்கிறார்கள். மேலும் பல பிரபல நடிகர்களும் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

இந்தப் படம் ஆகஸ்ட் 28ஆம் தேதி ரக்ஷா பந்தன் பண்டிகையின் போது தமிழ், தெலுங்கு, மலையாளம் ,கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் பிரம்மாண்டமான முறையில் திரையரங்குகளில் வெளியாகிறது.

## தமிழ் சினிமாவில் புதிய அவதாரத்தில் பிரதீப்

தமிழ் சினிமாவில் இயக்குநராக ஆரம்பித்து தற்போது முன்னணி நடிகர்களில் ஒருவராக வலம் வருபவர் பிரதீப் ரங்கநாதன். இவரது நடிப்பில் கடைசியாக வெளியான 'டியூட்' படம் நல்ல வரவேற்பை பெற்றதோடு வசூலையும் குவித்தது. இதனை தொடர்ந்து இவரது நடிப்பில் விரைவில் 'LIK' (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி) படம் வெளியாக உள்ளது.

இதனிடையே, பிரதீப் ரங்கநாதன் ஆரம்பத்தில் வாங்கிய சம்பளமும், தற்போதும் வாங்கும் சம்பளம் குறித்தும் சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், நடிப்பு மற்றும் இயக்குநரை தொடர்ந்து தமிழ் சினிமாவில் புதிய பாதையில் பிரதீப் ரங்கநாதன் பயணிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதன் படி, பிரதீப் ரங்கநாதன் தனது சொந்த தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி புதிய மற்றும் வளர்ந்து வரும் திறமையாளர்களை சினிமாத்துறைக்குக் கொண்டு வர திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. தனது தயாரிப்பில் உருவாகும் முதல் படத்தின் கதை பெண்களை மையமாகக் கொண்டிருக்கும் என்றும் இந்த படத்தில் மமிதா பைஜூ நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.






1.உண்மையாக
இருப்பவர்களுக்கு
எந்த உறவும் நிலைக்காது
இதுதான் உண்மை

2. பணத்திற்காக தவறு
செய்பவர்கள் திருந்துவதற்கு
வாய்ப்பு உள்ளது
பணம் இருக்கும் திமிரில்
தவறு செய்பவர்கள்
திருந்தவே மாட்டார்கள்

3. உப்பில் ஏதோ புனிதம்
இருக்கிறது எனவேதான்
அது கடலிலும் கண்ணீரிலும்
இருக்கிறது

4. தொப்பை குறையுமென்று
பத்தாத ஆடைகளையும்
பத்திரப்படுத்தி வைப்பதற்கு
பெயர்தான் நம்பிக்கை

5. ஆண்களிடம்
சொல்லப்படும் ரகசியங்கள்
கடைசி வரை ரகசியமாக
இருப்பதற்கு காரணம்
ஒன்று கவனிப்பது இல்லை
மற்றொன்று
ஞாபகத்தில்
வைத்துக்
கொள்வது
இல்லை



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## மறந்தால் தானே நினைப்பதற்கு!

அறுசீர் மண்டிலம்.

என்னில் கலந்த
இனியவளே ஏற்ற மாகக்
கனிந்தவளே அன்பின்
பாவாய் நீதானே
அருளை வழங்கும்
தேன்தானே!
பண்பின் சின்னம் நீதானே
பாசப் பிணைப்பின்
தேன்தானே கண்ணின்
மணியே என்னவளே
கருத்தின் பாவாய்
பொன்னியே!

அறிவிற் சிறந்த
பெண்ணே நீ அகிலம்
போற்றும்
கண்ணே நீ சிறப்பாய்த்
திகழும் நல்லவளே
செழுமை நிறைந்த
வல்லவளே! அறத்தின்
வழியில் நடப்பவளே
அழகுச் சின்னம் நீதானே
மறக்க
மாட்டேன்
உனையேநான்
மறந்தால்
தானே
நினைப்பதற்கு!



**முனைவர் இராம.வேதநாயகம்.**

## சகல சௌபாக்கியம்

சிலர் அருகாமை
துணிவைத் தரும்

சிலர் வார்த்தைகள்
கம்பீரம் கொடுக்கும்

அரிதாக ஓரிருவர்
நலம் நாடுவர்
யோசனை நல்குவர்


பொறாமை படுவோரும்
துரோகிகளும் அருகில்
இருந்து உயிரெடுப்பர்

சுயநலப் பேய்களும்
ஆபத்தில் உதவாத
நெருக்கமும் உண்டு

இவ்வளவு வருடங்கள்
எங்கே போனீர்கள்
என கேட்க
வைத்திடும்
வாழ்க்கை அளிக்கும்
உத்தமரும் உண்டு



**பி.பழனி,** சென்னை



## அடையாளம் !

அரும்பு மீசையும், குறும்
தாடியும் ஆணின் வாலிபப்
பருவத்தின் அடையாளம்
மாறி இன்று அனைவரும்
இந்த அடையாளத்தோடு !

இரட்டை ஜடை பின்னலும்,
தாவணியும், பாவாடை
சட்டையும் வஞ்சியின்
தெரிவை பருவமாய்
இருந்தது மாற்றம் கண்டு
இன்று அனைவரும்
டி–ஷர்ட், லெக்கின்சில் !

வயோதிகத்தின் அடையாளம்
வெண் நரை என்ற நிலை
மாறி இன்று சிவப்பு, கருப்பு
என தலைமயிர்
நிறம்
மாற்றியதும்
வயோதிகத்தின்
அடையாளம்...!



**எம்.பி. தினேஷ்.**
கோவை

## நினைவு நாள் !

இன்று மூக்காயி பாட்டியின்
முதல் வருடாந்திர
நினைவு நாள். !
இலையில்... பாட்டிக்கு
பிடித்த... உளுந்து வடை,
இட்லி, கார சட்னி,
கருவாட்டு குழம்பு..
என இலையில்
படையலிட்டு...
கை தட்டி காக்கையை
அழைத்தவர்கள்
உயிரோடிருக்கும் பாட்டி '
பசி " என அழுதபோதும்
ஏன் கொடுக்கவில்லை என
சிந்தித்தான் பேரன் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## உன்னால் முடியும் தம்பி!

எண்ணி யெழுந்தால் எதையும்
உன்னால் சாதிக்க
முடியும் தம்பி!
எழுந்து பாராய் இருட்டறை
உலகம் காத்துக்
கிடக்குதுன்னை நம்பி!
மண்ணைக்கூட பொன்னாய்
மாற்றும் மகத்துவம் தெரியுமா
தம்பி? மலரா மலரும்.. புலராப்
பொழுதும் மனதுள்
இருக்குது தம்பி.!

எண்ணில் கோடி இன்பம்
இங்கே எங்கே
இருக்குது தம்பி?
இளைய சமுதாய
கண்ணில் கரத்தில்
கனியாய்
இருக்குது வெம்பி..
உன்னில் உன்னை
உணர்ந்து
கொண்டால்
ஒளியாய்த் தோன்றும் தம்பி..
உணர்ந்து பாராய்
உள்ளேயிருந்து
உழைப்பாய் குதிக்கும் எம்பி.!

வாடப் பிறந்த மலர்கள் கூட
வாசம் தருதே தம்பி
வருந்தி உழைத்தால் வானம்
கூட கண்ணில்
தோன்றுமே தம்பி.!
ஓடத் துவங்கு..
உடனே துவங்கு.. உன்னால்
முடியும் தம்பி.!
ஒவ்வொரு அடியும் ஓடிய
பின்தான் ஒளிமய
உலகம் தம்பி!
தேடத் துவங்கு..
திடமாய்த் துவங்கு..
தேடியப் பின்தான் தம்பி!
தேனைப் போன்று வாழ்வும்
இனிக்கும் திருநாள்
பிறக்கும் தம்பி!



**வே.கல்யாண்குமார்.**



## கல்யாண சமையல் சாதம்.!

அப்பலம்.. வடை.. பாயசம்..!
கமகமக்கும் மிளகு ரசம்!
எப்பவும் இழுக்கும் பச்சடி..!
எளிமையான கிச்சடி.!

வெண்டைக்காய் சாம்பாரு..
தொண்டைக்கு அது
தேன்பாகு.! புளிக் குழம்பு..
மோர்க் குழம்பு!
பொரியலுடன் உண்டு பாரு.!

மலையாள அவியலுக்கு..
உருளைக்கிழங்கு கறிக்காக..
தவமிருக்கும் நாக்கு இங்கு.!
கடைசியிலே ஊத்து மோரு.!


தரையிலே.. தலைவாழை..
இலைவிரித்து
சாப்பிட்டோம்..!
மேசையிலே இன்று
அமர்ந்து மேம் போக்காய்
சாப்பிடுறோம்.!

ஊறுகாயை தொட்டுக்
கிட்டே.. வயிறு நிரம்ப
சாப்பிட்டோம்.! உதவாத
அயிட்டங்களால் மிச்சம்
வைத்தேப் புறப் பட்டோம்!

கையேந்தி இன்று எங்கும்
நின்று கொண்டே உண்பதா?
கண்ணான தமிழர் உணவு
பழக்கங்களை மறப்பதா?

சொன்னாலும் வெட்கமடா..
சொல்லா விட்டால் துக்கமடா.!
இன்னாளில் சாப்பாடு.
ஏன் மாறிப் போனதடா.?

**வே.கல்யாண்குமார்.**



## இயற்கையைக் காப்போம்



காடுகளை நம்முன்னோர் காத்ததாலே
காலத்தில் பருவமழை பெய்ததன்று
நாடுகளுக் குள்ளேயும் மரம்வளர்த்து
நல்லபடி சூழ்நிலையைப் பாதுகாத்தார்
வீடுகளின் பின்புறத்தில் தோட்டம் வைத்து
விளைவித்தார் தூய்மையான காற்றையங்கே
பாடுபட்டு பயிர்வளர்த்தார் வயல்களெல்லாம்
பசுமையொடு குலுங்கியது செழிப்பைத்தந்தே !

சீர்போல இயற்கைதந்த ஆற்றை யெல்லாம்
சிதையாமல் கரையமைத்துச் சிறப்பாய்க்காத்தே
ஊர்தோறும் ஏரிவெட்டி மழைநீர் தேக்கி
உயர்நோக்கில் நிலத்தடிநீர் பெருக வைத்தார்
ஊர்ந்துவரும் எறும்புக்கும் அரிசிக் கோல
உணவளித்துக் குருவிகளும் கூடு கட்டப்
பார்த்ததனை வீட்டிற்குள் பாதுகாத்துப்
பரிவுடனே பிறவுயிரைப் பேணி நின்றார் !

முன்னோர்கள் நமக்களித்த செல்வம் தன்னை
முறையாக நாம்காத்துப் பேணிடாமல்
தன்னலத்தால் வயல்களினை மனைகளாக்கித்
தாறுமாறாய்த் தொழிற்சாலை கட்டிவைத்துப்
பொன்முட்டை தந்தகாட்டின் மரங்கள் வெட்டிப்
பொட்டலாக்கிச் சுற்றுச்சூழல் மாசு செய்து
நன்நதியில் கழிவுநீரைக் கலக்க வைத்து
நறுங்காற்றில் புகைகலந்து நஞ்சாய் செய்தோம் !

ஏரிநீரைத் தூர்த்துவிட்டு நிலத்து நீரை
எந்திரத்தால் தினமுறிஞ்சி காலி செய்தோம்
வாரிதியை அசுத்தமாக்கி வானில் ஓசோன்
வளையத்தை ஓட்டையாக்கி வெப்பம் செய்தோம்
வேரினைப்போல் உள்ளதைநாம் காக்காவிட்டால்
வெறும்மண்தான் நம்முடைய சந்ததிக்கு
காரிருளில் பூமித்தான் மூழ்க்கிப்போகக்
கண்ணிழந்த பிள்ளைகளாய் ஆவர் நாளை !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## உள்ளும் புறமும்....

காலாவதியான பேரன் பில்
கரைந்து போன நாட்கள்...
உள்ளுக்குள்ளும்....

முட்காடுகளை
குத்தகை
எடுத்துக்
கொண்ட...

உன்
ஊசலாட்டமும்...
என...இருவழிப்
பாதையில்.. பயணிக்கிறது...
மனது...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## ஆத்திச்சூடி.!

அகத்தில் இருப்பதை
அனுபவித்து எழுது.

ஆற்றலை குவித்தே
ஆராய்ந்து எழுது.

இனியநல் சொற்களால்
இயல்பாய் எழுது.

ஈன்றவள் மகிழவே
ஈந்திடுநல் வார்த்தை!

உலகத்தை தூவலில்
உள்ளடக்கி காட்டு.

ஊரினை நினைத்து
உண்மையை முழங்கு.

எதிர்வரும் இன்னல்
எதிர்த்துநீ எழுது..

ஏனென்ற கேள்வியை
எழுப்பிட முழங்கு.

ஒன்றென உயிர்களை
உணர்ந்துகவி வழங்கு

ஓசையில் இசையில்
ஓங்கும் கவிவழங்கு..

ஔவைமொழி கேட்டு
செம்மொழியை வணங்கு.

இஃது நமது கவிஞர்கள்
ஏற்றிடில் எழும் கவிதை!

**வே.கல்யாண்குமார்.**



## "பூங்காற்றே தீண்டாதே"

பூங்காற்றே... தீண்டாதே...
என் காதலியின் கன்னத்தில்
உன் இல்லாத விரல்களால்
இசை மீட்டாதே!
அவள் சிவந்தால்
என் பெயரால்தான்
சிவக்க வேண்டும்!

மாலை நிலவே
அவள் நெற்றிக் களத்தில்
ஒளியால் உரசாதே!
அந்த உரசல் கூட
என் விழியால் மட்டுமே
இருக்க வேண்டும்!

பூக்களே அவள்
பூப்பாதம் தொட்டுப்
பணிவிடை செய்யாதீர்!
அவள் பாதச் சுவடுகள்
என் நெஞ்சில் மட்டுமே
பதிய வேண்டும்!

அவள் கண்கள் இரண்டு
ஏரிகள்! காற்றே அதில்
அலையெழச் செய்யாதே!
என் ஆசைக் கல்லால்
மட்டுமே அலையெழ
வேண்டும்!

பூங்காற்றே...நீ
தூரத்தில் நின்று பாரு!
அவள் தோளில்
சாய்ந்தோடும் உரிமை
உனக்கில்லை.

அவள் உயிரின் வாசலில்
என்
பெயரே கதவு!
அதைத் திறக்கும் சாவி
என் காதலின் கைப்பிடியில்!

பூங்காற்றே தீண்டாதே
அவளின் அருகாமை
என் ஆன்மாவின் உரிமை!

நீ விலகி நில்...
அவள் மூச்சில்
கூட
என் பெயரே
மணக்கட்டும்!




**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# நூல் விமர்சனம்

பாரதியார் பதில்கள் நூறு
நூல் ஆசிரியர் : ஔவைஅருள்,
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா.இரவி.
ஸ்ரீ ராம் கலை இலக்கியக் கழகம்,
12/6, போயசு சாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.
தொலைபேசி : 044 4341700



'புலிக்குப் பிறந்தது பூனையாகாது' என்ற பழமொழியை மெய்ப்பிக்கும் வண்ணம் ஔவை நடராசன் என்ற தமிழறிஞரின் மகன் ஔவை அருள் எழுதியுள்ள அற்புத நூல் இது.

தமிழ்த்தேனீ இரா.மோகன் அவர்கள் இந்த அரிய நூலை அனுப்பி வைத்தார்கள். நூலாசிரியர் என்னுரையில், "மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பெரும் பேராசிரியர் இரா. மோகன் வினா-விடைப் போக்கில் இந்த நூலை வடிவாக்க வேண்டுமென்று கூறி இந்த முயற்சிக்கு அவர் எழுதிய நூல் மூல நூலாகும்".

கவியரசர் பாரதியார் பற்றிய தகவல் களஞ்சியமாக வந்துள்ளது நூல். பாரதியார் படம் பார்ப்பது போன்ற உணர்வையும் பாரதியாரைப் பார்த்திராத இளையதலைமுறையினருக்கு அவருடன் பேசுவது போன்ற உணர்வைத் தந்துள்ளது இந்நூல்.

கேள்வி-பதில் என்ற முறையில் வடிவமைத்தது முதல் சிறப்பு. பதில்களை பாரதியாரின் கவிதை வரிகள் கட்டுரைகள் பாரதியார் பற்றி மற்ற அறிஞர்கள் குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுகள் அடிப்படையாகக் கொண்டு நூல் ஆசிரியர் ஔவை அருள் மிகச்சிறப்பாக எழுதி உள்ளார், பாராட்டுக்கள்.

பாரதியாரைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொள்ள வாய்ப்பாக வந்துள்ள நூல். இந்த நூலினை வெளியிட்ட ஸ்ரீ ராம் பாரதி கலை இலக்கியக் கழகத்திற்கு பாராட்டுக்கள். இந்நூலிற்கு குறைந்தபட்ச விலையிட்டு விற்பனைக்கு அனுப்பிட வேண்டுகிறேன். பலரும் வாங்கிப் படிக்க வாய்ப்பாக அமையும்.

இப்படி ஒரு மனிதர் வாழ்ந்தார் என்பதை இனிவரும் உலகம் நம்ப மறுக்கும் என்று காந்தியடிகளுக்குச் சொன்ன இலக்கணம் கவியரசர் பாரதியாருக்கும் பொருந்தும். கவிதையாகவே வாழ்ந்துள்ளார். பாரதியார் பற்றிய மதிப்பீடை மேலும் உயர்த்துவதாக நூல் உள்ளது.

பாரதியார் பற்றி 102 கேள்விகள் கேட்டு பாரதியார் படைப்புகளை வைத்தே பதிலும் சொல்லியுள்ள யுத்தி மிகச்சிறப்பு. முதல்கேள்வியில் பாரதியாரின் வரலாற்றுச்சுருக்கம் வந்து விடுகின்றது. காந்திமதிநாதன் தந்த பாரதி சின்னப்பயல் ஈற்றடி நிகழ்வு உள்ளது. பாரதியாரின் தமிழ்ப்பற்று பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் எழுதி உள்ளார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரிகளை வைத்தும் விளக்கி உள்ளார்.

"என்னென்று சொல்வேன் / தமிழால் பாரதி தகுதி பெற்றதும் பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்" பன்மொழி அறிஞர் பாரதியார் பாடிய பாடலான "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"

இப்படி பாரதியார் பாடல்களில் உள்ள தமிழின் மேன்மை பற்றிய பாடல்களை பட்டியலிட்டு உள்ளார். கவிதையில் மட்டுமல்ல கட்டுரைகளிலும் தமிழ்ப்பற்றை விதைத்தவர் பாரதி. கடிதத்திலும் செல்லம்மாளை கவலை கொள்ளாமல் தமிழ் படிப்பதில் கவனம் செலுத்து என்று எழுதி உள்ளார். தம்பிக்கு எழுதிய கடிதத்தில் இனிமேல் ஆங்கிலத்தில் எனக்கு மடல் எழுதாதே. கொச்சையாக இருந்தாலும் தமிழிலேயே எழுது என்று மடல் எழுதி உள்ளார்.

பாரதியாரின் தம்பி என்று அழைக்கப்பட்ட பரலி. சு. நெல்லியப்பருக்கு எழுதிய மடலில் தமிழ்நாடு வாழ்க என்று எழுது தமிழ்நாட்டில் ஒரே ஜாதி தான் உண்டு. அதன் பெயர் தமிழ்ச்சாதி என்று மடல் எழுதி உள்ளார்.

இப்படி நூல் முழுவதும் கவியரசர் பாரதியார் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை பல புதிய தகவல்களை நூலில் எழுதி உள்ளார். பாரதியார் பற்றி வெளிவந்துள்ள பல நூல்களையும் ஆழ்ந்து படித்து பாரதியாரின் படைப்புகளை கவிதை, கதை, கட்டுரை மடல் என்று அனைத்தையும் உள்வாங்கி வடித்துள்ள ஆகச்சிறந்த நூல்.

கவியரசர் பாரதியாரின் பற்றாளர்கள் கையில் இருக்க வேண்டிய பயனுள்ள நூல் இது. இந்த நூல் எழுதியமைக்காக நூலாசிரியர் ஔவை அருள் அவர்களுக்கு பரிசும் பாராட்டும் வந்து சேரும்.

பாரதியாரின் படைப்பாற்றல் ஆளுமையை கவிதை, சிறுகதை, கட்டுரை அனைத்தையும் உரிய இடங்களில் மேற்கோள் காட்டி வடித்துள்ளார்.

நூலை கையில் எடுத்தால் படித்து முடித்து விட்டுத்தான் கீழே வைப்போம். அந்த அளவிற்கு விறுவிறுப்பாக உள்ளது. மன்னர் வந்தபோது எழுந்து நிற்காததற்காக வேலை போனது மன்னிப்புக் கேட்டால் திரும்ப சேர்ப்பார்கள் என்று சொல்ல மன்னிப்பு கேட்க மறுத்தல். காந்தியடிகளை கூட்டத்திற்கு அழைத்த நிகழ்வு. பாரதியார் கவிஞர் செல்லியை நேசித்தார். வெள்ளையர் ஆட்சியை வெறுத்தார். ஆனால் கவிஞர் வெள்ளையர் செல்லியை வெறுக்கவில்லை. செல்லிதாசன் என்று புனைப்பெயர் சூட்டிக் கொண்டார். இப்படி பல தகவல்கள் நூலில் உள்ளன.

பெண்விடுதலை பற்றி கவியரசர் கட்டுரையில் அன்று எழுதியவை தான் இன்று படிப்படியாக நாட்டில் நடைமுறைக்கு வந்துள்ளது. பெண்குழந்தைத் திருமண முறை ஒழிக்கப்பட வேண்டும். விருப்பம் இல்லாத மணமகனுடன் மணமுடிக்கக் கூடாது.

பெண்ணிற்கு மணவிலக்கு உரிமை வேண்டும். பெண்களுக்கு சொத்தில் பங்கு வேண்டும். மறுமணம் தடுக்கக் கூடாது. திருமணம் விரும்பாத பெண்களை கட்டாயப்படுத்தக் கூடாது. பெண்களுக்கு கல்வி வேண்டும். பதவியில் ஆட்சியில் பங்கு தர வேண்டும்.

பாரதியார் தொலைநோக்கு சிந்தனையாளர், பெண்ணடிமை சமுதாயத்தை மீட்ட பெருமை பெண்ணுரிமை பெறுவதற்கு அன்றே முழக்கமிட்ட பெருமை அவரையே சாரும். இப்படி பல தகவல்கள் நூலில் உள்ளன. பாரதியார் தன் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தாகூரின் கவிதைகளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். பாரதியார் உடலால் வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள் தான். ஆனால் அவரது படைப்புகளால் நூற்றாண்டு கடந்து வாழ்கின்றார். இன்னும் பல நூற்றாண்டு கடந்தும் வாழ்வார். கவியரசர் பாரதியாருக்கு புகழ்மாலை சூட்டியுள்ள நூல். ஆசிரியர் ஔவை அருள் அவர்களுக்கு பாராட்டுகள்.






## பகுத்தறிவுப் பகலவன் பெரியார்

பெரியார் தமிழகத்தில் பிறக்கவில்லை என்றால்
பாரினில் தமிழன் சிறக்கவில்லை என்று பொருள்

சமூக நீதியை நிலைநாட்டிய நாயகர்
சமுத்துவ சமுதாயத்தை உருவாக்கியவர் பெரியார்

இட ஒதுக்கீட்டிற்காக முதன் முதலாக அன்றே
இந்திய அரசியல் சட்டம் திருத்திட வைத்தவர் பெரியார்

காந்தியடிகள் கதர் உடுத்த வேண்டியதும்
கதராடை சுமந்து விற்றவர் பெரியார்

கள் மது ஒழிக்க வேண்டும் என்றதும் சொந்தக்
கள் மரங்களை வெட்டி வீழ்த்தியவர் பெரியார்

விதி என்றும் ஒன்றும் கிடையாது சொந்த
மதியை பயன்படுத்தி வென்றிடச் சொன்னவர் பெரியார்

கடவுள் என்பது கற்பிக்கப்பட்ட கற்பனை
கடைக்கொடி மனிதனுக்கு புரியும்படி உரைத்தவர் பெரியார்

பெண் ஏன்? அடிமையானாள் நூலின் மூலம்
பெண்ணின் அடிமை விலக்கை அடித்து நொருக்கியவர் பெரியார்

பிள்ளை பெறும் இயந்திரமா? பெண்கள்
பல கேள்விகளைக் கேட்ட அறிவுச்சுடர் பெரியார்

விதவைகள் மறுமணத்திக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே
வித்திட்ட புரட்சி வேங்கை பெரியார்

எதையும் என்? எதற்கு? எப்படி? என
எல்லோரையும் கேட்ட வைத்த அறிஞர் பெரியார்

பக்தி என்பது தனிச்சொத்து ஒழுக்கம் பொதுச்சொத்து
பாமரனுக்கும் புரியும் வண்ணம் உணர்த்தியவர் பெரியார்

போராட்டம் அறிவித்தால் குடும்பத்துடன் வந்து
போராடும் முதல் ஆள் தந்தை பெரியார்

தண்டனைக்குப் பயந்து செய்த செயலை
தீர்ப்பு தருவோரிடம் மறுக்காத சிங்கம் பெரியார்

ஆதிக்கம் எந்தப் பெயரில் வந்தாலும் எதிர்த்தவர்
ஆதிக்கவாதிகளின் சிம்மசொப்பனம் பெரியார்

அமைதிப் பூங்காவாக இன்றும் தமிழகம் திகழ்ந்திட
அறிவு விதையை உள்ளங்களில் விதைத்தவர் பெரியார்



பெரியாருக்கு இணை இவ்வுலகில் பெரியார்
பெரியார் அவர்தான் என்றும் பெரியார்

நான் நேசிக்கும் நல்ல தலைவர் பெரியார்
நான் கவிஞன் ஆகக் காரணமானவர் பெரியார்.

**கவிஞர் இரா.இரவி**



போஸ்டரில் உன் முகம்
இருந்ததைப் பார்த்து
உடைந்து நின்றுவிட்டோம்
நானும் வானமும்.

இந்த நாள் வரை யாருடைய
நினைவிலும் இல்லாத
உன் தியாகம் இன்று
உன்னைப்பற்றி
வெற்று சம்பிரதாயத்துக்காக
கதைகளைத் தயாரித்துக்
கொண்டிருக்கிறார்கள்.

நெருங்கிய தொடர்பு
நேற்றுதான் சந்தித்தேன்
நாம் எதாவது செய்திருக்க
வேண்டும் நல்ல மனுச
அன்பானவர் என்றெல்லாம்
கருப்பு, சிவப்பு, நீலமென பல
வண்ண மூகமூடியணிந்து
பேசுவார்கள். ஆம்,
அரசியல்தான்இது.

நல்லவேளையாக நீ
மக்களுக்கான அரசியலை
பேசி எங்களைக் காத்து
விட்டாய்! நீ இல்லையேன்றால்
நாங்களும் அந்த
சாக்கடைக்குள் நீச்சலடித்துக்
கொண்டிருப்போம்.

எப்போதும் போலவே
தொலைக்காட்சியில்
செய்தியைப் பார்த்துக்
கொண்டிருந்தோம் நாங்கள்.
யாருமே எதிர்பார்க்காவில்லை
இந்த செய்தி இந்த நாளை
இவ்வளவு கனமான துயரம்
மிகுந்த வலியுடைய நாளாக
மாற்றுமென்று.

எப்போதும் போலியை
வெறுத்த நாங்கள்
இந்த செய்தி போலியாக
இருந்துவிடக் கூடாதா என்றே
தோன்றியது எங்களுக்கு.

ஊடகங்கள் மீது
நம்பிக்கையில்லாமல்
அணைத்துவிட்டு நடக்க
ஆரம்பித்தேன் தெருவை
நோக்கி. ஒட்டியிருந்த



நீ எங்கும்போகவில்லை
என்றும் எங்களுடன்
தான் இருக்கிறாய்
மக்களுக்காக என்றும்
களத்தில்.

**துங்கன்.**

## இரவும் பகலும்

" பகல் பொழுது
சுறுசுறுப்பானது பகலை
விரும்புவர் பலாயிரம் பேர் ..."

பகல் பொழுது விடியாமல்
மனித வாழ்க்கை உழைப்பு
ஏதும் இல்லை .... "

இரவுப் பொழுது சுகமானது
பல கனவுகளை தாங்கி
செல்லும் சுவாரஸ்யமானது..."

இரவின் அமைதி வெளிச்சம்
சில்லென்ற காற்று பரபரப்பு
இல்லாத சூழல் ..."

உறக்கத்தை உரிமையாக்கி
உன்னதமாக்கி மெல்ல
நகர்கிறது இரவுப் பொழுது..."

பகலும் இரவும்
இணைபிரியாமல் தத்தம்
கடமையை சரியாக
செய்கிறது ..."

பகலையும் இரவையும்
இணைக்கும் அந்திப்
பொழுது அற்புதமானது ..."


விளக்கேற்றி பிரகாசத்தை
செயற்கையாக
நடமாட விடும் நேரமது ..."

இறைவன் படைப்பில்



ரகசியத்தில்
இதுவும் ஒன்று
எல்லாம்
நன்மைக்கே
நமக்காகவே..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி



தோழர் நல்லக்கண்ணு
மறைந்தாலும் – அவரின்
நேர்மையால் என்றென்றும்
நினைக்கப்படுவார்

**ஸ்ரீகாந்த்** திருச்சி



எளிமையின் சிகரத்திற்கு
வீர வணக்கம்
வெள்ளை உடையில்
தூய்மையான உள்ளம்...
வேர்க்கடலை தின்றே
வீதி வீதியாய் மக்கள் பணி!
பதவிகள் தேடி வந்தபோதும்
பணிவோடு மறுத்த
பண்பாளர்... தன் வாழ்நாள்
முழுவதையும் தன்னலமற்றுத்
தந்த தியாகச் சுடர்!
உழைக்கும் வர்க்கத்தின்
உயிர்த் துடிப்பாய்
இருந்தவரே... ஆறடி
நிலத்தில் அடங்கும் முன்
அகிலத்தின் அன்பை
அறுவடை செய்தவரே!
எளிமை மறைந்ததோ?
இல்லை... எதிர்காலத்
தலைமுறைக்கு
நேர்மையின் பாடமாய்
நிலைத்து நின்றதோ!

**ப.நந்தகுமார்,** காங்கேயம்

விரல் காட்டி எச்சரிக்கிறாய்
கண்ணாமூச்சி
விளையாட்டில்..'ஒளிந்ததைக்
காட்டிக் கொடுத்து



விடாதே'.. என்
சிரிப்பே காட்டிக்
கொடுக்கிறது
எப்போதும்
உன்னை.

**ரிஷபன்**

## நிதர்சனம்...

திசைகள் வேறாய் திரும்பிக்
கொண்டாலும்....
இன்னும் அருகருகே தான்
நின்றுகொண்டிருக்கிறோம்.....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

ஐயா நல்லகண்ணுவிடம்
கற்க வேண்டியப் பாடம்...

நாட்டின் சுதந்திரப்
போராட்டத்தில்
இன்முகத்துடன்
இளமைக் காலப் பங்கேற்பு.

விவசாயிகளின் குரல்
தொழிலாளிகளின் நண்பன்.
ஒடுக்கப்பட்டோரின்
ஆகச்சிறந்த போர்வாள்.

தீண்டாமை எதிர்ப்பு,
கனிமவள கொள்ளைக்கு
எதிர்ப்பு என பொதுவுடமை
கொள்கையில்
நீண்ட காலப் பயணம்...

அதிகாரத்தை
அலட்சியப்படுத்தி
மக்களின் உரிமையை
இலட்சியமென கையில்
எடுத்து போராட்டத்தால்
வெற்றிக் கண்டவரே.

பொதுநலப் போராளி
எளிமையின் ஒளி விளக்கு
உறுதிகொண்ட நேர்மை
தியாகத்தின் திருவுருவம்.

'தசகைசால் தமிழரே'
உமது உள்ளமும்
உடலும்கூட
பொதுவுடமையானதோ
ஐயா நல்ல கண்ணுவே
யாவர்க்கும் நீங்கள் கற்க
வேண்டியப் பாடம்
வாழியவே நீ என்றும்!...

**எறும்பூர் கை. செல்வகுமார்,** செய்யாறு.



## தோழர் நல்லகண்ணு ஐயா!

நேரிசை வெண்பா!

பொதுவுடைமைக்கட்சியில்
பூத்த தலைவர்!
இதயசிம்மாசனத்தில்
ஏறிப்... பதமாய் அமர்ந்தவர்
நல்லகண்ணு அன்பில்...
முதிர்ந்த கமழும்
தலைவரைக்காண்!

தகைசால் தமிழரெனும்
தக்க விருதை வகையாகப்
பெற்றவர்!
வஞ்சம்... திகழாத
நேர்மைத்திறனுடையார்
நெஞ்சில் உறுதியுடைக்
கூர்மைத் தமிழரைக் கூறு!

விடுதலைப்போராட்ட
வீரர்தான்!
யார்க்கும் கெடுதலை
எண்ணாத கேண்மை...



விடாதவர்
நல்லகண்ணு
மேன்மையில்
நற்பெயர்
உற்றவர்!
வல்ல தலைவர்
வளம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## அழகி

அழகி என்பவள் யார்?

கண்ணிலே கருணை
இருந்தால் அவள் அழகி
சொல்லிலே உண்மை
இருந்தால் அவள் அழகி
செயலிலே நேர்மை
இருந்தால் அவள் அழகி.

கறுப்பாய் இருந்தாலும்
கலப்படம் இல்லாத
கலாச்சாரம் இருந்தால்
அவள் அழகி

நாணத்தால் மட்டுமே
தலைகுனிந்தால் அவள்
அழகி.



மொத்தத்தில்
பெண்
பெண்ணாய்
இருந்தால்
ஒவ்வொரு
பெண்ணும்
ஓர் உலக அழகிதான்.

**எஸ் சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை



## பூங்கா

அவரவர் குழந்தைகளுடன்
வந்த பெற்றோர்கள்,
அவரவர் கொண்டுவந்த
விளையாட்டு
சாதனங்களுடன்,
அவரவர் தேர்ந்தெடுத்த
இடத்தில் அமர்ந்து



விளையாடிவிட்டு
அவரவர்
வண்டிகளில்
திரும்பிப்
போயினர்,
அனைவரும்
கூடிவிளையாட
அமைத்திருந்த
பூங்காவிலிருந்து!

**கே. பி. ஜனார்த்தனன்**

## புதுக்கட்சி !

பெண்ணே....' ம் ' என்று ஒரு
வார்த்தை சொல்...
உன் பாத சுவடை
சின்னமாக்கி... உன்
கூந்தலை கொடியாக்கி....
தனிக்கட்சி துவங்கி விட
நான் தயார்...
உன் மனசாட்சியில் பங்கு
மட்டும் கொடுத்துவிடு !

## கவிதை

இரண்டடி கவிதைகளாய்



கடற்கரை
மணல்
பரப்பில் அவள்
கால் பாத
சுவடுகள்!

**எம்.பி. தினேஷ்.**
கோவை

## அறம்

தீமைகளைப்பொசுக்கி
நன்மைகளை ஆராதித்து
செய்த வேள்வியில்
வரமாய்க்கிடைத்தது அறம்!

பாவங்களை
மனக்குழிக்குள் போட்டு
புதைத்து விட்டு
தோண்டிப்பார்த்த
போதுதான் தெரிந்தது
புதையல்களாய்ப்
புண்ணியங்கள்!

அறத்தின் நிழல்பட்டு
பாலைவனமும்
பசுமையாகலாம்
அதர்மம் வேரூன்றினால்
குறிஞ்சியும் கூட
பஸ்பமாகலாம்!

கர்ணனைப்போன்ற
கருணைவான்களே
தேசமெங்கிலும்
அறக்கட்டளைகளை
நிறுவுங்கள் முகவரி
இல்லாதவருக்கு முகவரி
தாருங்கள்!

இங்கே புதர்களில்
வளரும் தப்புச்செடிகளாய்த்
தப்பிப்பிழைக்கும்



தர்மத்தை
தத்தெடுத்துக்
கொள்ளுங்கள்
வாழையடி
வாழையாய்
வம்சம்
தழைக்கட்டும்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

புரட்சி செய்யும் புத்தகம்
புத்தகம் அழியுமுன்னே
படித்து பதிந்து விடு..
படித்ததை மற்றவர் மனதில்
பதித்து விடு....!

வரலாறு தெரிவது
அவசியம்...அந்த
வரலாற்றை காப்பது பெரும்
அவசியம்....!
துயரம் என்பது துணை
நின்று அழிந்து போகும்...
துணிச்சல் என்பது
கூட இருந்து நம்மை காக்க
போரடும்...!

படித்து அறிந்து தெளிந்தால்
உன் வாழ்வு மேல் நோக்கி
மாறி போகும்....!

படிப்பு அவசியம்...
அதை பேனிகாப்பது மிக மிக
அவசியம்....!! புத்தகம் ஒரு
பாதுகாப்பகம்...!!

**பொன்.கருணா,**நவி மும்பை

## தென்றல் வீசிடும் தெருக்கிணறு

தெருக்கிணற்று சுவர்மீது சாய்ந்து நின்றிருந்தான் அகிலன். எழிலரசி அகிலனும் சொந்தம் என்பதால் அச்சப்படாமல் சிரித்துப் பேசினர். அவர்கள் உலகம் மகிழ்ச்சியாக இருந்தது. சாலையில் நடந்து செல்பவர்கள் அவர்களை பார்த்தபடிக் கடந்து சென்றனர்.எழிலரசி, அகிலனின் ஒன்னுவிட்ட மாமன் மகள் என்பதால் உறவுகள் அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை. சுவை குறையாத சொற்களால், மனமகிழ பேசியபடி கிணற்று சுவரில் சாய்ந்து நின்றான். அச்சம் இல்லாத உடல்மொழிக்கு சொந்தக்காரியாய், நேர்கொண்ட பார்வையால் பதில் சொல்லி சிரித்து மகிழ்ந்தாள் எழிலரசி. அக்காள் மகள் தேவி அசைந்தாடியபடியே மெல்ல நடந்துவந்து அகிலன் முன் நின்றாள். அவள் முகம் வாடியிருந்தது. மனம் ஏக்கத்தால் தவித்தது. எதையோ சொல்லத் தயங்கி, நெஞ்சுக்குள்ளே மறைத்து வைத்திருக்கிறாள் என்பதை புரிந்து கொண்டான். விளையாட்டாய் "நான் கிணற்றில் வீழ்ந்திடுவேன்" அகிலன் சொன்னதும், " விழு எனக்கென்ன?" என்று பாசம் இல்லாதவளாய் சட்டென்று பதில் சொல்லி முடித்தாள் எழிலரசி.
"மாமா.." எனப் பதறித்துடித்து, சிறிது நேரம் கழித்து தயக்கத்தோடு இரு கை விரல்களை பின்னி இணைத்துக்கொண்டு சிரித்து நின்றிருந்தாள் தேவி.
இருட்டு வெளிச்சத்தை விழுங்கியது.
தெருவின் மின்விளக்குகள் இருட்டைய அகற்றியது.
" என்னடி அங்க.. வா சீக்கிரம்.." என எழிலரசியின் சித்தி சத்தம் போட்டாள். "இத வந்துட்டன் சித்தி.." என அவசர அவசரமாக நடந்தாள் எழிலரசி.
"மாமா" என்று தயக்கத்துடன் அவனை நோக்கி நடந்தாள் தேவி. அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு "நான் ஒன்னு சொல்லட்டுமா..?" எனக் கெஞ்சினாள்.
அவளுக்குள்ளும் ஏதோ ஒன்று அவளை வாட்டி வதைக்கிறது என்பதை புரிந்து கொண்டான். "தேவி, வாடி இங்க..." என அக்காள் கத்த, சத்தம் இல்லாமல் வாடிய முகத்தோடு அங்கிருந்து புறப்பட்டாள் தேவி.
வெள்ளை நிலவின் குளிர்ந்த ஒளி, பூவரச மரத்தின் நிழல், மண்சாலையின் தெரு விளக்கு வெளிச்சத்தில் மீண்டும் ஒருமுறை கூடி பேச எழிலரசி தேவியோடு நடந்துவந்தாள். திண்ணையில் உட்கார்ந்துபடி அவர்கள் இருவரும் அகிலன் இல்லாத நிமிடத்தில் மகிழ்ச்சியாய் பேசிக்கொண்டே நடந்தார்கள். இது சரியான நேரம் இல்லை என்பதால், அவர்களோடு பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்காமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான் அகிலன் . மறுநாள் காலை வெறிச்சோடி கிடந்தது மண்சாலை.
வாடி நின்றிருந்தது பூவரசமரம்.
அனாதையாய் தனித்து விடப்பட்டிருந்தது தெருக்கிணறு

பேச்சுத் துணை இல்லாதவனாய் திண்ணையில் உட்கார்ந்து வீதியை உற்றுப் பார்த்திருந்தான் அகிலன்.
பாவாடை தாவணியில் கருத்த முகத்தில், பளிச்சிடும் முத்துப் பற்களால் சிரித்தபடி தேவி "மாமா... அக்கா ஊருக்கு போயிட்டா... இதோட அடுத்த வருடம்தான் வருவா.... இனிமேல் உன் கூட விளையாட நான் மட்டும்தான் வருவேன் என்றாள்."
"எப்போ போனா...?" என்றான் கவலையான முகத்தோடு.
"காலையிலேயே" என்று சிரித்துவிட்டு "நீ இன்னும் பத்து நாள் இருப்ப இல்ல?" மகிழ்ச்சியாக கேட்டாள் தேவி
"ஆமாம்" என்று சோகம் கலந்த முகத்தோடு சொல்ல, காலையில் தோன்றி, மதியம் சுட்டு, மாலையில் மகிழ்வித்து, இரவில் காணாமல்போன சூரியனைப் போல், மேக கூட்டத்திற்குள் மறைந்து போனாள் எழிலரசி.
அவளின் நினைவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டு



தெருக்கிணற்றுச் சுவரில் சாய்ந்து நின்றிருந்தான் ஆகிலன். மென்மையாய் தன்னை சுற்றியே சுழன்றுக் கொண்டிருக்கும் தென்றலாக சிரித்தபடி வந்து நின்றாள் தேவி. கைகோர்த்தபடி விளையாடி மகிழ்ந்தான் அகிலன்.

**இரா.இரமேஷ்,** கயப்பாக்கம்

## ஊட்டி ரோசாவால்




தாவரவியல் முதுகலையில்
எனக்கொரு தோழி
இருந்தாள்.
அவளுக்கு நான் செல்லமாய்
வைத்தப்பெயர் ஊட்டி
ரோசா.

அருகில் இருந்த ரோசா
வனத்தில் ஏராளமாய்
ரோசாக்கள் விளைந்தன. பூவை சேகரிக்க தொழிலாளிகள்
மிகவும் சிரமப்பட்டனர்.

அதை கண்ட நான் ஒரு நொடியில் அந்த ஒரு கோடிப்
பூக்களையும் சேகரிப்பதாய் சபதம் செய்தேன் என் தோழி
இருக்கிறாள் என்ற தைரியத்தில் உடனே

என் தோழியைக் கூட்டிக்கொண்டு ரோசாவனம் சென்றேன்



வனத்தின் வாயிலில் அவள் கால் பட்டவுடன்
அத்தனை ரோசாக்களும் அவள் காலடியில்
கிடந்தன.

சேகரித்தேன் ஒரு நொடியில் ஒரு கோடிப்
பூக்களை


**மீனாட்சி பாண்டியன்** திருவண்ணாமலை.

## மூத்தோர் சொல் கேள்

அமிர்தம் என்றொரு
அட்சயம் மூத்தோர்சொல்!
அனுபவ ஏணியாய்
ஆயிரம் கருத்துக்களை
அள்ளித்தரும் பொற்குடம்!
ஆழ்கடலில் முத்தெடுக்கும்
ஆற்றலான வலிமை சொல்!

மூத்தோரின் முத்துச்சொல்
சோதனைகளை வென்று
சாதனைதரும் வல்லமை!
ஒளிமயமான வாழ்விற்கு
ஒளியேற்றும் குல விளக்கு!

எதிர்கால உயர்விற்கு
வழிகாட்டும் படிக்கட்டு!
சரித்திரம் படைத்திடும்
செம்மை சொல்லின்
சிந்தனை நாயகன்!
அறிவுரைகளை அள்ளி



அன்போடு தந்திடும்
அர்த்தமுள்ள ஆசான்!

மூத்தோரெனும் முத்தை
ஒதுக்கும் நாகரீகம்
பண வேட்டையால் மறையும்
பாசமான உறவுகளால்
மறையும் நீர்க்குமிழி போல
மறுக்கின்ற மூத்தோர் சொல்
வளரும் தலைமுறையினருக்கு
வாழ்த்தாய் அமைந்திட

மூத்தோரை வெறுக்கும்
மூடர்கள் கூட்டம்
மிகுந்த உலகமாய்
மாறி மூத்தோர்சொல்
மதிக்கும் மனிதராய்
வாழ முயற்சிப்போம்!
மூத்தோர் சொல்லை
மகிழ்வாய் ஏற்போம்!

**பா.கலைமகள்,**
விழுப்புரம்.







**WANTED**


**MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED**

**Managers**: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000


Call/wapp: 9438610756













**WANTED**

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com




தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971




FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale...
Residential / Commercial...
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
ISO
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909
+91 96770 88843
info@sevenstarslogistics.com
www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009



MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# பல்சுவை களஞ்சியம்




## தமிழ் மொழியின் பெருமை





உலகில் தமிழ் மொழி போன்று
அருமையான மொழி எதுவும்
கிடையாது

| | | |
|---|---|---|
| உணர்வு எழுத்து வலி. | அ. | ஆ |
| சிரிப்பு எழுத்து. | இ. | ஈ |
| காரம் எழுத்து. | உ | ஊ |
| கோபம் எழுத்து. | ஏ | ஏ |
| வெட்கம் எழுத்து. | ஐ | |
| ஆச்சரிய எழுத்து. | ஒ | ஓ |
| வக்கணை எழுத்து. | ஒ ள | |
| விக்கல் எழுத்து. | | |

அக்கனா
இது பன்ற சிறப்பு வேறு எந்த
மொழிக்கும் கிடையாது.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



விஞ்ஞானி சார்லஸ் டார்வின் அவர்கள் இங்கிலாந்தில் ஷிரூஸ்பரி என்னும் ஊரில் 1809-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் நாள் பிறந்தார்.
கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில், சமய குருவிற்கான கல்வி கற்கலானார்.
கேம்பிரிட்ஜில் படிப்பதை விட குதிரைச் சவாரி, துப்பாக்கி சுடுதல் போன்ற விளையாட்டுகளிலேயே அவர் அதிக ஆர்வம் காட்டினார்.
எனினும், அங்கு தாவரவியல் பேராசிரியராக இருந்த ஹென்ஸ்லோ என்பவரின் அன்பைப் பெற்று அவருடைய நெருங்கிய நண்பரானார்.
அப்போது "பீகிள்" (Beagle) என்ற அரசுக் கப்பல் 1831-ஆம் ஆண்டு தென் அமெரிக்காவுக்கும், பசிபிக் பெருங்கடலுக்கும் சென்று ஆராய்ச்சி செய்வதாக இருந்தது.
நண்பர் ஹென்ஸ்லோவின் முயற்சியால் அந்தக் கப்பலின் "இயற்கை விஞ்ஞானியாக (Naturalist)" டார்வின் நியமனம் பெற்றார்.
1831-ஆம் ஆண்டு தமது 22-ஆம் வயதில் டார்வின் அவர்கள் "பீகிள்" கப்பலில் புறப்பட்டார். பசிபிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென் அட்லாண்டிக் பெருங்கடல் ஆகியவற்றிலுள்ள வேறு பல தீவுகளுக்கும் அது சென்றது.
அந்த நீண்ட பயணத்தின் போது டார்வின் பற்பல இயற்கை அதிசயங்களைக் கண்டார். ஆதிகுடிகள் பலரைச் சந்தித்தார். ஏராளமான புதை படிவங்களை (Fossils) கண்டுபிடித்து சேகரித்தார். கணக்கற்ற தாவர இனங்களையும், விலங்கினங்களையும் ஆராய்ந்தார்.
தாம் கண்டறிந்த அனைத்தைப் பற்றியும் விரிவான குறிப்புகளைப் பெருமளவில் எழுதி வைத்துக் கொண்டார்.
இவற்றிலிருந்து தான் இவர் தமது முக்கியக் கொள்கைகள் பலவற்றை வகுத்தார். அவற்றை நிலை நாட்டுவதற்கு அசைக்க முடியாத சான்றுகளாக அக்குறிப்புகள் அமைந்தன.
1836-ஆம் ஆண்டு டார்வின் இங்கிலாந்து திரும்பினார். தாம் செய்த ஆராய்ச்சிப் பயணத்தில் கண்ட எல்லாப் பொருள்களைப் பற்றியும் அடுத்த 20 ஆண்டுகளில் பல நூல்களாக எழுதினார். இந்த நூல்கள் இவருக்கு இங்கிலாந்தின் தலைசிறந்த உயிரியலறிஞர்களில் ஒருவர் என்ற புகழை ஈட்டித் தந்தன.
விலங்கினங்களும், தாவர இனங்களும், என்றென்றும் ஒரே மாதிரியாக இருப்பவை அல்ல என்றும், நிலவுலகப் புறணியின் வளர்ச்சி மாறுபாடுகளின் போது உருமலர்ச்சி பெற்றவை என்றும் 1837-ஆம் ஆண்டிலேயே டார்வின் உறுதியாக நம்பினார்.
1859-ஆம் ஆண்டில் டார்வின் "இனங்களின் தோற்றம்" (Origin of Species) என வெளியிட்டார். அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வேறெந்த அறிவியல் நூலும், இது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை.
வாழ்க்கைப் போராட்டத்தில் ஆற்றல் வாய்ந்த இனங்களின் நிலைபேறு" என்ற பெயரும் இதற்கு உண்டு.
இந்நூலில் அவர் எழுதிய கொள்கை "டார்வின் கொள்கை" என்று பெயர் பெற்றது. இதில் டார்வின் பரிணாமக் கொள்கையை உறுதியாக நிலைநாட்டினார்
"இனங்களின் தோற்றம்" பற்றிய வாக்குவாதங்கள் நடந்து கொண்டிருக்கும் போதே, 1871-ஆம் ஆண்டில் டார்வின் "மனிதனுடைய பாரம்பரியம் மற்றும் பால் வேறுபாடு பொறுத்தது இயற்கையின் இயல்தேர்வு முறை" (The Discent of Man and Selection in Relation to Sex) எனும் நூலை வெளியிட்டார்.
அதில், வாலில்லாக் குரங்கு போன்ற ஒரு பிராணியிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கொள்கையை அவர் விளக்கியிருந்தார். இதனால், இவர் மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்று கூறுவதாக எண்ணி இவருக்கு எங்கும் எதிர்ப்பு எழுந்தது. இவருடைய இந்தக் கொள்கை இன்னும் காரசாரமான வாக்கு வாதங்களைத் தோற்றுவித்தது.
இனங்களின் உருமலர்ச்சி பற்றிய கொள்கையை முதலில் வகுத்தவர் டார்வின் என்று கூற முடியாது. அவருக்கு முன்னரே சில விஞ்ஞானிகள் இந்தக் கொள்கையைக் கூறியிருக்கின்றனர்.
இயற்கைத் தேர்வு என்ற முறையினால் உருமலர்ச்சி எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை டார்வின் தெளிவாக விளக்கிக் கூறினார். அத்துடன், தமது கொள்கைக்கு ஆதாரமாக நம்பகமான சான்றுகளையும் அவர் ஏராளமாகக் காட்டினார். எனவே தான், அவருடைய கொள்கையை அறிவியல் உலகம் ஏற்றுக் கொண்டது.
பிறப்புக் கோட்பாட்டின் (Genetic Theory) ஆதரவில்லாமலேயே பிறப்புக் கோட்பாட்டினை அறிந்து கொள்ளாமலேயே டார்வின் கோட்பாடு வகுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
உயிரியல் துறை முழுவதிலுமே அவர் புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கினார். இயற்கைத் தேர்வு என்பது மிகவும் விரிவானதொரு தத்துவமாக அமைந்திருந்தது. அந்தத் தத்துவத்தை மானிடவியல், சமூகவியல், அரசியல், விஞ்ஞானம், பொருளாதாரம் போன்ற வேறு பல துறைகளுக்கும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
இத்தகைய திறன் வாய்ந்த விஞ்ஞானி சார்லஸ் டார்வின் 1882-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# ஸ்ரீ கிருஷ்ணன் கூறிய நீதி

எல்லா கெட்டவர்களும் ஒன்று சேருவது சுலபம் ஆனால் இரண்டு நல்லவர்கள் ஒன்று சேர்வது கடினம் என ஸ்ரீ கிருஷ்ணன் கூறிய நீதி - விளக்கும் எளிய கதை*

★துரியோதனன் வீழ்த்தப்பட்டான், தரையில் கிடக்கிறான், அப்பொழுது பீமன் அவன் தலையை தன் காலால் மிதிக்க முயலுகிறான்.

★தர்மன் கூவுகிறான், பீமா செய்யாதே அவன் ஒரு சாம்ராட் அரசன், இது சரியல்ல தர்மத்துக்கு உகந்த்து அல்ல என்று....

★துரியோதனன் அப்பவும் சளைக்கவில்லை, அவன் முகம் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்கிறது,

★ஹே கிருஷ்ணா.. தர்மம் தர்மம் என்று பேசும் நீ, உன் கண் காட்டியதால் தானே இந்த பீமன் என்னை தொடையில் அடித்து மரணிக்க வைத்தான், இது தர்மமா?

★சூரியனை மறையச் செய்து ஏமாற்றினாய்? கர்ணனை சூசகமாக கொன்றாய்? பீஷ்மரை சிகண்டியை முன் நிறுத்திக் கொன்றாய்?

★ஒரு யானையை வைத்து துரோணரைக் கொன்றாய்? இப்பொழுது அவன் என் தலையை மிதிப்பதை கூட நீ பார்த்துக் கொண்டு இருக்ககிராய் என ..... துரியோதனன்... கேட்க

★ புன் முறுவலுடன் கிருஷ்ணன் பதில் சொன்னான்.



★துரியனே, தர்மத்தைப் பற்றிப் பேச உனக்கு அறுகதையே இல்லை, உலகின் மொத்த அதர்மமும் நீ செய்துவிட்டு, இப்ப தர்ம்ம் பற்றிச் சிந்திக்கிறாய், ஏன் என்றால் எல்லாம் இழந்த /துறந்த நிலையில் வரும் ஞானம் இது

★ராமனுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் என்பது எங்கள் அவதாரம் பூமியில் தோன்றிய காலத்தின் வேறுபாட்டில் தான்.

★இராமனுக்கு எல்லா செயலின் பிறப்பும் சரி, அது செல்லும் வழியும் சரி, அது முடியும் முடிவும் சரி , தர்மம் சார்ந்தே இருக்க வேண்டும்.

★ஆனால் நான் இருக்கும் காலம் கலியை தொடும் காலம், இதில் செயலின் பிறப்பு அதன் வழி எப்படி இருந்தாலும் அதர்மம் அழிக்க சில சாணக்கியம் செய்து, அதர்ம வழியையே உபயோகப்ப்படுத்தி பின் தர்ம்ம் ஜெயிக்க வேண்டும் என்பதே,

★எல்லா கெட்டவர்களும் ஒன்று சேருவது சுலபம் ஆனால் இரண்டு நல்லவர்கள் ஒன்று சேர்வது கடினம்.

★ஆகையால் சில விஷயம் செய்தாக வேண்டிய கட்டாயம் தர்மம் நிலைக்க, ஆதனால் நீ இதைப் பற்றிப் பேசாதே என்றார் ஸ்ரீகிருஷ்ணன்.

சர்வம் கிருஷ்ணார்ப்பணம்*

**-எம் அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி



# மீம்ஸ்










## விடுகதை

| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |



# ஜோக்ஸ்



(1) "கொள்கைதான் எங்களுக்கு முக்கியம் என்று தலைவர் மேடையில் பேசியதை கொள்ளைதான் முக்கியம் என்று திரித்து பரப்பிவரும் எதிர்க்கட்சியினரை வன்மையாக கண்டிக்கிறோம்............"

(2) "ஊழல் வழக்கு காரணமாக எனது பாஸ்போர்ட்டையும், வங்கிக் கணக்கையும் முடக்கினீர்கள் ஓகே......., ஆனா அதுக்காக என்னோட ஃபேஸ்புக், வாட்ஸ்அப், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் கணக்குகளை எல்லாம் இப்படி முடக்கி வச்சா எப்படி ......."

(3) வங்கி ஊழியர்:-
"ஆதார் கார்டு கேட்டால் சேதார் கார்டுதான் இருக்குன்னு சொல்றீங்களே..... அது என்ன சேதார் கார்டு........?"

கஸ்டமர்:-
"வீட்டுக்குள்ள வெள்ளம் வந்ததுனால என்னோட ஆதார் கார்டு சேதாரம் ஆயிடுச்சு சார்.........!!"

(4) "வாட்ஸ்அப்பில் வந்த விடியோவை பார்த்து நம்ம தலைவர் ஏன் அப்செட் ஆயிட்டார்........?"

"டீவி செய்தியில் தலைவரின் உரையைக் காண்பித்தபோது தொண்டர் தனது செருப்பை டீவியை நோக்கி எறிந்ததை வீடியோவா அனுப்பியருக்காராம்........!!"

(5) "அந்த ஜோக் எழுத்தாளர் எதற்காக யாகம் செய்கிறார்.....?"

"ரெண்டு வருஷமா அவரோட ஒரு ஜோக்கு கூட எந்த பத்திரிகையிலயும் பிரசுரமாகலையாம்........ யாரோ சூன்யம் வெச்சிருப்பாங்களோன்னு சந்தேகப்படறாரு........!!"

(6) அரசியல்வாதி (மேடையில்): கடந்த 5 ஆண்டுகளில் நோட்டாவுக்கு மொத்தம் 1 கோடிக்கும் மேலே ஓட்டுகள் கிடைத்துள்ளதாம். எனவே தேர்தல் ஆணையம் நோட்டாவை ஒரு தேசிய கட்சியாக அறிவித்தால் எங்களுக்கு அதனோடு தேர்தல் கூட்டணி அமைக்க வசதியாக இருக்கும்......!

(7) "நம்ம தலைவர் பேசற மேடையில சென்சார் மூலமா இயங்குற ஒரு மெஷினை வெச்சிருக்காங்களாமே, எதுக்கு.....?"

"செருப்பு, தக்காளி, முட்டை எத வீசினாலும் அதை உடனே ஒரு நொடியிலே எந்த பகுதியிலிருந்து வந்ததோ அந்தப் பக்கமே வேகமா திருப்பி எறிஞ்சுடுமாம்......!"

(8) "நம்மளோட கட்சி கூட்டத்துக்கு மைதானமே நிரம்பி வழியற மாதிரி கூட்டம் வரணும்னா என்ன செய்யலாம்..........?"

"மைதானத்தை சுத்தி சியர்ஸ் கேர்ள்ஸை நிறுத்திப் பார்க்கலாம் தலைவரே.........."

(9) "சிறையிலிருக்கும் தலைவர் சிறை அதிகாரிகளுக்கு ஏதோ வேண்டுகோள் வைத்திருக்கிறாராமே ?"

"அவரால் பிழைப்பு நடத்தி வந்த மீம்ஸ் கிரியேட்டர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க அவர்களை வாரத்திற்கு ஒரு முறையாவது ஜெயிலுக்குள் தன்னை சந்திக்க அனுமதிக்கனும்னு மனு கொடுத்திருக்கார்.....!"

(10) "இளவரசிக்கு குழந்தை மனசு......."

"அதுக்காக இப்படியா இரண்டு கால்களையும் பல்லக்குக்கு வெளியே தொங்கப் போட்டுகிட்டு வர்றது......?!"

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்


## மாசித்திருவிழா 6-ம் நாள்: திருச்செந்தூர் கோவிலில் கோ ரதத்தில் சுவாமி வீதி உலா

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் மாசித் திருவிழா கடந்த 21-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

விழாவில் ஒவ்வொரு நாளும் காலை மாலையில் சுவாமி-அம்பாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா நடைபெற்று வருகிறது.

5-ம் திருவிழாவான நேற்று இரவு குடை வரை வாயில் தீபாராதனையாகி சுவாமி, அம்பாள் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி 8 வீதிகளில் உலா வந்து கோவில் சேர்தல் நடந்தது.

6-ம் திருவிழாவான இன்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றது. காலை 7 மணிக்கு சுவாமி கோ ரதத்தில் எழுந்தருளி 8 வீதிகளும் உலா வந்து பந்தல் மண்டபம் சேர்தல் நடந்தது.



இரவு 8 மணிக்கு சுவாமி வெள்ளி தேரிலும், அம்மன் இந்திர விமானத்திலும் எழுந்தருளி 8 வீதிகளும் உலா வந்து மேலக்கோவில் சேர்தல் நடக்கிறது

7-ம் திருவிழாவான நாளை காலை 5 மணிக்கு மேல் 5.30 மணிக்குள் சண்முகப் பெருமான் உருகு சட்ட சேவை நடக்கிறது. காலை 9 மணிக்கு சுவாமி சண்முகர் சண்முக விலாசத்தில் இருந்து வெற்றிவேர் சப்பரத்தில் ஏற்றத்தில் எழுந்தருளி பிள்ளையின் கட்டளை மண்டபம் சேர்தல் அங்கு அபிஷேகம் அலங்காரம் தீபாராதனை நடக்கிறது.

மாலை 4.30 மணிக்கு மேல் அங்கிருந்து சுவாமி சிவன் அம்சமாக சிவப்பு சாத்தி கோலத்தில் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது

8-ம் திருவிழாவான நாளை மறுநாள்( 28-ந் தேதி) காலை 6 மணிக்கு பிரம்மன் அம்சமாக வெள்ளை சாத்தி கோலத்தில் சுவாமி சண்முகர் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது.

காலை 10.30 மணிக்கு மேல் சுவாமி சண்முகர் விஷ்ணு அம்சமாக பச்சை சாத்தி கோலத்தில் எழுந்த ருளி 8 வீதிகளிலும் உலா வந்து மேல கோவில் சேர்தல் நடக்கிறது.

விழாவின் சிகர நிகழ்ச்சி யான 10-ம் திருவிழா தேரோட்டம் வருகிற 2-ந் தேதி(திங்கட்கிழமை) காலை 7 மணிக்கு நடக்கிறது.


விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள் முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## கருட வாகன சேவையின் முக்கியத்துவம்

கருட வாகன சேவை என்பது வைணவக் கோவில்களில், பிரம்மோற்சவம் போன்ற முக்கிய திருவிழாக்களின் போது, திருமால் கருடப் பறவையின் வடிவிலான வாகனத்தில் எழுந்தருளி, திருவீதிகளில் வீதி உலா வரும் நிகழ்வாகும். இது வைணவத்தில் மிக உயர்ந்த தரிசனமாகக் கருதப்படுகிறது, மேலும் இது செல்வத்தையும், மோட்சத்தையும் அளிக்கும் என்று நம்பப்படுகிறது. கருட வாகனம் 'பெரிய திருவடி' என்றும் அழைக்கப்படுகிறது,

மேலும் கருட சேவையின் மூலம் வேதங்கள் உணர்த்தும் பரம்பொருளைத் தரிசிப்பதாகக் கருதப்படுகிறது. பெருமாள், கருட வாகனத்தில் வீதியுலா வரும்போது, பக்தர்கள் அவரை நேரடி தரிசனம் செய்கிறார்கள். கருட வாகனத்தில் பெருமாளைத் தரிசிப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்பது வைணவர்களின் நம்பிக்கை. கருடன் வேதங்களின் வடிவமாக கருதப்படுவதால், கருட சேவையின் போது பெருமாளை தரிசிப்பது, வேதங்களின் சாராம்சத்தை உணர்வதற்கு சமம்.பல வாகனங்களில் பெருமாள் எழுந்தருளினாலும், கருட வாகன சேவை மிகவும் உயர்ந்த மற்றும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பல வைணவக் கோவில்களின் பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வுகளில் கருட சேவையும் ஒன்றாகும். கோவிலுக்குள் வர இயலாத முதியவர்கள், நோயுற்றவர்கள் போன்றோருக்காக இறைவன் கருணையுடன் வீதிக்கு எழுந்தருள்வதாகவும் கருதப்படுகிறது. சுருக்கமாக, கருட வாகனம் என்பது திருமாலின் மிக முக்கியமான வாகனங்களில் ஒன்று. கருட வாகன சேவை என்பது திருமாலின் பேரருளைப் பெற்று, மறுபிறப்பில்லா பேறு அடையும் ஒரு வைணவ வழிபாட்டு முறையாகும்.



## தோஷம் நீக்கும் மச்ச அவதார பெருமாள்

மச்ச அவதாரப் பெருமாளை வணங்கினால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பது நம்பிக்கை. உலகில் அதர்மம் அதிகமாகும் பொழுது தர்மத்தினை நிலைநாட்டுவதற்காக திருமால் அவதாரம் எடுக்கிறார். எண்ணற்ற அவதாரங்களை திருமால் எடுத்திருந்தாலும் மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமண அவதாரம், பரசுராம அவதாரம், ராம அவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என்ற 10 அவதாரங்கள் மட்டும் தசவதாரங்கள் என்று பெருமையாக அழைக்கப்படுகின்றன.

இந்த அவதாரங்களை சற்று உற்றுநோக்கும் போது, இதில் ஒளிந்திருக்கும் பரிணாமக் கொள்கையை அறிய இயலும். டார்வினின் பரிணாம வளர்ச்சி கொள்கை உயிரிகளில் இருந்து மனிதன் தோன்றியதோடு நின்று விடுகிறது.

அதன் பிறகு மனிதனின் பரிணாமம் தொடங்குகிறது. தசவதாரத்தின் முதல் 5 அவதாரங்கள் உயிர்களில் இருந்து மனிதனாக மாற்றம் அடைந்ததை விவரிக்கின்றன. அடுத்த 5 அவதாரங்களும் மனிதனின் படிவளர்ச்சியை விவரிக்கின்றன. மச்ச அவதாரம் (மீன் நீர் வாழ்வன) பிரளய காலத்தில் மீனாக திருமால் அவதாரம் எடுத்து வேதங்களை அபகரித்துக் கொண்டு போய் கடலில் ஒளித்து வைத்திருந்த சோமுகாசுரனைக் கொன்று அழித்து வேதங்களை காப்பாற்றியதாக புராணம் கூறுகிறது.

மீனராசியின் ராசிஅதிபதி குரு பகவான் ஆவார். இது கால புருஷனின் அங்க அமைப்பில் இரண்டு பாதங்களையும் குறிக்கும் நான்காவது உபய ராசியாகும். பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரத்தின் 4-ம் பாதங்களும் மீன ராசிக்குரியவையாகும். சம ராசியான இது பகலில் வலுப்பெற்றதாகும். எந்த கிரகத்தாலும் மீன ராசியில் பிறந்தவர்கள் பாதிப்படைவதில்லை. அதிர்ஷ்ட காற்று எப்பொழுதும் இவர்கள் பக்கம் வீசிக் கொண்டே தானிருக்கும். குரு பகவான் மீன லக்னத்தில் பிறந்தவர்களுக்கு லக்னாதிபதி குரு பகவானே பத்தாம் அதிபதியாகவும் இருப்பது சிறப்பாகும். 10-ம் அதிபதி குரு பகவான் ஆட்சி உச்சம்பெற்று பலமாக அமைந்துவிட்டால் செல்வம், செல்வாக்கு, சமுதாயத்தில் கவுரவமான பதவியினை அடையும் யோகம் உண்டாகும். அது மட்டுமின்றி மற்றவர்களுக்கு ஆலோசனை கூறுவதில் வல்லவராகவும் வழி நடத்துவதில் கைதேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள்.

பேச்சால், வாக்கால் சம்பாதிக்கும் யோகம், ஆசிரியர் பணி, கல்வி நிறுவனங்களில் பணிபுரியக்கூடிய வாய்ப்பு, வங்கிப் பணி போன்றவை சிறப்பாக அமையும். 10-ல் குரு, புதன் சேர்க்கை பெற்றாலும் மேற்கூறிய பலன்களே உண்டாகும். மீனராசி லக்னம் குருவின் ஆதிக்கம் பெற்ற ராசியாகும்.

மீன் சந்திரனின் ஆதிக்கம் பெற்ற நீர்வாழ் உயிரினமாகும். அத்தகைய மீன ராசியில் சந்திரன் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் தினமே மச்ச அவதார மூர்த்தியான மத்ஸ்ய ஜெயந்தியாகும். அந்த காலக்கட்டம் மீன்களின் இனபெருக்க காலம் என்பது குறிப்பிடத்தக்கது. வேத நாராயண பெருமாள் இந்த மத்ஸ்ய ஜெயந்தி வேதம் நாளில் ஓதும் வேதியர்கள், அந்தணர்கள், ஜோதிடர்கள், ஆசிரியர்கள் மற்றும் மீனவர்கள் மீனை உண்பவர்கள் அனைவரும் ஆதி திருவரங்கத்தில் உள்ள ரங்கநாத பெருமாளை வணங்க சாபங்களும், தோஷங்களும் நீங்கி உயர்வு ஏற்படும்.

## செல்வ வளம் அள்ளித்தரும் ஆமலகி ஏகாதசி வழிபாடு

பெருமாளுக்கு உகந்த ஏகாதசி விரதம் அனைத்து விரதங்களை விடவும் மிகவும் புண்ணியம் வாய்ந்தது. ஒருவர் வாழ்நாளில் ஒரே ஒருமுறை ஏகாதசி விரதம் கடைபிடித்தாலும் அவரது வாழ்நாளில் மட்டுமின்றி, அடுத்த பிறவியிலும் கூட அவனுக்கு அது நன்மையை தரும் என்பது நம்பிக்கை.

மாசி மாதம் வளர்பிறை சுக்ல பட்சத்தில் வரும் ஏகாதசி திதியை ஆமலகி ஏகாதசியாக கொண்டாடுகிறோம். ஆமலகி என்றால் நெல்லிக்கனி என்று அர்த்தம். அதனால் இந்த ஏகாதசி அன்று நாம் நெல்லி மரத்தை வழிபாடு செய்வதன் மூலம் மகாவிஷ்ணு மற்றும் மகாலட்சுமியின் அருள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

உலகத்தில் இருக்கக்கூடிய அனைத்து உயிரினங்களும் அழிந்த பிறகு விஷ்ணுவின் உடலில் இருந்து வெளிப்பட்டு பூமியில் விழுந்த ஒரு நீர் துளி தான் நெல்லி மரமாக வளர்ந்தது என்று புராணங்களில் கூறப்படுகிறது.

அதனால் நெல்லி மரத்தில் மகாலட்சுமியும் மகாவிஷ்ணுவும் பரிபூரணமாக குடியிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. நெல்லிக்கனியை தானமாக தருவதன் மூலம் நமக்கு அளவில்லா நன்மைகள் கிடைக்கும். அதே போல் நெல்லிக்கனியில் தீபம் ஏற்றி வழிபாடு செய்வதன் மூலமும் சகல ஐஸ்வர்யங்களும் உண்டாகும்.

அப்படிப்பட்ட நெல்லி மரத்தை இந்த மாசி மாதத்தின் வளர்பிறை ஏகாதசி நாளான நாளை(வெள்ளிக்கிழமை) வழிபாடு செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஏகாதசியும் ஒவ்வொரு பலன்களை தரக் கூடியதாகும். அதே போல் ஒவ்வொரு ஏகாதசியில் பெருமாள் ஒவ்வொரு பொருளிலும் எழுந்தருளி அருள் செய்வதாக ஐதீகம். அப்படி திருமால், நெல்லிக்காய் மரத்தில் எழுந்தருளி வாசம் செய்யும் ஏகாதசி என்பதால் இதற்கு ஆமலகி ஏகாதசி ஆகும். அதனால் தான் இந்த நாளில் நெல்லி மரத்தை பெருமாளாகவும், மகாலட்சுமியாகவும் கருதி பூஜை செய்து, வழிபட வேண்டும் என்கிறார்கள் ஆன்மீக பெரியவர்கள்.

வீட்டில் நெல்லி மரம் இல்லை என்றால், நெல்லி மரம் எந்த இடத்தில் இருக்கிறதோ அந்த இடத்திற்குச் சென்று பூஜை செய்ய வேண்டும். வீட்டில் நெல்லி மரம் இருந்தால் வீட்டிலேயே இந்த பூஜையை செய்து கொள்ளலாம்.


இதற்காக நெல்லி மரத்திற்கு அடியில் கூட்டி சுத்தம் செய்துவிட்டு, நெல்லி மரத்தை சுற்றி மஞ்சள் தண்ணீரை தெளித்து விடவும். பிறகு நெல்லி மரத்திற்கு மஞ்சள் சந்தனம் தடவி, குங்கும பொட்டு வைத்து மரத்திற்கு கீழே அரிசிமாவால் சின்னதாக கோலம் போட வேண்டும்.

கோலப்பொடியை பயன்படுத்தாமல் அரிசி மாவால் கோலம் போட்டுவிட்டு கொஞ்சம் உதிரிபூக்களை எடுத்து அந்த நெல்லி மரத்திற்கு மகாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி அர்ச்சனை செய்ய வேண்டும். மகாலட்சுமி மந்திரத்தை சொல்லி இந்த பூஜையை செய்யலாம்.

கணவனும் மனைவியும் சேர்ந்து இந்த பூஜையை செய்துவிட்டு அந்த மரத்திற்கு கற்பூர ஆரத்தி காண்பித்து வழிபாட்டை நிறைவு செய்ய வேண்டும். இந்த வழிபாட்டில் பழம், பிரசாதம் என்ன வேண்டுமென்றாலும் வைத்து பூஜையை மேற்கொள்ளலாம். இந்த பூஜையில் கட்டாயம் வைக்க வேண்டிய பொருள் 108 ஒரு ரூபாய் நாணயங்கள்.

ஒரு சிறிய கிண்ணத்தில் 108 ஒரு ரூபாய் நாணயத்தை போட்டு அந்த மரத்திற்கு அடியில் வைத்து மனம் உருகி விஷ்ணு பகவானையும் மகாலட்சுமியும் வேண்டிக் கொண்டால், உங்களுக்கான அருள் ஆசி உடனடியாக கிடைக்கும். இறுதியாக கணவன் மனைவி இருவரும் தம்பதியராக அந்த மரத்திற்கு நமஸ்காரம் செய்து பூஜையை நிறைவு செய்ய வேண்டும். குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்து இந்த பூஜையை செய்து பூஜை நிறைவடைந்த உடன் பூஜையில் வைத்த பொருட்களை வீட்டில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பூ, பழம், பிரசாதம் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளலாம். கிண்ணத்தில் வைத்திருக்கும் ஒரு ரூபாய் நாணயங்களை எடுத்து ஒரு மஞ்சள் துணியில் வைத்து முடிந்து, வீட்டில் பணம் வைக்கும் பெட்டியில் வைத்து விடுங்கள்.



ஆமலகி ஏகாதசி விரதத்தை கடைபிடித்தால் ஆயிரம் பசுக்களை தானம்செய்த பலன் கிடைக்கும் என்கின்றனர். ஒரு பசு தானம் செய்தாலே மிகவும் சிறந்தது என்ற நிலையில், ஆயிரம் பசுக்களை தானம் செய்தால் ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கும். கடன் தீரவும் பணப்பிரச்சனை தீரவும் பெருமாள் ஆசியுடன் லட்சுமியின் அருளும் நமக்கு சேர்த்தே தான் கிடைக்க வேண்டும். எனவே அவர்களுக்கே உகந்த ஆமலகி ஏகாதசி நாளில் இந்த வழிபாடு செய்யும் பொழுது அதிக பலனை பெறலாம்.

### குபேரனுக்கே அருள் கொடுத்த நெல்லி

நெல்லிமரம் பூலோகத்தில் உருவான கதை குறித்து புராணங்கள் கூறும் தகவல்கள்...

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் தம்மிடமிருந்த சொத்துக்களை இழந்து தவித்த போது சிவபெருமானிடம் சென்று முறையிட்டார். "நெல்லி மரங்களை நட்டு வளர்த்து விட்டு அவை வளர்ந்ததும் என்னை வந்துப்பார்" என்றார் சிவபெருமான்.

செல்வத்துக்கும் நெல்லிமரத்துக்கும் என்ன சம்பந்தம் என்று யோசித்த குபேரன் சிவபெருமானின் கட்டளை என்பதால் எதுவும் பேசாமல் ஆயிரக்கணக்கான நெல்லி மரங்களை வளர்த்தார். நாள்கள் கடந்து விட்டன. நெல்லி மரங்கள் அனைத்தும் பூ பூத்தன. காய் காய்த்து காய்களெல்லாம் இனித்தன.

குபேரனின் வாழ்வு பழைய நிலைக்குத் திரும்பியது. சூழ்ச்சி செய்து செல்வம் பறித்தவர்கள் அவற்றை எல்லாம் கொண்டு வந்து குபேரனிடம் கொடுத்தார்கள். இழந்த நாடுகள் எல்லாம் திரும்ப கிடைத்தன. குபேரனைவிட பெரிய அரசரெல்லாம் ஓடி வந்து கப்பம் கட்டத் தொடங்கினார்கள்.

குபேரனுக்கு மனம் முழுக்க கேள்விக் கணைகள் எப்படி இது சாத்தியம். மீண்டும் சிவபெருமானிடம் சென்றார். "நெல்லி மரங்கள் வளர்ந்ததா? இழந்த செல்வம் கிடைத்ததா?" என்றார் சிவபெருமான். "நெல்லிமரம் வளர வளர செல்வம் கிடைத்த காரியத்தைப் புரிந்துக் கொள்ள முடியவில்லையே" என்றார் குபேரர்.

நீ வைத்தவை நெல்லி மரங்கள் அல்ல லட்சுமிதேவி. உரிய முறையில் அவற்றுக்கு நீர் ஊற்றினாய். அதனால் செய்த பாவங்கள் தொலைந்து லட்சுமிதேவியின் அருளைப் பெற்றாய்" என்றார் சிவபெருமான்.

மேலும் ஒருநாள் தேவலோகத்தில் இந்திரன் அமுதத்தை உண்ணும்போது அதில் ஒரு துளி பூலோகத்தில் விழுந்ததாம். அதிலிருந்து முளைத்து உண்டானதுதான் நெல்லிமரம். அதனால்தான் இதனை தெய்வீக மரம் என்று சொல்கிறார்கள் என்கின்றன புராணக்கள்.

### இழந்ததை மீட்டு தரும் நெல்லி சாதம் தானம்

பெருமாளின் அம்சமாக கருதப்படுவது நெல்லிமரம். மகாலட்சுமி வாசம் செய்வதாக கருதப்படும் இதற்கு ஹரிபலம் என்றும் பெயருண்டு. ஏகாதசி விரதம் இருப்பவர்கள் மறுநாள் துவாதசி உணவில் நெல்லிக்காயை உணவில் சேர்ப்பது அவசியம். நெல்லிமரத்தடியின் நிழலில் வழங்கும் தானத்திற்கு பலன் அதிகம். நெல்லி மரத்தை தானம் செய்தாலும் பலன்கள் அதிகம் கிடைக்கும். நெல்லி மரத்தை தானம் செய்வதன் மூலம், ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆசை நிறைவேறும்.

நெல்லிக்காயை தானம் செய்வதால் நோய்களில் இருந்து பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய நன்மைகள் பல கிடைக்கும். அதை தானம் செய்வதன் மூலம், நபர் செல்வமும் செழிப்பும் பெறலாம். நெல்லிக்காய் தானம் செய்வதன் மூலம், அறிவு பெற்று மாணவர்கள் வெற்றி பெறுவார்கள்.

வாரம் ஒரு முறை செவ்வாய்க்கிழமை அல்லது வெள்ளிக்கிழமைகளில் நெல்லிக்காயில் செய்த நெல்லிக்காய் சாதம் பிரசாதமாக தயாரித்து கோவிலுக்குச் சென்று அங்குள்ள எளியவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் தானம் செய்யுங்கள். நெல்லி சாதம் தானம் செய்ய செய்ய நீங்கள் இழந்தவை யாவும் திரும்ப அடைவீர்கள். உங்களை ஏமாற்றி அடைந்த சொத்துக்கள் கூட திரும்ப கிடைக்கும். தொலைத்த பொருட்கள் உங்களை தேடி தானாக வந்து சேரும். விட்டு சென்ற உறவுகளும், உங்கள் பிரிவின் துயர் நீக்க உங்களை புரிந்து கொண்டு மீண்டும் உங்களை வந்தடைவார்கள். எளிய இந்த தானத்தை பரிகாரமாக ஆறு வாரங்கள் செய்து பாருங்கள், நல்ல பலன்கள் கிட்டும்.

நெல்லியில் வைட்டமின் சி நிறைந்துள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகிறது மற்றும் நோய்களை எதிர்த்துப் போராட உதவுகிறது. நெல்லிக்காயை உட்கொள்வது செரிமான அமைப்பை மேம்படுத்துவதோடு, அஜீரண பிரச்சனையையும் குறைக்கும். இது சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கும். இதை சாப்பிடுவதால் ரத்தம் சுத்தமாகி சருமத்தில் பொலிவு ஏற்படும்.

ஆன்மீக ரீதியாக நெல்லி நீரில் குளிப்பதை கங்கையில் நீராடி காசியில் வசித்த புண்ணியத்திற்கு சமம் என்கின்றனர். நெல்லி ஆயுள் விருத்தி தரக்கூடியது அதனால் தான் கோபுர உச்சியில் கலசத்திற்கு கீழே நெல்லி வடிவில் ஒரு கல்லை வைப்பார்கள் அதற்கு ஆமலகம் என்று பெயர்.

ஞாயிறு, வெள்ளி, அமாவாசை, சஷ்டி, சப்தமி, நவமி திதிகளில் நெல்லிக்கனியை பயன்படுத்தக் கூடாது. நெல்லி மரமானது நேர்மறை எண்ணங்களை நம்மை சுற்றி உண்டாக்க கூடியது. அவ்வாறு நேர்மறை எண்ணங்கள் நம்ம சுற்றி அதிகம் ஓடும்போது நாமும் நல்லதை பற்றியே யோசிப்போம். மேலும் நெல்லி மரம் லட்சுமியின் அம்சம் என்பதால் வீட்டில் வைத்து வளர்த்து வணங்கி வந்தால் செல்வம் அதிகமாக சேரும்.

### லட்சுமி அருள் தரும் தமிழ் மந்திரம்

நவகிரகங்களில் சுக்கிரனுடைய ஆளுமை பெற்றது நெல்லி. பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நெல்லிமரத்தை வழிபட்டு வந்தால் ஏற்றம் உண்டாகும் என்கின்றன ஜோதிட நூல்கள். பழனியில் உள்ள திருஆவினன்குடி முருகன் ஆலயத்தின் தல மரம் நெல்லி ஆகும். ஆமலகி ஏகாதசி அன்று நெல்லி மரத்துக்கு பூஜை செய்து கீழக்கண்ட லட்சுமி மந்திரத்தை கூற வேண்டும்.

அகலகில்லேன் இறையுமென்று
அலர்மேல் மங்கை உறை மார்பா
நிகரில் புகழாய் உலகம் மூன்று
உடையாய் என்னை ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே
புகல் ஒன்றில்லா அடியேன் உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

## நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் விநாயகர்

நாம் எந்த காரியங்களை தொடங்கினாலும் விநாயகரை வழிபட்டுதான் தொடங்குகிறோம். அனைத்து கோவில்களிலும் விநாயகர் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிப்பார். ஆனால், மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் விநாயகரை நின்ற கோலத்தில் தரிசனம் செய்யலாம்.

பார்வதிதேவி குளிக்க செல்லும் போது விநாயகரை காவலுக்கு நிற்க சொல்லி விட்டு சென்றார். உட்கார்ந்தால் தூங்கி விடுவார் என்று எண்ணிய அன்னை, விநாயகரை நின்று கொண்டே இருக்க வேண்டும் என உத்தரவிட்டார். அதனை ஏற்றுக்கொண்ட விநாயகர் அந்த இடத்தில் நின்று கொண்டே காவல் காத்தார். அதனால் இந்த கோவிலில் விநாயகர் நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

கோவிலின் நுழைவு வாயிலில் அம்மனுக்கு இடதுபுறத்தில் இந்த விநாயகரை நாம் தரிசிக்கலாம். 2 அடி உயரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளார். பக்தர்கள் கோவிலுக்கு சென்றவுடன் முதலில் இந்த விநாயகரைதான் வழிபட்டு செல்கிறார்கள். காரணம் இந்த விநாயகர் அவ்வளவு சக்தி படைத்தவராக அருள் பாலிக்கிறார்.

இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்களது வேண்டுதலை இந்த விநாயகரிடம் வைத்து செல்கிறார்கள். அவர்களுக்கு நினைத்த காரியத்தை விநாயகர் நிறைவேற்றி வருவதாக பக்தர்கள் நம்புகிறார்கள். இந்த விநாயகருக்கு தினமும் பூஜைகள் செய்யப்பட்டு வருகிறது. விநாயகர் சதுர்த்தி உள்பட முக்கிய விழாக்களின் போது சிறப்பு அலங்காரத்தில் விநாயகர் அருள்பாலிப்பார். விநாயகரை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் அவருக்கு உகந்த அருகம்புல் மாலை, வெள்ளெருக்கு மாலை உள்பட பலவித பூக்களை அணிவித்து வழிபட்டு செல்கிறார்கள்.

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்மாசி மண்டலத்திருவிழா

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்மாசி மண்டலத்திருவிழா 2026-26.02.2026-மாலை-சுவாமி, அம்பாள் தங்கரிஷபம், வெள்ளி ரிஷபவாகனம்.சைவசமய ஸ்தாபிதலீலை விளையும் கருக்குழி வீழாமல், என்தன் வினைப் பிறவி களையும் படிக்கும் கருது கண்டாய் - கழுநீரை வென்று வளையும் தரள மணித்தோடு அழுத்திய வள்ளையைச் சென்று அளையும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே!



-குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை சொக்கே நின் தாளே துணை



ஆதம்பாக்கத்தில் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலையினை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.உடன் அமைச்சர் அன்பரசன், ஆர். எஸ்.பாரதி, எம்எல்ஏக்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி உள்ளனர்.



திருத்தணி அரசு கலைக் கல்லூரியில் நிறுவப்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் சிலையை முதல்வர் ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். அந்த சிலைக்கு அமைச்சர் நாசர், எம்எல்ஏக்கள் சந்திரன், கிருஷ்ணசாமி மற்றும் திமுக நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்,

## அகில இந்திய சிகை, அழகு சங்கத்தின் 15வது ஆண்டு விழா



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அகில இந்திய சிகை, அழகு சங்கத்தின் 15வது ஆண்டு விழாவினை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து வாழ்த்தினார்.

## "முதல்வர் திருமண மாளிகை"



ஆலந்துார் புதுத்தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.18.64 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள "முதல்வர் திருமண மாளிகையை" துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்எல்ஏ உள்ளனர்.

## நல்லகண்ணு உடலுக்கு வீரவணக்கம்



நல்லகண்ணு உடலுக்கு வீரவணக்கம் செலுத்திய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, துரைவைகோ எம்.பி.



நல்லகண்ணு உடலுக்கு நடிகர் ரஜினிகாந்த் அஞ்சலி செலுத்தினார்.



நல்லகண்ணு உடலுக்கு தவெக தலைவர் விஜய் அஞ்சலி செலுத்தினார்.



நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்திய தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா,சுதீஷ்.



இந்திய கம்யூ. மூத்த தலைவர் நல்லகண்ணு இறுதிஊர்வலத்தில் கட்சியின் தேசிய தலைவர்கள்.

## தெருமுனை பிரசார கூட்டம்



கோவை கவுண்டம்பாளையத்தில் நடந்த தெருமுனை பிரசார கூட்டத்தில் அதிமுக, பாஜக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## முதல்வர் ஸ்டாலின் மலரஞ்சலி



இந்திய கம்யூ.மூத்ததலைவர் நல்லகண்ணு உடலுக்கு முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி மலரஞ்சலி செலுத்தினர்.

## நல்லகண்ணு உடலுக்கு அரசு மரியாதை



நல்லகண்ணு உடலுக்கு துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு மரியாதை செய்யப்பட்டது.

## நலத்திட்ட உதவி



திருவண்ணாமலையில் ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி, மாவட்ட இணை செயலாள சகானா ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் எஸ்.ராமச்சந்திரன் வழங்கினார்.

## அதிமுகவுக்கு ஆதரவு



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை கொங்கு மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் சந்தித்துஅதிமுகவுக்கு ஆதரவு தெரிவித்தார்.

## தமிழக வியாபாரிகளின் கோரிக்கை



தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரமைப்பின் தலைவர் விக்கிரமராஜா நேற்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து தமிழக வியாபாரிகளின் கோரிக்கை அடங்கிய மனுவை வழங்கினார்.

## ஜெயலலிதா 78 வது பிறந்த தினம்



முன்னாள் முதல்வர் மறைந்த ஜெயலலிதா 78 வது பிறந்த தினத்தை முன்னிட்டு சங்கரன் கோவில் அருள்மிகு சங்கரன் நாராயண சுவாமி திருக்கோவிலில் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி மற்றும்அதிமுகவினர் தங்கத் தேர் இழுத்து வழிபட்டனர்.

## நலத்திட்ட உதவி



கரூரில் ஜெயலலிதா பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் வழங்கினார்.

## வாக்காளர் விழிப்புணர்வு இலட்சினை அறிமுகம்




கோவை மாவட்டத்தின் அடையாளமாக இருவாச்சி பறவையின் வாக்காளர் விழிப்புணர்வு இலட்சினையை கலெக்டர் பவன்குமார் அறிமுகப்படுத்தினார்.

## வாக்குச் சாவடியை கலெக்டர் சினேகா ஆய்வு



குன்றத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி வாக்குச் சாவடியை கலெக்டர் சினேகா ஆய்வு செய்தார்.

## மகளிர் வெல்லும் தமிழ்பெண்கள் பரப்புரை



திருத்தணி சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடியில் ஸ்டாலின் மகளிர் படை மகளிர் வெல்லும் தமிழ்பெண்கள் பரப்புரையில் அமைச்சர் நாசர் பங்கேற்றார்.

## தலைமை ஆசிரியர்களுடன் கலெக்டர் ஆலோசனை



ராமநாதபுரம் மாவட்டத்தில் 10, பிளஸ்1, பிளஸ் 2 பொதுத்தேர்வுகள் குறித்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுடன் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் ஆலோசனை நடத்தினார்.

## அதிமுக தேர்தல் வாக்குறுதிகள் விளக்கப் பொதுக்கூட்டம்



கோவை மாவட்டம், செலக்கரிச்சல் ஊராட்சியில் அதிமுக தேர்தல் வாக்குறுதிகள் விளக்கப் பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வேலுமணி பேசினார்.

## நலத்திட்ட உதவிகள், அன்னதானம்



எம்ஜிஆர், ஜெயலலிதா, எடப்பாடியார் ஆகிய முப்பெரும் தலைவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் அமைச்சர் எஸ்பி வேலுமணி நலத்திட்ட உதவிகள், அன்னதானம் வழங்கினார்.

## பாஜக மாநில தேர்தல் அலுவலக தொடக்க விழா



சென்னை அய்யாவு மஹாலில், பாஜக மாநில தேர்தல் அலுவலக தொடக்க விழாவில் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி முருகன், பொன்.ராதாகிருஷ்ணன், தமிழிசை மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ரவுசு மணி

உலகில் நாம் வாழும் வரை நம்மை யாரும் வெறுக்ககூடாது....

வாழ்ந்து முடிந்த பின் நம்மை யாரும் மறக்க கூடாது....

அது தான் வாழ்க்கையின் வெற்றி

V. முத்து ராமகிருஷ்ணன்



## திட்டக்குடி திருக்குளம் திறப்பு விழா சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்



**கடலூர், பிப்.27:** கடலூர் மாவட்டம் திட்டக்குடி வைத்தியநாத சுவாமி உடனுறை அசனாம்பிகை அம்மன் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளம் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டு புனரமைப்பு பணிக்காக இரண்டு கட்டங்களாக ஒரு கோடியே 27 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்து புனரமைப்பு பணி நடைபெற்று வந்தது.

இதன் திறப்புவிழா நேற்று சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திருக்குளத்தை காணொளி காட்சி மூலம் பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். திட்டக்குடி வைத்தியநாதர் உடனுறை அசனாம்பிகை அம்மன் கோவிலில், மார்ச்., 24ம் தேதி மாசி மகம், வருடாந்திர பிரம்மோற்சவம் தொடங்க உள்ளது.

அதற்காக, திருக்குளத்தை சுத்தம் செய்து, புதிய நீர் நிரப்பும் பணி, தொடங்கியது. திருக்குளத்தை சுத்தம் செய்யும் பணிகள் நிறைவடைந்ததால், பக்தர்களின் பயன்பாட்டிற்கு திருக்குளம் திறந்து விடப்பட்டது.

மேலும், திருக்குளத்திற்கு நேற்று மாலை முதல், ஆரத்தியும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் கோவில் ஆய்வாளர் தமிழ்ச்செல்வி, செயல் அலுவலர் சிவப்பிரகாசம், தாசில்தார் உதயகுமார், ஒன்றிய செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், நகர துணை தலைவர் பரமகுரு, அறங்காவலா குழு தலைவா செந்தில்குமார், அறங்காவலர்கள் ஜோதிமணி, சண்முகம், ஜெயா, சக்திவேல், கோவில் ராஜசேகர், திருக்கோயில் அனைத்து பாணிகள் மற்றும் பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுற்றுலா: சேலத்தில் சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள்!

சேலம் என்றாலே நம் நினைவிற்கு முதலில் வருவது மாம்பழங்கள்தான். சேலம் மாவட்டத்தில் உள்ள ஒரு சில குறிப்பிட்ட சுற்றுலாத்தலங்கள் பார்த்து ரசித்து வியக்கக்கூடிய அளவுக்கு உள்ளன. அப்படிப்பட்ட சேலத்தில் உள்ள சுற்றுலாத்தலங்கள் என்னென்ன என்பதை இப்பகுதியில் பார்ப்போம்.



1. பூலாம்பட்டி ஆறு

சேலத்தில் இருந்து 50 கிலோமீட்டர் தூரத்திலும், மேட்டூரில் இருந்து 20 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது இந்த பூலாம்பட்டி ஆறு. கடல்போல் காட்சியளிக்கும் காவிரி ஆற்றின் ஒரு பகுதியில் இயற்கை மலைகள் சூழ்ந்த இடத்தில் பூலாம்பட்டி கிராமம் அமைந்துள்ளது. பூலாம்பட்டி, "குட்டி கேரளா" என்றும் அழைக்கப்படுகிறது. அதேபோல் ஆற்றில் படகு சவாரி செய்வதற்கும் வாய்ப்புகள் இருக்கிறது.

விசைப்படகில் சென்று வர நபர் ஒருவருக்கு ரூபாய் 30 மட்டுமே கட்டணமாக பெறப்படுகிறது. அதேபோல் குழுவாகவோ, குடும்பமாகவோ மொத்த இயற்கை அழகையும், மலைகளையும் ரசித்து பார்ப்பதற்கு ரூபாய் 300 இல் இருந்து ரூபாய் 500 வரை கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. அதேபோல் இங்கு வாய்க்கு ருசியாக மீன் உணவுகளும் கிடைக்கிறது.

2. சங்ககிரி மலைக்கோட்டை

சேலத்தில் இருந்து 35 கிலோமீட்டர் தொலைவிலும் ஈரோட்டிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலும் இந்த சங்ககிரி மலைக்கோட்டை அமைந்துள்ளது. இந்த மலைக்கோட்டைகளில் ஒன்பது கோட்டைகள் உள்ளன. விஜயநகர பேரரசுகள் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இந்த கோட்டைகளானது கட்டப்பட்டன.

இந்த கோட்டையை பார்வையிட, காலை 6:00 மணி முதல் மாலை 6 மணி வரை சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. என்ன ஒருசிறப்பு என்றால் நுழைவுகட்டணம் எதுவும் கிடையாது. கோட்டையில் உள்ளே ஹிந்து, முஸ்லிம் போன்ற வழிபாட்டு தளங்கள் உள்ளன. இந்த சங்ககிரி மலையில்தான், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் 1805 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் தேதி சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை ஐயா தூக்கிலிடப்பட்டார். மலைக்கோட்டையில் இருந்து பார்க்கும் பொழுது இயற்கையழகும், அந்த மலைத் தொடர்களும் உள்ளங்களை வருடி செல்லும்.

3. முட்டல் ஏரி

சேலம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் கல்லாநத்தம் கிராமத்தின் வடக்கு பகுதியில் சுமார் 3 கிலோமீட்டர் தூரத்தில் முட்டல் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி பரந்து விரிந்த இயற்கை அழகுடன் காணப்படும். படகு சவாரி செய்வதற்கு நபர் ஒருவருக்கு ரூபாய் 50 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆத்தூரில் இருந்து முட்டல் பகுதிக்கு செல்வதற்கு டவுன் பஸ்கள் இயக்கப்படுகின்றன கட்டணம் ரூபாய் 12 ஆகும். அதேபோல் இந்த ஏரியிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஆனைவாரி நீர்வீழ்ச்சி காணப்படுகிறது. மழைக்காலமான அக்டோபர், நவம்பர், டிசம்பர் போன்ற மாதங்களில் மட்டும்தான் நீர்வீழ்ச்சியில் குளிக்கலாம்.

4. குரும்பம்பட்டி உயிரியல் பூங்கா

சேலம் பழைய பஸ் நிலையத்தில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவிலும், சேலத்திலிருந்து ஏற்காடு செல்லும் சாலையில் உள்ள கோரிமேட்டில் இருந்து சுமார் 6 கிலோமீட்டர் தொலைவிலும், இந்த பூங்கா அமைந்துள்ளது. இந்த குரும்பம்பட்டி பூங்காவனது 78 1/2 ஏக்கரில் அமைந்துள்ளது. புள்ளிமான், கடமான், நரி, குரங்கு, முதலை, ஆமை, மயில், மலைப்பாம்பு, வெளிநாட்டு நீர் பறவைகள் உட்பட 22 வகையான உயிரினங்களை இப்பூங்காவில் காணமுடியும்.

சேலம் பழைய பஸ் நிலையத்தில் இருந்து குரும்பட்டிக்கு தினமும் காலை 4:45 மணி முதல் மாலை 6:30 மணி வரை டவுன் பஸ்கள் ஒரு நாளைக்கு 12 முறை இயக்கப் படுகின்றன. கட்டணமாக பெரியவர்களுக்கு ரூபாய் 50, 6 வயது முதல் 12 வயது உட்பட்டவர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் ரூபாய் 10 வசூலிக்கப்படுகிறது.

5. மேட்டூர் அணை

காவிரி ஆற்றுக்கு இடையே கட்டப்பட்டுள்ள தமிழகத்தின் மிகப்பெரிய அணைகளில் மேட்டூர் அணையும் ஒன்றாகும். 1934 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஸ்டேன்லி நீர்த்தேக்கம் என்ற மற்றொரு பெயரும் இந்த அணைக்கு உண்டு. சேலத்தில் இருந்து 58 கிலோமீட்டர் தொலைவிலும், ஈரோட்டில் இருந்து 55 கிலோமீட்டர் தொலைவிலும், இந்த மேட்டூர் அணை அமைந்துள்ளது.

இதற்கு பஸ் கட்டணம் ரூபாய் 32. அணையின் வலது கரை நுழைவு வாயில் பகுதியை பார்வையிட ரூபாய் 10ம், பவள விழா கோபுரத்தில் லிப்டில் சென்று மேட்டூர் அணையின் மொத்த இயற்கை எழில் தோற்றத்தை கண்டு ரசிக்க ரூபாய் 30-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அருகிலேயே அமைந்துள்ள அணைப் பூங்காவுக்கு நுழைவு கட்டணம் ரூபாய் 10. அதேபோல் பிரசித்தி பெற்ற முனியப்பன் கோவிலும் மேட்டூர் அணைக்கு அருகிலேயே உள்ளது.

6. ஏற்காடு

ஏற்காடு ஒரு அழகான மலை வாழிடம். சேலத்திலிருந்து 31 கிலோமீட்டர் தொலைவில் ஏற்காடு அமைந்துள்ளது. இயற்கை எழில் சூழ்ந்த இடமாகும், பசுமையான காடுகள், அருவிகள் மற்றும் ஏரிகள் உள்ளன. கிள்ளியூர் அருவி, லேடி சீட், பகோடா முனை, யானைக்கல் குகை போன்ற இடங்கள் ஏற்காட்டைச் சுற்றி அமைந்துள்ளது. மலைகளில் இருந்து பார்க்கும் பொழுது ஏற்காட்டின் ரம்மியமும் இயற்கை அழகும் எழில் கொஞ்சும் அளவுக்கு காணப்படும்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## பெட்ரோலியம் நிறுவனத்தில் சேர விருப்பமா...

பொதுத்துறையை சேர்ந்த ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் (எச்.பி.சி.எல்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'கிராஜூவேட் அப்ரெண்டிஸ்' பிரிவில் மஹாராஷ்டிரா 114, ஆந்திரா 62, கர்நாடகா 44, உ.பி., 40, ராஜஸ்தான் 39, மேற்கு வங்கம் 37, தமிழகம் 35 உட்பட மொத்தம் 612 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,

வயது: 18-25 (2.3.2026ன் படி)

ஸ்டைபண்டு: மாதம் ரூ. 25,000

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 2.3.2026

விவரங்களுக்கு: hindus tanpetroleum.com

## டில்லி அரசில் இன்ஜினியர் பணி



டில்லி அரசில் இன்ஜினியர் பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அசிஸ்டென்ட் செக்சன் ஆபிசர் 587, ஜூனியர் இன்ஜினியரிங் (சிவில்) 314, சட்ட உதவியாளர் 10 உட்பட மொத்தம் 911 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ.,/ பி.டெக்., / பட்டப்படிப்பு / பி.எல்., வயது: 18-30 (25.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஸ்கில் தேர்வு, டிரேடு தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 25.3.2026

விவரங்களுக்கு: dsssb.delhi.gov.in

## கன்னட நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்திய வழக்கில் 9 பேரின் மனு தள்ளுபடி

**சென்னை, பிப்.27:**

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகேயுள்ள தொட்டகஜனூரில் உள்ள அவரது பண்ணை வீட்டில் தங்கியிருந்த கன்னட நடிகர் ராஜ்குமார், கடந்த 2000-ம் ஆண்டு ஜூலை 30-ம் தேதி, சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகளால் கடத்தப்பட்டார். 108 நாட்கள் பிணைக் கைதியாக ராஜ்குமார் வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கப்பட்டார். ராஜ்குமார் கடத்தல் தொடர்பாக வீரப்பன் மற்றும் கூட்டாளிகள் சேத்துக்குளி கோவிந்தன், சந்திரகவுடா, கோவிந்தராஜ், அன்றில், பசுவண்ணா, புட்டுச்சாமி, கல்மண்டிராமன், மாறன், செல்வம், அமிர்தலிங்கம், நாகராஜ் உள்பட 14 பேர் மீது தாளவாடி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகள் சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கவுடா ஆகியோர் 2004 அக்டோபரில் என்கவுன்ட்டர் மூலம் கொல்லப்பட்டனர். மீதமுள்ளவர்கள் மீதான வழக்கு கோபிசெட்டிப்பாளையம் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. வழக்கு விசாரணையில் இருந்தபோது, மல்லு என்பவர் இறந்து போனார். ரமேஷ் என்பவர் தலைமறைவானார். மீதமிருந்த கோவிந்த ராஜ், அன்றில், பசுவண்ணா, புட்டுச்சாமி, கல்மண்டி ராமன், மாறன், செல்வம், அமிர்தலிங்கம், நாகராஜ் ஆகிய 9 பேர் மீதான வழக்கை விசாரித்த கோபி நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட 9 பேரையும் விடுதலை செய்து 2018-ல் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து சிபிசிஐடி தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்நிலையில், இந்த மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

## சென்னையில் "வாட்டர் எக்ஸ்போ:" துவக்கம்

**சென்னை, பிப். 27:**

நீர் பாதுகாப்பு, தொழில்துறை நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு இந்தியா அதிக கவனம் செலுத்தி வரும் நிலையில், 'வாட்டர் எக்ஸ்போ சென்னை 2026' இம்மாதம் 26ந் தேதி முதல் 28ந் தேதி வரை சென்னை டிரேடு சென்டரில் நடைபெறுகிறது. "வாட்டர் டுடே" நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இந்த மூன்று நாள் கண்காட்சியில், இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து 200-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இதன் மூலம் நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மைத் தீர்வுகளுக்கான பிராந்தியத்தின் முக்கியமான தகவல் தளமாக இது திகழவுள்ளது. இந்த கண்காட்சியில் குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகள், தொழிற்சாலை கழிவுநீர் சிகிச்சை முறைகள், மறுசுழற்சி மற்றும் மீள்பயன்பாட்டு தொழில்நுட்பங்கள், கடல் நீர் சுத்திகரிப்பு வசதி மெம்பிரேன் தொழில்நுட்பங்கள், பம்புகள், வால்வுகள், தானியங்கி மற்றும் கண்காணிப்பு அமைப்புகள், சிறப்பு இரசாயனங்கள், பரிசோதனை உபகரணங்கள், ஸ்மார்ட் நீர் மேலாண்மை தீர்வுகள் உள்ளிட்ட பல்வேறு தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்த நிகழ்வு தொழிற்துறைகள், மின்சாரம் மற்றும் நீர்வழங்கும் நிறுவனங்கள், நகராட்சிகள், ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் மேம்பட்ட, நிலையான நீர் தீர்வுகளைத் தேடும் தொழில்நுட்ப கொள்முதல் நிறுவனங்களை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகிறது.

## திருப்பதி பக்தர்களுக்கு தேவஸ்தானம் வெளியிட்ட முக்கிய அறிவிப்பு: நாமம் வைத்த பிறகே மாற்று மதத்தினருக்கு அனுமதி

**திருப்பதி, பிப்.27:**

திருமலை திருப்பதி ஏழுமலையான் பக்தர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்படும் புரோக்கர்கள் மற்றும் போலி இணையதளங்களை நம்பி பக்தர்கள் யாரும் ஏமாற வேண்டாம் என திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.



திருப்பதியில் மீண்டும் போலி இணையதளங்கள் :

கேரளாவை சேர்ந்த திருப்பதி பக்தர்கள் ஒருவர், "*Karnataka Pravasi Soudha*" என்று பெயரில் இயங்கிய அமைப்பு, திருமலையில் தங்குவதற்கான அறைகள் ஏற்பாடு செய்து தருவதாக கூறி தன்னை ஏமாற்றி விட்டதாக திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு புகார் அனுப்பி இருந்தார். இந்த புகாரின் அடிப்படையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் விஜிலன்ஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், அதிகாரப்பூர்வமற்ற சில நபர்கள், திருப்பதி ஏழுமலையான் கோவில் மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பெயர் மற்றும் புகைப்படங்களை பயன்படுத்தி பல போலி இணையதளங்களை துவக்கி, அதன் மூலம் பக்தர்களை ஏமாற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த போலி இணையதளத்தில் கூகுள் தேடுதலில் அதிகமாக முதலில் வரும் வகையில் செய்து, அந்த இணையதளத்தில் மூலம் தரிசன டிக்கெட், தங்கும் அறை முன்பதிவு செய்பவர்களிடம் ஆன்லைன் மூலமாக பணம் பெற்று ஏமாற்றி வந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் வருமான வரித்துறையிடம் புகார் அளிக்கப்பட்டது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் பெயரில் இயங்கி வரும் போலி இணையதளங்கள் மீது போலீசார் சட்ட ரீதியான நடவடிக்கையை துவக்கி உள்ளனர். முறைகேடாக திருப்பதி கோவில் படங்கள் மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் முத்திரையை பயன்படுத்தியதாக வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

தேவஸ்தானம் வேண்டுகோள் :திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்வதற்கு டிக்கெட் புக் செய்பவர்களும், தங்கும் அறைகள் புக் செய்பவர்களும், சேவா டிக்கெட்கள் பெற விரும்புபவர்களும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான *ttdevasthanams.ap.gov.in* என்ற இணையதளத்தின் மூலம் மட்டுமே முன்பதிவு செய்யும் படி திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களை மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

ஏதாவது சந்தேகப்படும் வகையிலான இணையதளங்கள், தொலைப்பேசி அழைப்புகள், சலுகை விலை அறிவிப்புகளை கண்டால் அல்லது உங்களை தொடர்பு கொள்ள முயற்சி செய்தால் உடனடியாக பக்தர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் விஜிலன்ஸ் பிரிவை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கவும். இதனால் பக்தர்கள் பலரும் மோசடி நபர்களின் வலையில் சிக்காமல் பாதுகாக்க முடியும் என்றும் திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பதியில் கடந்த வாரம் கூட்டம் குறைந்திருந்த நிலையில் கடந்த சில நாட்களாக மீண்டும் பக்தர்கள் கூட்டம் அதிகரிக்க துவங்கி உள்ளது. திருப்பதியில் வருடாந்திர தெப்போற்சவம் 2026 துவங்குவதற்கு இன்னும் சில நாட்களே உள்ளதால் அதற்கு முன் ஏழுமலையானை தரிசனம் செய்து விடலாம் என அதிகமான பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். திருப்பதியில் தற்போது தினமும் 70,000 முதல் 75,000 வரையிலான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இலவச தரிசன வரிசையில் சென்று சாமி தரிசனம் செய்வதற்கு 12 முதல் 18 மணி நேரமும், ரூ.300 சிறப்பு தரிசன வரிசையில் சென்று சாமி தரிசனம் செய்வதற்கு 8 முதல் 10 மணி நேரமும் ஆகிறது.

### திருப்பதியில் நெற்றியில் நாமம் வைத்த பிறகே மாற்று மதத்தினருக்கு அனுமதி

திருப்பதி ஏழுமலையான் கோவில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. தரிசன வரிசையில் இனி கடுமையான விதிமுறைகள் அமல்படுத்தப்பட உள்ளன. அமிர்தசரஸ் தங்கக் கோவிலில் உள்ளது போல் திருப்பதி கோவிலுக்கும் தனி சட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. அதன்படி, தரிசனத்திற்கு செல்லும் பக்தர்கள் ஸ்கேனிங் மையம் அருகே உள்ள புத்தகத்தில் கையெழுத்திட்ட பிறகே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இதேபோல், இந்து மதத்தைச் சாராத மாற்று மதத்தினர்கள் தரிசனம் செய்ய விரும்பினால், "இந்து கடவுளை நம்புகிறோம். இந்து கடவுள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் பொட்டு வைத்துக் கொள்கிறோம்" என உறுதிமொழிக் கடிதம் எழுதி கொடுத்த பிறகே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். அதேபோல், தரிசனத்திற்கு செல்லும் மாற்று மதத்தினர் கட்டாயம் நெற்றியில் நாமம் அணிந்த பிறகே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பதியில் 22,869 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.4.05 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது.

## 80 வயது பெண்ணுக்கு வயிற்றில் இருந்த கட்டியை ஆபரேஷன் இல்லாமல் அகற்றிய அப்பல்லோ மருத்துவர்கள்

**சென்னை, பிப்.27:**

தேனாம்பேட்டையில் உள்ள அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, 80 வயது பெண்ணுக்கு பெருங்குடலில் பக்கவாட்டில் பரவியிருந்த 15 செ.மீ அளவு கொண்ட கட்டியை அகற்றியுள்ளது. திறந்த அறுவை சிகிச்சை இல்லாமல் எண்டோஸ்கோபிக் குறைந்த பட்ச ஊடுருவும் எண்டோஸ்கோபிக்செயல்முறை மூலம் சிகிச்சை அளித்தது. இந்த குறைந்த அளவு ஊடுருவும் சிகிச்சை தமிழ்நாட்டில் முதன்முறையாக அப்பல்லோவில் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த பாலிப் கட்டி புற்றுநோயாக மாறுவதற்கு வாய்ப்புகள் அதிகம். கட்டியின் அளவு மற்றும் அவை இருக்கும் இடம் கவனத்தில் கொண்டு, இவருக்கு மேம்பட்ட எண்டோஸ்கோபிக்நிபுணத்துவம் மற்றும் துல்லியமான சிகிச்சை தேவையாக இருந்தது.

தேனாம்பேட்டை அப்பல்லோ மருத்துவக்குழு நோயாளிக்கு நவீன மருத்துவ சிகிச்சை முறையைத் தேர்வு செய்தது. இது இரைப்பை - குடல் பாதையில் இருக்கும் ஆரம்ப கட்ட கட்டிகளை எண்டோஸ்கோப் கருவி மூலம் அகற்றும் நவீன சிகிச்சை முறையாகும். இதன் மூலம் நோயாளிக்கு 15 செ.மீ. அளவிலான கட்டி இருந்த நிலையில் முழு கட்டியும் வெற்றிகரமாக அகற்றப்பட்டது.

நோயாளி நீண்ட காலம் படுக்கையில் இல்லாமல் விரைவில் மீட்பு நிலைக்கு திரும்பவும் இந்த நவீன சிகிச்சை உதவியது. மேலும் பரிசோதனை முடிவுகள், இந்த கட்டி புற்றுநோயல்லாதது என்பதை உறுதிப்படுத்தின.

பெரிய அறுவை சிகிச்சைக்கு பொருத்தமற்ற வயதான நோயாளிகளுக்கு இந்த மேம்பட்ட சிகிச்சை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இது உறுதிப்படுத்துகிறது என்றார் தேனாம்பேட்டை அப்பல்லோ மருத்துவமனை இரைப்பை- குடல்- கல்லீரல் நோய்கள் மற்றும் மேம்பட்ட எண்டோஸ்கோபி துறை தலைவர் டாக்டர் ஆர்.ரவி.

கரண் பூரி, (தலைமை செயல் அதிகாரி) அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை தேனாம்பேட்டை பேசுகையில், "சிக்கலான நிலைமைகளுக்கு குறைந்தபட்ச ஊடுருவும் சிகிச்சை வாய்ப்புகளை வழங்கும் வகையில், மேம்பட்ட தொழில்நுட்பங்களிலும் சிறப்பு நிபுணத்துவத்திலும் அப்பல்லோ மருத்துவமனைகள் தொடர்ந்து முதலீடும் உரிய கவனமும் செலுத்தி வருகின்றன என்றார்.

## 21 வயது பெண்ணுக்கு 20 செ.மீ. சினைப்பை நீர்க்கட்டி அகற்றி சாதனை

**சென்னை, பிப்.27:**

தகவல் தொழில்நுட்ப துறையில் பணிபுரியும் 21 வயதுடைய பெண்ணுக்கு 20செ. மீ. அளவில் பெரிய சினைப்பை நீர்க்கட்டி இருந்தது. சினைப்பை முறுக்கிக் கொண்டு அதன் ரத்த ஓட்டம் தடைப்பட்டதால், அவருக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. இதனால் அவர் சென்னையில் உள்ள வி.எஸ். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவர்கள் அந்த பெண்ணுக்கு கட்டியை அகற்றுவதோடு, எங்கும் பரவியுள்ளதா என்பதையும் கண்டறிய உடனடியாக 'லேப்ரஸ்கோபி' என்னும் திறந்தநிலை வயிற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர். பின்னர் இக்கட்டி அதனுடன் இணைந்திருந்த பாதிக்கப்பட்ட கருக்குழாயுடன் சேர்த்து முழுமையாக அகற்றப்பட்டது.

அதே நேரத்தில் அவர் எதிர்காலத்தில் தாயாவதை உறுதி செய்வதற்காக ஆரோக்கியமான மற்றொரு சினைப்பை மற்றும் இனப்பெருக்க உறுப்புகள் பாதிப்பு ஏதுமின்றி கவனமாக பாதுகாக்கப்பட்டன. சிலவகையான சினைப்பை கட்டிகளால் குடல்வால் பாதிக்க வாய்ப்புள்ளது என்பதால், குடல்வாலும் இந்த ஆபரேஷன் அகற்றப்பட்டது.

# மூலிகை வளர்ப்பால் மண்ணும், விவசாயிகளும் நலன் பெறுவர்: குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு!

பல்தானா, பிப்.27:

மூலிகைச் செடிகளை நடுவதால், விவசாயிகளின் வருமானம் பெருகி அவர்களின் நிதிநிலை மேம்படும், அதேபோல் மண் வளமும் மேம்படும் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம், பல்தானாவில் மத்திய ஆயுஷ் அமைச்சகம், அனைத்து இந்திய ஆயுர்வேத சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டின்கீழ் புதன்கிழமை (பிப்.25) முதல் 28-ஆம் தேதி வரை தேசிய ஆரோக்கிய கண்காட்சி நடைபெறுகிறது. இதன் தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கண்காட்சியை தொடங்கி வைத்து திரௌபதி முர்மு பேசியதாவது:




வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவ, நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பது அவசியம். ஆரோக்கியமான குடிமகன்கள்தான், நாட்டை வலிமையாக உருவாக்கும் பணியில் முக்கிய பங்கு வகிக்க முடியும். நோய் தடுப்பால் தனிமனிதர்களுக்கு பலன்கள் கிடைப்பதோடு, மருத்துவத்துக்காக அரசு செய்யும் செலவினம் குறையவும் வழிவகுக்கும். மூலிகை செடி வளர்ப்பதால், மருந்துகளுக்கு தேவையான மூலப் பொருள்கள் கிடைக்க வழி ஏற்படும். அதேபோல் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படாது.

மூலிகை செடி வளர்ப்பால், விவசாயிகளின் பொருளாதார நிலை மேம்படும். மூலிகைச் செடியை வளர்ப்பது, மண் வளத்தை மேம்படுத்தவும், அந்த வளத்தை பாதுகாக்கவும் உதவும்.

மனிதர்களின் உடலுக்கு தேவையான அனைத்தும் இயற்கையிடமே உள்ளது. ஆனால் தற்போது காலம் மாறிவிட்டதால், நாம் மருந்துகளுக்காக மற்றவர்களை சார்ந்துள்ளோம். வனப்பகுதி தற்போது மறைந்து வருகிறது. வனப்பகுதிக்கு தீவைக்கப்படுகிறது, ஆயுர்வேத மருந்து செடிகள், மூலிகை செடிகள் அழிக்கப்படுகின்றன. ஆதலால் அந்த மூலிகை செடிகள் குறித்து அரசு மட்டுமல்லாது, நாம் அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

நல்ல ஆரோக்கியத்துக்காக அந்த மூலிகை செடிகளை நட்டு வளர்க்க வேண்டும். மூலிகை செடிகளை வளர்ப்பதில் அரசை நாம் சார்ந்திருக்கக் கூடாது. நாட்டு மக்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதில், ஆயுர்வேத மருந்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதேபோல் யோகாவும், ஆயுர்வேதமும் தற்போதுள்ள மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் முன்பிருந்தே மக்களின் நோயை தீர்த்து வருகின்றன.

## விளையாட்டு செய்திகள்

### சென்னையில் 8-வது தமிழ்நாடு புதுச்சேரி யோகா சாம்பியன் போட்டி: 691 பேர் பங்கேற்பு

சென்னை, பிப்.27:

தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் யோகாசன அசோசியேசன், சென்னை போர்ட் சிட்டி ரோட்டரி கிளப் மற்றும் பத்மம் யோகா அண்ட் நேச்சுரல் லிவ்விங் ஆகிய அமைப்புகள் இணைந்து 8-வது தமிழ்நாடு புதுச்சேரி யோகா சாம்பியன்ஷிப் போட்டியை நடத்தின. தி.நகர் ராமகிருஷ்ணா மெட்ரிகுலேசன் பள்ளியில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் யோகாசன அசோசியேசன் தலைவர் பாபு தலைமை தாங்கினார். துணைத்தலைவர் நந்தகுமார் வரவேற்புரையாற்றினார்.

இப்போட்டியில் மொத்தம் 691 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். அவர்களை 10 பேர் அடங்கிய நடுவர் குழுவினர் வயதிற்கேற்ப 6 பிரிவுகளாகப் பிரித்துத் தேர்வு செய்தனர். இதில் முதலிடம் பிடித்த 5 யோகா வித்தகர்களுக்கு, தமிழ்நாடு முறுக்கு, சிப்ஸ், மிக்சர் தயாரிப்பாளர்கள் சங்கச் செயலாளரும் தொழிலதிபருமான மா.தங்கச்சாமி பரிசு கோப்பைகளை வழங்கினார்.

மேலும், மேற்கு மாம்பலம் வியாபாரிகள் சங்கச் செயலாளர் நெல்லை சிவராஜ் வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார். இப்போட்டிக்கு அதிக அளவிலான போட்டியாளர்களைத் தயார் செய்து அழைத்து வந்தமைக்காக, ஆவடி மகரிஷி பதஞ்சலி யோகா பள்ளித் தலைவர் ராம்குமார் மற்றும் நங்கநல்லூர் ஸ்ரீசன் யோகா பயிற்சி மையத் தலைவர் கேசவ பிரகாஷ் ஆகிய இருவருக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் நிறைவாகச் செயலாளர் ரவி ஆறுமுகம் நன்றி கூறினார்.

### குத்துச்சண்டைப் போட்டி: ஸ்கொயர் பாக்சிங் கிளப் சாம்பியன் பட்டம் வென்றது

சென்னை, பிப்.27:

தகை சால் விருது பெற்ற முதும்பெரும் கம்யூனிஸ்ட் தலைவர் நல்லக்கண்ணுவின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு (போதையை தவிர்த்து விளையாட்டில் கவனம் செலுத்து என்ற முழக்கத்துடன்) எவர்லாஸ்ட்பிரேவ் குத்துச்சண்டை மையமும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் தமிழ்நாடு குத்துச்சண்டை சங்கம் இணைந்து நடத்திய மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டி சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் நடந்தது.

300க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றார்கள். போட்டியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும் மற்றும் பிற மாநிலங்களில் இருந்தும் வீரர்கள் கலந்து கொண்டனர்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, அர்ஜுனா விருது பெற்ற பாஸ்கரன், "யாத்திசை" பட இயக்குநர் தரணிராஜேந்திரன், "வானரன்" இயக்குநர் ஸ்ரீராம், நல்லகண்ணுவின் பேரன் சதிஷ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளையும், கோப்பைகளையும் வழங்கினர். போட்டியின் வெற்றிக்கு சர்வதேச தொழில்முறை குத்துச்சண்டை வீரர் தோழர் பாலி சதீஷ்வர், வட சென்னை மாவட்ட கம்யூனிஸ்ட் செயலாளர் வெங்கடேஷ் வேம்புளி, ராமமூர்த்தி, லோகசந்திரன் ஆகியோர் துணை நின்றனர்.

திருவொற்றியூர் ஸ்கொயர் பாக்சிங் அணி சாம்பியன் பட்டம் பெற்று, பரிசுக் கோப்பையை வென்றது.

# அசாமில் கொடூர சம்பவம்; காதலன் கண்முன்பு இளம்பெண் கூட்டு பலாத்காரம்

கச்சார், பிப்.27:

அசாம் மாநிலம் கச்சார் மாவட்டத்தைச் சேர்ந்த 28 வயது இளம்பெண் ஒருவர் தனது காதலனுடன் காரில் சென்று கொண்டிருந்தார். இந்த நிலையில் சில்சார் நகருக்கு அருகே சென்ற போது காரை சாலையோரம் நிறுத்திவிட்டு இருவரும் தனிமையில் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென அங்கு காரில் வந்த 7 பேர் கொண்ட கும்பல், அவர்களிடம் "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று விசாரித்து மிரட்டினர். பின்னர் அவர்களில் சிலர் காதலனை தாக்கி பிடித்துக் கொண்டனர். அவர் கண் முன்னே இளம்பெண்ணை ஒருவர் பின் ஒருவராக பாலியல் பலாத்காரம் செய்தனர். இளம்பெண் தன்னை விட்டுவிடுமாறு கையெடுத்து கும்பிட்டு கெஞ்சியும், ஈவு இரக்கம் இல்லாத அந்த கும்பல் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டது.

மேலும் அவர்களை மிரட்டி ஆன்லைன் மூலம் வங்கிக் கணக்கில் இருந்து ரூ.10 ஆயிரத்தை பறித்து அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட இளம்பெண் இது குறித்து போலீசில் புகார் அளித்தார். இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த வழக்கில் தொடர்புடைய இருவரை போலீசார் அடையாளம் கண்டு கைது செய்தனர். அவர்கள் சில்சார் நகரத்தின் ஆசிரம சாலைப் பகுதியைச் சேர்ந்த நிலோத் பால் தாஸ் (25) மற்றும் சுபோல் தாஸ் (27) என்பது தெரியவந்தது.

மற்றவர்களை தேடும் முயற்சியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து போலீசார் கூறும்போது, பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் அவரது வாக்குமூலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தப்பியோடியவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தனர். இதுகுறித்து சமூக ஊடகங்களில் பொதுமக்கள் கோபமாக தங்கள் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கிடையே, இந்த சம்பவத்தைப் பற்றி செய்தி வெளியிட்ட சில்சாரைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளரை, குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரின் குடும்பத்தினர் தாக்கியதாகக் கூறப்படுகிறது. போலீஸ் நிலையம் அருகே தன்னை அவர்கள் தடுத்து நிறுத்தி தாக்கியதாகவும், பின்னர் அங்கிருந்தவர்களால் காப்பாற்றப்பட்டதாகவும் அந்த பத்திரிகையாளர் கூறினார்.

இந்த தாக்குதல் தொடர்பாக அவர் அளித்த புகாரின் பேரில் மேலும் ஒருவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

# கேரள மக்களுக்கு பூர்விக அட்டை: பேரவையில் மசோதா நிறைவேற்றம்!

புதுடெல்லி, பிப்.27:

கேரள மக்களுக்கு பூர்விக அடையாள அட்டை வழங்கும் மசோதா சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

கேரளத்தில் பிறந்தவர்கள் அல்லது வெளிநாட்டு குடியுரிமை பெறாத மூதாதையர்களில் யாரேனும் ஒருவர் கேரளத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின் அவர்களுக்கு பூர்விக அடையாள அட்டை வழங்க இந்த மசோதா வழிவகை செய்கிறது.

முன்னதாக, சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவச முறைகேடு, சபரிமலை கோயிலுக்குள் அனைத்து வயது பெண்களையும் அனுமதிப்பது தொடர்பான வழக்கு, சபரிமலை ஐயப்ப பக்தர்கள் மாநாடு நிதி முறைகேடு குற்றச்சாட்டு போன்ற விவகாரங்களை எழுப்பி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்) உறுப்பினர்கள் பேரவையில் வெளிநடப்பு செய்தனர்.

இதனால் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையில் இல்லாதபோதும் பூர்விக அடையாள அட்டை



மசோதா 2026, பேரவையில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது. இதுதவிர மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்தும் அப்காரி (திருத்த) மசோதா 2026, கேரள வழக்குரைஞர்களின் உதவியாளர்கள் நலனுக்கான நிதி (திருத்த) மசோதா 2026 மற்றும் கேரள வழக்குரைஞர்கள் நலனுக்கான நிதி (திருத்த) மசோதா 2026 ஆகியவையும் நிறைவேற்றப்பட்டன.

பினராயி விஜயன் கண்டனம்: பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த எதிர்க்கட்சிகளுக்கு கண்டனம் தெரிவித்து முதல்வர் பினராயி விஜயன் பேசியதாவது: கேரளத்தில் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் ஆக்கபூர்வமானதாக இல்லை. அவர்கள் விவாதத்துக்கு அஞ்சி வெளிநடப்பு செய்கின்றனர்.

பேரவைத் தேர்தலுக்கு முன்பாக நடைபெறும் கூட்டத்தொடரின் கடைசி நாளான இன்றும்கூட அவர்களால் பொறுப்புடன் செயல்பட முடியவில்லை. அரசு நிர்வாகத்தின் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி பேரவை அலுவல்களை முடக்க எதிர்க்கட்சியினர் தீட்டிய சதித் திட்டம் முறியடிக்கப்பட்டது. இடதுசாரிகள் அரசை விமர்சிக்க எவ்வித காரணமும் இல்லாததால் எதிர்க்கட்சியினர் கூண்டோடு வெளியேறிவிட்டனர் என்றார்.

மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றம்: எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியால் பட்ஜெட் கூட்டத்தொடரைதிட்டமிட்டபடி நடத்த முடியவில்லை என பேரவைத் தலைவர் ஏ.என். ஷம்சீர் தெரிவித்தார்.

# மேற்கு வங்க எஸ்ஐஆர்: 'அடையாள சரிபார்ப்புக்கு 10-ஆம் வகுப்பு சேர்க்கை சான்றிதழ்களை பயன்படுத்தலாம்'!

புதுடெல்லி, பிப்.27:

மேற்கு வங்க வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியில், ஒருவரின் அடையாள சரிபார்ப்புக்கு பிற ஆவணங்களுடன் 10-ஆம் வகுப்பு சேர்க்கை மற்றும் தேர்ச்சி சான்றிதழ்களைக் கூடுதல் ஆவணங்களாகப் பயன்படுத்தலாம் என்று உச்சநீதிமன்றம் புதன்கிழமை தெளிவுபடுத்தியது.

மேற்கு வங்க எஸ்ஐஆர் பணியில் மாநில அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் இடையே நிலவும் மோதல் போக்கு காரணமாக, பணியில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதிகளை எஸ்ஐஆர் பணியில் நியமிக்க வேண்டும் என்று கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சுஜய் பாலிடம் உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

இந்த நீதிபதிகளுடன் கூடுதலாக உரிமையியல் நீதிபதிகளையும் பணியமர்த்தலாம் என்று உத்தரவிட்ட உச்சநீதிமன்றம், இந்த நீதிபதிகளும் போதவில்லை என்றால் மேற்கு வங்கத்தின் அண்டை மாநிலங்களான ஜார்க்கண்ட், ஒடிஸா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளை அணுகி, பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகளை மேற்கு வங்க எஸ்ஐஆர் பணிக்கு அனுப்புமாறு கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கோரலாம் என்று தெரிவித்தது.

இந்த விவகாரத்தை உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் சார்பாக புதன்கிழமை குறிப்பிட்ட மூத்த வழக்குரைஞர் டி.எஸ்.நாயுடு, மேற்கு வங்க எஸ்ஐஆரில் ஒருவரின் அடையாள சரிபார்ப்புக்கு 10-ஆம் வகுப்பு சேர்க்கை சான்றிதழ் மட்டும் போதுமா என்று விளக்கம் கோரினார்.

இதற்குப் பதிலளித்த தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு, 'பிற ஆவணங்களுடன் 10-ஆம் வகுப்பு சேர்க்கை மற்றும் தேர்ச்சி சான்றிதழ்கள் கூடுதல் ஆவணங்களாக மட்டுமே இருக்கும்' என்று ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளதாக தெளிவுபடுத்தியது.

## க்ரைம் கார்னர்

### பெங்களூரு: அதிகாரி போல நடித்து ரூ.5 லட்சம் மோசடி செய்த 2 பேர் கைது

பெங்களூரு, பிப்.27:

பெங்களூரு தெற்கு துணை காவல் ஆணையர் லோகேஷ் ஜகலசர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு பீனியாவில் குட்கா வியாபாரிகளிடம் ஜிஎஸ்டி அதிகாரிகளின் பெயரை பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபடுவதாக புகார் வந்தது. இதுகுறித்து விசாரித்து ஜிஎஸ்டி முதன்மை ஆணையர் அலுவலக தூய்மை பணியாளர்களான நாகராஜ் (35), தாடா பீர் (37) ஆகியோரை கைது செய்தோம். ஜிஎஸ்டி செலுத்தாமல் பாக்கி வைத்துள்ள வியாபாரிகளை குறிவைத்து அதிகாரி போல பேசி ரூ.5 லட்சம் வாங்கியுள்ளனர். அவர்களை கைது செய்து ரூ.5 லட்சத்தை பறிமுதல் செய்தோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### ஐடிஎப்சி பர்ஸ்ட் வங்கிக் கிளையில் ரூ.590 கோடி மோசடி: 24 மணி நேரத்துக்குள் ரூ.578 கோடி மீட்பு

சண்டிகர், பிப்.27:

ஹரியானா அரசு, ஐடிஎப்சி ஃபர்ஸ்ட் வங்கிக் கிளையில் சில கணக்குகளை வைத்துள்ளது. இந்நிலையில் ஹரியானா அரசு வங்கிக் கணக்குகளில் இருந்து சுமார் ரூ.590 கோடி அளவுக்கு முறைகேடு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து வங்கி அதிகாரிகள் 4 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இதுகுறித்து ஆய்வு செய்ய 'கேபிஎம்ஜி' என்ற சர்வதேச நிறுவனத்தின் தடயவியல் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளதாக ஐடிஎப்சி வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஹரியானா சட்டப்பேரவையில் முதல்வர் நயாப் சிங் சைனி நேற்று பேசிய தாவது: ஐடிஎப்சி வங்கியில் ரூ.590 கோடி மோசடி நடந்துள்ளது. இதையடுத்து அரசு துரிதமாக செயல்பட்டு 24 மணி நேரத்துக்குள் பணம் மீட்கப்பட்டுள்ளது. ரூ.556 கோடி டெபாசிட் செய்யப்பட்ட பணமும், ரூ.22 கோடி வட்டிப் பணமும் ஆக மொத்தம் ரூ.578 கோடி 24 மணி நேரத்துக்குள் மீட்கப்பட்டுவிட்டது.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தப்ப முடியாது. சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். முன்பு இருந்த அரசுகள் இதுபோன்ற விவகாரங்களை மூடி மறைத்தன. ஆனால் நாங்கள் அப்படி இல்லை. எந்தப் பிரச்சினை என்றாலும் அதைத் தீர்த்து வைக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### ம.பி: வேலை தேடும் பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய சகோதரிகள் உட்பட 3 பேர் கைது

போபால், பிப்.27:

அப்பாஸ் நகரில் உள்ள ஒரு சிறிய சேரிப் பகுதியில் வசித்து வந்தவர்கள் அம்ரின் மற்றும் அப்ரின். சகோதரிகளான இவர்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கிய இளம் பெண்களை குறிவைத்து அவர்களுக்கு இலவச தங்குமிடம் உணவுடன் மாதம் ரூ.10,000 சம்பளம் தருவதாக ஆசை வார்த்தைகளை கூறி வேலைக்கு தேர்வு செய்துள்ளனர். இதையடுத்து அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியதுடன், கட்டாய மதமாற்றமும் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக, 21 மற்றும் 32 வயதுடைய இரு பெண்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பாக் செவானியா காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் அம்ரின் மற்றும் அப்ரின் மற்றும் அவர்களுக்கு உதவியாளராக செயல்பட்ட சந்தன் யாதவ் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். மேலும், இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள பிலால், சானு மற்றும் யாசிர் ஆகிய மூவர் தேடப்பட்டு வருகின்றனர். இளம் பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி சட்டவிரோதமாக கிடைத்த பணத்தின் மூலமாக அவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்ததை காவல் துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அம்ரின், அப்ரின் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் போன்களை ஆய்வு செய்தபோது பல இளம் பெண்களின் புகைப்படங்கள் அடங்கிய வாட்ஸ்அப் குழுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்கள் குஜராத் மற்றும் மும்பை என இரு மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதால் இதில் மிகப்பெரிய நெட்வொர்க் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. இதையடுத்து இவ்வழக்கில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### பின் நம்பர் இல்லாமலே யுபிஐ வழியாக பணம் அனுப்பலாம்: எப்படி தெரியுமா?

சென்னை, பிப்.27:

டிஜிட்டல் முறையில் தற்போது வங்கி பரிவர்த்தனை மேற்கொள்வது அதிகரித்துவிட்டது. வங்கி பக்கமே போகாமல் பணப் பரிவர்த்தனையை செல்போன் மூலமே செய்து முடித்துவிடலாம். ஆன்லைன் ஷாப்பிங் முதல் தெரிந்தவர்களுக்கு பணம் அனுப்புவது வரை சில நொடிகளில் அனுப்பும் வசதி வந்துவிட்டது. அதிலும் யுபிஐ வந்த பிறகு பெட்டிக்கடை முதல் ஷாப்பிங் மால் வரை அனைத்திலும் எளிதாக பேமென்ட் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. கூகுள்பே, போன்பே, பேடிஎம் போன்ற தனியார் நிறுவனங்கள் யுபிஐயுடன் கைகோர்த்து இந்த சேவையை வழங்கி வருகின்றன. வாடிக்கையாளர்கள் பணம் அனுப்புவதை எளிதாக்கும் வகையில் அவ்வப்போது புதிய அப்டேட்கள் வெளியாகின்றன. அந்த வகையில் தற்போது, பின் நம்பர் இல்லாமலே பணம் அனுப்பும் வசதியை போன்பே கொண்டு வந்துள்ளது. அதாவது, பின் நம்பர் பதிவு செய்யாமல் பயோமெட்ரிக் முறையில் பணம் அனுப்ப முடியும். பயோமெட்ரிக் அல்லது முக அடையாள அங்கீகாரம் வாயிலாக பணம் அனுப்பும் வசதி போன்பே-வில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ரூ.5,000 வரை உள்ள தொகையை இந்த வசதியை பயன்படுத்தி அனுப்ப முடியும்.

ரூ.5,000-க்கு மேற்பட்ட தொகையை அனுப்ப வேண்டும் என்றால் யுபிஐ பின் எண்ணை பதிவு செய்து மட்டுமே செலுத்த முடியும் என்றும் போன்பே நிறுவனம் தெரிவித்துள்ளது.

# குடும்பத்துடன் ஆன்மிக பயணம்: உள்ளாடைகள் வாங்கி வைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட பி.எஸ்.என்.எல். இயக்குநர்: விளக்கம் கேட்டு மத்திய அரசு நோட்டீஸ்



புதுடெல்லி, பிப்.27:

பொதுத்துறை தொலைதொடர்பு நிறுவனமான பி.எஸ்.என்.எல்.-ன் இயக்குநராக விவேக் பன்சால் பணியாற்றி வருகிறார். இவர், உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள கங்கை திரிவேணி சங்கமத்தில் குடும்பத்துடன் நீராட திட்டமிட்டார்.

இதற்காக, 2 நாள் பயணமாக நேற்றும், இன்றும் அங்கு செல்ல அவர் திட்டமிட்டு இருந்தார். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகதுறைரீதியான சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

பொதுவாக, ஒரு இடத்திற்கு உயரதிகாரி ஒருவர் செல்கிறார் என்றால், அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளை துறை சார்ந்த அதிகாரிகள் செய்து கொடுப்பது வழக்கம். ஆனால், அதையும் தாண்டி இவர், கங்கையில் குளித்த பின் உடலை துடைக்க டவல், சோப்பு, சீப்பு, கண்ணாடி, உள்ளாடைகள் ஆகியவற்றை வாங்கி வைக்க உத்தரவிட்டு இருந்தார். அதுவும் உள்ளாடைகள், ஆண்களுக்கு 6 செட்டும், பெண்களுக்கு 2 செட்டும் வாங்கி, படித்துறையில் தயாராக வைக்க அறிவுறுத்தி இருந்தார்.

இந்த ஏற்பாடுகளை செய்வதற்காக பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் 50 ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். இதுதவிர அவர் தங்கும் ஹோட்டல் அறையில் உலர் பழங்கள், பழங்கள், முகச்சவரம் செய்வதற்கான ஷேவிங் கிட்டுகள், டவல், டூத் பேஸ்ட், பிரஷ், சோப்பு, ஷாம்பு, சீப்பு, தலைக்கு தேய்க்க தேங்காய் எண்ணெய் என அனைத்தும் தயாராகஇருக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவின் கூறப்பட்டு இருந்தது.

சமூக வலைதளங்களில் சுற்றறிக்கை வைரல்: துறை ரீதியாக அனுப்பிவைக்கப்பட்ட இந்த சுற்றறிக்கை சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலானதுடன் சர்ச்சையையும் ஏற்படுத்தியது. நஷ்டத்தில் இயங்கும் ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் இயக்குநருக்கு இத்தனை ஆடம்பரம் தேவையா? என்று விவாதங்களும் எழுந்தன.

தனது உத்தரவால் பெரும் சர்ச்சை எழுந்ததை தொடர்ந்து, பிரயாக்ராஜ் ஆன்மிக பயணத்தை விவேக் பன்சால் ரத்து செய்தார். அதே நேரத்தில், இந்த விவகாரம் மத்திய அரசின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. தற்போது விவேக் பன்சாலிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

### விளக்கம் அளிக்காவிட்டால் நடவடிக்கை

இதுகுறித்து மத்திய மந்திரி ஜோதிராதித்யசிந்தியா கூறும்போது, "விவேக் பன்சாலின் இந்த ஆடம்பர ஏற்பாடுகளை ஒருபோதும் ஏற்க முடியாது. முறையற்ற, விதி மீறிய நடத்தை குறித்து விளக்கம் கேட்டு அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்குள் சரியான விளக்கத்தை அவர் அளிக்காவிட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

# அமெரிக்காவின் 126% வரி எதிரொலி! சூரிய சக்தி பங்குகள் 14% சரிவு!

புதுடெல்லி, பிப்.27:

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சூரிய மின்கலம் மற்றும் தகடுகளுக்கு அமெரிக்கா 126 சதவிகித வரி விதித்துள்ளது. சூரிய சக்தி மீது அமெரிக்கா வரி விதித்த நிலையில், சூரிய சக்தி பங்குகள் 14 சதவிகிதம் வரையில் சரிவடைந்துள்ளன.

வரிவிதிப்பால், புதன்கிழமை (பிப். 25) காலையில் வாரீ எனர்ஜிஸ் நிறுவனத்தின் பங்குகள் 14.6 சதவிகிதத்துக்கும், பிரீமியர் எனர்ஜிஸ் நிறுவனத்தின் பங்குகள் 12 சதவிகிதத்துக்கும் அதிகமாக சரிந்தன. மேலும், போரோசில் புதுப்பிக்கத்தக்கவை 1.5 சதவிகிதமும், விக்ரம் சோலார் 7 சதவிகிதமும் சரிந்தன. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமெரிக்கா வரி விதித்ததாகக் கூறப்படும் நிலையில், இந்தோனேசியாவுக்கு 86 முதல் 143 சதவிகிதமும், லாவோஸுக்கு 81 சதவிகிதம் வரையிலும் வரி விதிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல்பாதியில் அமெரிக்காவின் சூரிய சக்தி இறக்குமதியில் இந்தியா, இந்தோனேசியா, லாவோஸ் 57 சதவிகிதம் பங்களித்துள்ளன. 2024-ல் இந்தியாவிலிருந்து 792.6 மில்லியன் டாலருக்கு சூரிய சக்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டைவிட 9 மடங்கு அதிகமாகும்.

# ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதிகளின் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் சிக்கின!

ஜம்மு, பிப்.27:

ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லையோர கிராமத்தில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடத்தை ராணுவத்தினர் புதன்கிழமை கண்டறிந்தனர். அங்கு இருந்த இரு வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக, ஜம்மு-காஷ்மீரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ராணுவத்தின் படைப் பிரிவான ஒயிட் நைட் கார்ப்ஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

மெந்தார் செக்டாரில் கானி வனப் பகுதியையொட்டிய சலானி காஸ்பலாரி கிராமத்தில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் உள்ளதாக உளவுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அதனடிப்படையில், ராணுவம் மற்றும் காவல் துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவினர் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையில், பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் கண்டறியப்பட்டது. அங்கிருந்து 4.5 கிலோ எடையுள்ள சக்திவாய்ந்த வெடிகுண்டு, 800 கிராம் எடையுள்ள சிறிய ரக வெடிகுண்டு, இரு சீன தயாரிப்பு கையெறி குண்டுகள், துப்பாக்கிகள், தோட்டாக்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு வெடிகுண்டுகள் மற்றும் கையெறி குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையால், பூஞ்ச் மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் தாக்குதல் சதித் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அனில் அம்பானியின் ரூ.3,716 கோடி பங்களா முடக்கம்! அமலாக்கத்துறை நடவடிக்கை!




புதுடெல்லி, பிப்.27:

அமலாக்கத் துறை அதிகாரிகள் கூறியதாவது: வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு அனில் அம்பானியின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் மோசடி செய்தது குறித்து அமலாக்கத் துறை பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, மும்பையில் பாலி ஹில் பகுதியில் இருக்கும் அனில் அம்பானியின் பிரமாண்ட பங்களாவை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. அந்த பங்களா 66 மீட்டர் உயரமுடையது. மொத்தம் 17 தளங்கள் அதில் உள்ளன. அதற்கு அபோட் என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.3,716. 83 கோடி ஆகும். இதையும் சேர்த்து, அனில் அம்பானிக்கு எதிரான வழக்கில் இதுவரை ரூ.15,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணைக்காக கடந்த 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல்மு றை அமலாக்கத் துறை அலுவலகத்தில் அனில் அம்பானி ஆஜராகி வாக்கு மூலம் அளித்தார். விரைவில் அவரிடம் 2-ஆவது முறையாக அமலாக்கத் துறை விசாரணை நடத்த இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# NCERT விவகாரம் - மன்னிப்பு கோரியது மத்திய அரசு: நீதித்துறையில் 'ஊழல்' என்ற பிரிவு நீக்கப்பட்டதாக தகவல்

एन सी ई आर टी
NCERT
NCERT

புதுடெல்லி, பிப்.27:

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என் சிஇஆர்டி), அண்மையில் வெளியிட்ட 8-ம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் நீதித்துறை 'ஊழல்' குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மன்னிப்பு கோரியது.

இந்த வழக்கில் இன்று (பிப்.26) ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "பாடப் புத்தகத்தில் ஆட்சேபனைக்குரிய கருத்துக்கள் இடம் பெற்றது குறித்த தகவல் வெளியானதும் அதை அரசு தீவிரமாக எடுத்துக்கொண்டு, உடனடியாக செயல்பட்டுள்ளது.

அந்தப் புத்தகத்தில் அந்த அத்தியாயம் இடம்பெறக் காரணமாக இருந்த இரண்டு நபர்களும் இந்த அமைச்சகத்தின் எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டார்கள். வேறு எந்த அமைச்சகத்திலும்கூட அவர்களுக்கு பங்கு இருக்காது. நீதிமன்றத்துக்கு எதிரான நிலைப்பாட்டை மத்திய அரசு எடுக்கவில்லை" என தெரிவித்தார்.

அப்போது பேசிய தலைமை நீதிபதி சூர்ய காந்த், "இந்த விவகாரத்தில் நாங்கள் ஆழமான விசாரணையை நடத்த விரும்புகிறோம். நீதித்துறையின் தலைவர் என்ற முறையில், இதற்கு காரணமானவர்களை பொறுப்பேற்க வைப்பது எனது கடமை. தலைகள் உருள வேண்டும்(காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்). சில நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை இந்த வழக்கை நான் முடிக்க மாட்டேன். இதற்குப் பின்னால் உள்ளவர்கள் யார் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்" என தெரிவித்தார்.

# மேகாலயாவில் 10,293 பேருக்கு எச்ஐவி நோய்க்கு சிகிச்சை

ஷில்லாங், பிப்.27:

மேகாலயா சட்டப்பேரவையில் எச்ஐவி தொடர்பாக உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு சுகாதார அமைச்சர் டபிள்யூ. ஷில்லா அளித்த பதில் வருமாறு: இந்தியாவிலேயே மேகாலயாவில் தான் எச்ஐவி பாதிப்பு அதிகம் உள்ளது. மாநிலத்தில் 10,293 பேர் எச்ஐவி தொற்றுக்கான ஆன்டிரெட்ரோ வைரல் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த ஆபத்தான போக்கை சமாளிக்க 5 ஆண்டு திட்டத்துக்கு அரசு ரூ.25 கோடி அனுமதித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் எச்ஐவி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட 749 பேர் இறந்துள்ளனர். மேகாலயாவில் எச்ஐவி-க்கு 392 ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் சோதனை மையங்கள் உள்ளன. நான்கு மொபைல் மையங்களும் செயல்பாட்டில் உள்ளன. எச்ஐவி தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்களை சுகாதாரத் துறை தீவிரப்படுத்தி வருகிறது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# இலவச அறிவிப்புகளுக்கு தடை: விரைந்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு

புதுடெல்லி, பிப்.27:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு இலவச அறிவிப்புகளை தடை செய்யக் கோரும் மனுவை விரைந்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவில் இலவச அறிவிப்புகளை தடை செய்யக் கோரும் மனுவை தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜோய்மால்யா பக்சி அடங்கிய அமர்வு விசாரித்தது. மனு தாரரர் சார்பில் இந்த மனுவை விசாரித்து உரிய உத்தரவு பிறப்பிக்க கோரப்பட்டது. அப்போது தலைமை நீதிபதி, "தேர்தல் காலங்களில் இதுபோன்ற ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். தமிழகம் மற்றும் கேரள தேர்தலை முன்னிட்டு இதுபோன்ற ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விரைந்து விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. உரிய நேரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என்றார்.

# தகுதிவாய்ந்த தலைவர்களைத் தேர்வு செய்ய 'நோட்டா' வழிவகுத்துள்ளதா? உச்சநீதிமன்றம் கேள்வி!



புதுடெல்லி பிப்.27:

தேர்தல்கள் மூலம் தகுதிவாய்ந்த தலைவர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு நோட்டா (யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை) வழிவகுத்துள்ளதா என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-இன் 53(2) பிரிவின்படி, தேர்தல் நடைபெறும் இடங்களின் எண்ணிக்கையும், அவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் சமமாக இருந்தால் (எடுத்துக்காட்டாக ஓரிடத்தில் ஒருவர் மட்டுமே போட்டியிடுவது), அவர்கள் போட்டியின்றித் தேர்வு செய்யப்படுவதாக தேர்தல் நடத்தும் அலுவலர் அறிவிப்பார்.

இந்தப் பிரிவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் சட்ட அமைப்பு ஒன்று தாக்கல் செய்துள்ள மனுவில், ஓரிடத்தில் ஒரேயொரு வேட்பாளர் மட்டும் போட்டியிட்டால், அவருக்கு எதிராக நோட்டாவுக்கு வாக்களிப்பதை 53(2) பிரிவு தடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல்கள் மூலம் தகுதிவாய்ந்த தலைவர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு நோட்டா வழிவகுத்துள்ளதா என்று நீதிபதி ஜயமால்ய பாக்சி கேள்வி எழுப்பினார்.

நோட்டாவுக்கு அதிகபட்ச வாக்குகள் கிடைத்தாலும், அதனால் ஒரு தொகுதியில் வெற்றியாளரைத் தீர்மானிக்க முடியாது என்று கூறிய அவர், நோட்டாவை ஒரு நபராகக் கருத முடியாது என்றும் தெரிவித்தார்.

வாக்களிப்பதைக் கட்டாயமாக்க...:

நீதிபதிகள் அமர்வு மேலும் கூறுகையில், 'தேர்தல்களில் படிக்காதவர்கள், பெண்கள் வாக்களிப்பதைவிட படித்தவர்களும், பணக்காரர்களும் வாக்களிப்பது மிகக் குறைவாகவே உள்ளது. நல்ல வேட்பாளர்கள் வெற்றி பெறுவதை உறுதி செய்யும் வகையில், வாக்களிப்பதைக் கட்டாயமாக்க கடுமையாக முயற்சிக்க வேண்டும்' என்று தெரிவித்தனர். இந்த மனு மீதான அடுத்த விசாரணை மார்ச் 17-ஆம் தேதி நடைபெற உள்ளது.

# 60 லட்சம் லிட்டர் கலப்பட நெய்யில் 20 கோடி லட்டு: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றச்சாட்டு

அமராவதி, பிப்.27:

திருப்பதி தேவஸ்தானத்தில் கடந்த ஆட்சியில் 60 லட்சம் லிட்டர் நெய்யில் கலப்படம் செய்து 20 கோடி லட்டு பிரசாதங்களை விநியோகம் செய்ததாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம்சாட்டினார்.

ஆந்திர பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று காலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சியின் போது நெய்யில் கலப்படம் என்று தெரிந்தே வாங்கியதாக தீவிர குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இதன் மீது சுமார் 3 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசியதாவது: கலப்பட நெய் விவகாரத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையை நடத்தியது. அக்குழுவினர் விசாரணை நடத்தி, அதிகாரிகள், ஊழியர்கள், நிபுணர்கள் என அனைவரும் சேர்ந்தே இந்த தவறை செய்தனர். ஆதலால் அவர்கள் மீது ஆந்திர அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கலாம் என எனக்கு பரிந்துரை செய்தது. இதனை விசாரிக்கவே ஒரு நபர் விசாரணை கமிஷன் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆட்சியினர் லட்டு விவகாரத்தில் மட்டுமல்லாது பல விஷயங்களில் தவறிழைத்துள்ளனர். 2019- 24ம் ஆண்டு இடையே மட்டும் முந்தைய அரசு 59.71 லட்சம் லிட்டர் கலப்பட நெய்யை வாங்கி உபயோகித்துள்ளது.

இதில் ரூ.231.51 கோடி ஊழல் நடந்துள்ளது. திண்டுக்கல் ஏஆர் டயரி ஃபுட்ஸ், திருப்பதி ஸ்ரீவைஷ்ணவி டயரி, நெல்லூர் மால் கங்கா மில்க் டயரி ஆகியவற்றின் பெயர்களில் நெய் விநியோகம் செய்யப்பட்டது. இதில் லஞ்சம் வாங்கிய முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டியின் உதவியாளர் சின்னப்பா கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசினார். துணை முதல்வர் பவன் கல்யாண் பேசியதாவது: கலப்பட நெய்யில் எந்த ரசாயனத்தை கலந்தார்களோ அது பெருமாளுக்கே வெளிச்சம். நெய்யில் விலங்கு கொழுப்பு கலந்திருந்தது என்பது என்டிடிபி கொடுத்த அறிக்கையில் இருந்தது. அது நெய்யே இல்லை என சிபிஐ அறிக்கை கொடுத்துள்ளது. அப்போதைய அறங்காவலர் குழு மீது குற்றம் சுமத்தினால் முன்னாள் முதல்வர் ஜெகன் ஏன் மல்லு கட்டுகிறார்? அப்படியெனில் அதில் அவருக்கும் பங்கு இருக்கிறது என்பது உண்மை தானே? கலப்பட நெய் விவகாரத்தில் தவறு செய்தவர்கள் யாராக இருப்பினும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

இவ்வாறு பவன் கல்யாண் பேசினார்.

# நமோ பாரத், மீரட் மெட்ரோ பயணிகள் இலவச பயணத்திற்கு விசுவாசப் புள்ளிகளைப் பெறலாம்!

புதுடெல்லி, பிப்.27:

நமோ பாரத் ரயில்கள் மற்றும் மீரட் மெட்ரோவில் பயணிக்கும் பயணிகள் இப்போது தேசிய பொது இயக்க அட்டையை (என்சிஎம்சி) பயன்படுத்துவதன் மூலமோ அல்லது நமோ பாரத் கனெக்ட் செயலி மூலம் மூலம் டிஜிட்டல் க்யூ ஆர் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்வதன் மூலமோ ஒவ்வொரு பயணத்திலும் விசுவாசப் புள்ளிகளைப் பெறலாம்.

தேசியத் தலைநகர் பிராந்திய போக்குவரத்துக் கழகம் (என்சிஆர்டிசி) இயக்கும் விசுவாசத் திட்டத்தின் கீழ், பயணிகள் பயணத்திற்காகச் செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஒரு விசுவாசப் புள்ளியைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு புள்ளியும் 10 பைசா மதிப்புடையது என்று ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 300 புள்ளிகள் குவிந்தவுடன், பயணிகள் நமோ பாரத் மற்றும் மீரட் மெட்ரோ சேவைகள் இரண்டிலும் இலவசப் பயணங்களுக்கு அவற்றைப் பெறலாம் என்று அது கூறியது.

என்சிஎம்சி அட்டை பயனர்களுக்கு, திரட்டப்பட்ட விசுவாசப் புள்ளிகள் ஒவ்வொரு செயல்பாட்டு நாளின் முடிவிலும் அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். மேலும், மறுநாள் சரிபார்க்கலாம். உதாரணமாக, பயணத்திற்காக ரூ.100 செலவழிக்கும் பயணி ரூ.10 மதிப்புள்ள 100 புள்ளிகளைப் பெறுகிறார் என்று அது கூறியது. அறிக்கையின்படி, அடிக்கடி பணத்தை திரும்பப் பெறுவதற்கான தேவையைக் குறைக்க, பயணிகள் ஒரே நேரத்தில் ஐந்து பயணங்களுக்கு புள்ளிகளைப் பெறவும் இந்த அமைப்பு அனுமதிக்கிறது. இந்தப் பணத்தை திரும்பப் பெறுவதற்கான பயணங்கள் ஏழு நாள்களுக்கு செல்லுபடியாகும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்பட வேண்டும்.

என்சிஎம்சி அட்டைகளைப் பயன்படுத்தும் பயணிகள் டிக்கெட் விற்பனை இயந்திரங்கள் அல்லது டிக்கெட் கவுண்டர்களில் தங்கள் குவிந்த புள்ளிகளைச் சரிபார்க்கலாம். நாடு முழுவதும் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனம், போக்குவரத்து ஆணையம் அல்லது நிதி நிறுவனத்தால் வழங்கப்படும் எந்த என்சிஎம்சி அட்டையையும் நமோ பாரத் ரயில்களிலும், செயல்பாடுகள் தொடங்கியதிலிருந்து கிடைக்கக்கூடிய ஒரு வசதியான மீரட் மெட்ரோவிலும் பயணம் செய்யப் பயன்படுத்தலாம். நமோ பாரத் கனெக்ட் செயலி மூலம் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு, விசுவாசப் புள்ளிகளைச் சரிபார்த்து மீட்டெடுப்பது எளிது. 'விசுவாசப் புள்ளிகள்' விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து 'ஆர்இடிஇஇ' என்பதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களுக்கு இடையிலான கட்டணத்திற்கு சமமான திரட்டப்பட்ட புள்ளிகளைப் பயன்படுத்தி பயனர்கள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம்.

## உக்ரைன்-ரஷ்யப் போர் நிறுத்தம் ஐ.நா பொது அவை தீர்மானம்

**நியூயார்க், பிப்.27:**

உக்ரைன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஐ.நா அவையில் கொண்டு வந்த உக்ரைன் -ரஷ்யப் போர் நிறுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐநா பொது அவையின் 11 ஆவது அவசர சிறப்பு அமர்வில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தீர்மானத்திற்கு 107 நாடுகள் ஆதரவாகவும், ரஷ்யா உட்பட 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. அமெரிக்கா உள்ளிட்ட 51 நாடுகள் வாக்களிக்காமல் புறக்கணித்தன. இத்தீர்மா னத்தில் உடனடியான மற்றும் நிபந்தனையற்ற போர் நிறுத்தம் வேண்டும். விரிவான, நீதியான மற்றும் நீடித்த அமைதி வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கனமழை மற்றும் நிலச்சரிவு பிரேசிலில் 30 பேர் பலி

பிரேசிலில் பெய்து வரும் கனமழையினால் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந் துள்ளது. மேலும் 39 பேரைக் காணவில்லை என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். திங்கட்கிழமை மதியம் தொடங்கிய கனமழை யினால் ஆறுகளில் வெள்ளம் ஏற்பட்டதில் மக்கள் குடி யிருப்புகள் சேதமடைந் துள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## இந்திய நிலப்பரப்பில் சட்டவிரோத ஆக்கிரமிப்பு; ஐ.நா. சபையில் பாகிஸ்தானை கடுமையாக சாடிய இந்தியா

**ஜெனீவா, பிப்.27:**

சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் கடந்த 23-ந்தேதியில் இருந்து மார்ச் 31-ந்தேதி வரை ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 61-வது கூட்டம் நடக்கிறது. இதில், உயர்மட்ட கூட்டத்தில், இந்தியாவுக்கான பதிலளிப்பதற்கான உரிமையை பயன்படுத்தி, ஐ.நா.வுக்கான இந்திய பிரதிநிதியான அனுபமா சிங் பேசினார்.

அவர் பேசும்போது, பாகிஸ்தானின் தொடர் பிரசாரம் அதன் பொறாமையையே வெளிப்படுத்துகிறது. ஜம்மு மற்றும் காஷ்மீரின் வளர்ச்சிக்கான பாதை இன்று வெளிப்படையாகவே தெரிகிறது. ஆனால், அதற்கு மாறாக, பாகிஸ்தானோ பொருளாதார சிக்கல்களில் சிக்கி தவித்து வருகிறது. ஜம்மு மற்றும் காஷ்மீர் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் மற்றும் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்கப்படாத பகுதியாகவே இருக்கும். எங்களுடைய இந்த நீண்டகால நிலைப்பாட்டை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம் என கூறினார்.

இந்திய விடுதலை சட்டம் மற்றும் சர்வதேச சட்டத்தின்படி, 1947-ம் ஆண்டு இந்தியாவுடன் இணைந்த இந்த பகுதியானது முற்றிலும் சட்டபூர்வமானது மற்றும் மாற்ற முடியாதது.

இந்த பகுதிக்கான விவாதம் என்பது, இந்திய நிலப்பரப்பை சட்டவிரோத வகையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளது என்பதுதான் என்றும் எங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இந்த பகுதியை பாகிஸ்தான் காலி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## இடைவிடாத தாக்குதல்: 34 பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்ற பாகிஸ்தான் ராணுவம்

**இஸ்லாமாபாத், பிப்.27:**

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்க்வாவில் ராணுவம் மற்றும் போலீசார் அடங்கிய பாதுகாப்பு படையினர் பயங்கரவாத எதிர்ப்பு தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டனர். அப்போது 4 வெவ்வேறு இடங்களில் பயங்கரவாதிகளுடன் நேரடி துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். இதில் 26 பயங்கரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இதேபோல நாட்டின் தென்மேற்கில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் மேலும் 8 பயங்கரவாதிகளையும் பாதுகாப்புப் படையினர் கொன்றனர்.

இது அவர்களின் தொடர்ச்சியான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

கைபர் பக்துன்க்வா மற்றும் பலுசிஸ்தான் மாகாணங்களை உள்ளடக்கிய இந்த நடவடிக்கைகள், உள்நாட்டு கிளர்ச்சிகளை எதிர்த்துப் போராடுவதில் ராணுவத்தின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக தகவல்கள் தெரிவிகின்றன.

இந்த தாக்குதலின் விளைவாக ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் மீட்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமைதி பேச்சுவார்த்தைக்காக ஜெனீவா வந்த ஈரான் வெளியுறவு மந்திரி; நம்பிக்கையுடன் டிரம்ப்

**ஜெனீவா, பிப்.27:**



ஈரானின் மீது கடந்த ஆண்டு அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்தது. பதிலுக்கு கத்தாரில் உள்ள அமெரிக்க தளத்தின் மீது சிறிய தாக்குதலை நடத்தி, ஈரான் எச்சரித்தது. எனினும், எப்போது வேண்டுமென்றாலும் நேரடி போர் ஏற்படலாம் என்ற சூழல் காணப்படுகிறது.

ஈரான் நாட்டின் அணு ஆயுத தயாரிப்பு, பயன்பாட்டுக்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதனை தவிர்ப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி கொள்ள அமெரிக்கா முயன்று வருகிறது. ஆனால், ஈரான் அதற்கு உடன்பட மறுக்கிறது.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான அணு ஆயுத பேச்சுவார்த்தை, ஜெனீவாவில் நடைபெறுகிறது.

கடந்த 2 முறை நடந்த உயர்மட்ட அளவிலானபேச்சுவார்த்தைகளில் உரிய பலன் ஏற்படாத சூழல் உள்ளது. இந்நிலையில், 3-வது சுற்று பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காகஈரான் வெளியுறவு மந்திரி சையது அப்பாஸ் அராக்சி, ஜெனீவா நகருக்கு வருகை தந்துள்ளார்.

இதேபோன்று அமெரிக்கா சார்பில் தூதர் ஸ்டீவ் விட்காப், டிரம்ப்பின் மருமகனான ஜாரெட் குஷ்னர் ஆகியோர் வருகைதந்திருக்கின்றனர். விட்காப் செய்தியாளர்களிடம் கூறும்போது, ஈரானின் அணு ஆயுத நடவடிக்கை தொடர்பான எந்த ஒப்பந்தமும் நிரந்தர அடிப்படையில் இருக்கும் என வலியுறுத்தினார். ஒப்பந்தத்திற்கு ஈரான் முன் வரவில்லையெனில், ராணுவ தாக்குதல் நடத்தப்படும் என டிரம்ப் நிர்வாகம் எச்சரித்து வருகிறது. அதற்கேற்ப, அமெரிக்கா தன்னுடைய படைகளை மத்திய கிழக்கு பகுதிகளுக்கு இடம் மாற்றியது. அது ஈரான் மீது தாக்குதல் நடத்த வசதியாக இருக்கும் என பார்க்கப்படுகிறது.

இதன்படி, கத்தார் நாட்டின் அல் உதீத் படை தளத்தில் இருந்த 100-க்கும் மேற்பட்ட வீரர்களை இடம் மாற்றி கொண்டு சென்றுள்ளது. இதனை அமெரிக்காவின் பென்டகன் அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். இதேபோன்று, அமெரிக்காவின் ராணுவ தளங்கள் அமைந்துள்ள பஹ்ரைன், ஈராக், சிரியா, குவைத், சவுதி அரேபியா, ஜோர்டான் மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகளிலும் கூட ராணுவ அதிகாரிகள் மற்றும் ஆயுதங்களின் இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. எனினும், அமெரிக்க வெளியுறவு மந்திரி மார்கோ ரூபியோ கூறும்போது தூதரக பேச்சுவார்த்தையில் நல்ல பலன் வரும் என டிரம்ப் இன்னும் நம்பிக்கையுடன் உள்ளார் என்று கூறினார்.

## தென்கொரியாவை அழித்துவிடுவோம்: வடகொரியா எச்சரிக்கை

**பியாங்யாங், பிப்.27:**



அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா. கொரிய தீபகற்பத்தில் வடகொரியா, தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

வடகொரியாவை மிரட்டும் வகையில், அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா அவ்வப்போது கூட்டு ராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், அமெரிக்கா - தென்கொரியா அடுத்த மாதம் மீண்டும் கூட்டு ராணுவ பயிற்சியில் ஈடுபட உள்ளது. அடுத்த மாதம் 9ம் தேதி முதல் 19ம் தேதி வரை இந்த ராணுவ பயிற்சி நடைபெற உள்ளது.

தென்கொரியாவில் நடைபெறும் இந்த ராணுவ பயிற்சியில் அந்நாட்டு வீரர்களுடன் சேர்ந்து அமெரிக்க வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட உள்ளனர். இதனால், கடும் கோபம் அடைந்துள்ள வடகெரியா, தென்கொரியாவை கடுமையாக எச்சரித்துள்ளது.

தங்கள் நாட்டிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயல்பட்டால் தென்கொரியாவை முற்றாக அழித்துவிடுவோம் என்று வடகொரியா எச்சரித்துள்ளது.

## “நான் மட்டும் தலையிட்டு இந்திய - பாக். போரை நிறுத்தி இருக்காவிட்டால்...” - ட்ரம்ப் மீண்டும் பேச்சு

**வாஷிங்டன் பிப்.27:**



இந்தியா- பாகிஸ்தான் போரை நான் நிறுத்தாமல் இருந்திருந்தால், 3.5 கோடி மக்கள் இறந்திருப்பர் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் என்னிடம் தெரிவித் தார் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசியுள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் அதிபர் ட்ரம்ப் நேற்று முன்தினம் பேசியதாவது: அமெரிக்க அதிபராக எனது முதல் 10 மாதங்களில் 8 போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தேன். நான் தலையிடாமல் இருந்திருந்தால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அணு ஆயுதப் போர் ஏற்பட்டிருக்கும். போரை நிறுத்த நான் முயற்சி எடுக்காமல் இருந்திருந்தால் பாகிஸ்தானில் 3.5 கோடி மக்கள் இறந்திருப் பார்கள் என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் என்னிடம் தெரிவித்தார்.

எனது நிர்வாகம் 9-வது போரை முடிவுக்குக் கொண்டு வர மிகவும் கடினமாக உழைத்து வருகிறது. ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் தொடங்கிய தினத்தில் நான் அதிபராக இருந்திருந் தால் இது ஒருபோதும் நடந் திருக்காது. போர் நிறுத்த ஒப் பந்தத்தின் கீழ், உயிருடன் உள்ள அல்லது இறந்த ஒவ் வொரு பிணைக் கைதியும் வீடு திரும்புவதை உறுதி செய்து வருகிறோம்.

உள்நாட்டிலும் வெளிநாட் டிலும் அமெரிக்கர்களுக்கு நாங்கள் பெருமையுடன் பாதுகாப்பை மீட்டெடுத்து வருகிறோம். எனது வரிவிதிப்பு அச்சுறுத்தல் காரணமாக தீர்த்து வைக்கப்பட்டு அமைதி நிலவுகிறது. இவ் வாறு அதிபர் ட்ரம்ப் தெரி வித்தார். இந்தியா- பாகிஸ் தான் இடையிலான போரை நிறுத்தியதாக அதிபர் ட்ரம்ப் இது வரை, சுமார் 80-க்கும் அதிகமான முறை தெரிவித் துவிட்டார்.

இருப்பினும், ட்ரம்பின் பேச்சை மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. இரு நாடுகளுக்கு இடையேயான நேரடிப் பேச்சுவார்த்தை மூலமே போர் நிறுத்தப்பட்டதாக இந் திய அரசு விளக்கம் அளித்து வருகிறது.

இருந்த போதும், இந்தியா - பாகிஸ்தான் போரை தானே நிறுத்தியதாக ட்ரம்ப் தொடர்ந் து பேசி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக். உயர் நீதிமன்றத்தில் 5 ஆண்டு பணியாற்றிய நீதிபதி நீக்கம்

**இஸ்லாமாபாத், பிப்.27:**

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் தாரிக் மஹ்மூத் ஜஹாங்கிரி என்பவர் கடந்த 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். இந் நிலையில் இவரது சட்டப் படிப்பு சான்றிதழ் போலியானது என கடந்தாண்டு புகார் வந்தது.

இதை யடுத்து இவர் நீதிபதியாகப் பணியாற்ற தடைவிதிக்கப்பட்டு, அசல் சட்டப் படிப்பு சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது. ஆனால் அவர் சான்றிதழ் களைச் சமர்ப்பிக்காமல், அவரது வழக்கை கூடுதல் நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரிக்க வேண்டும் என மனுத்தாக்கல் செய்தார். இதையடுத்து விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய உத்தர விடப்பட்டது.

இதையடுத்து கராச்சி பல்கலைக்கழக பதிவாளர் ஆவணங்களை சமர்ப்பித்தார். அதில் தாரிக் மஹ்மூத் ஜஹாங்கிரி சட்டப் படிப்பு சான்றிதழ் போலியானது என தெரிவிக்கப்பட்டது. மேலும் இவர் கடந்த 1988-ம் ஆண்டு தேர்வு எழுதும்போது ஆள்மாறாட்டம் செய்து பிடிபட்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இவர் இந்த தண்டனையை ஏற்காமல், அடுத் தாண்டே, இம்தியாஸ் அகமது என்ற மாணவனின் பதிவு எண்ணை பயன்படுத்தி தேர்வெழுதியுள்ளதும் தெரியவந்தது. இதையடுத்து இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பில் தாரிக் மஹ்மூத் ஜஹாங்கிரியை நீதிபதி பதவியில் இருந்து நீக்கி உத்தரவு பிறப்பித்தது.

## அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது நாடாளுமன்ற உரையில் டிரம்ப் முழக்கம்!

‘எனது ஆட்சியில் அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது; கடந்த ஓராண்டாக அமெரிக்க மக்கள் வெற்றிக் களிப்பில் திளைத்துள்ளனர்’ என்று அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்காவில் வரும் நவம்பரில் நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், உள்நாட்டுப் பொருளாதார நிலை குறித்து மக்களிடையே கடும் அதிருப்தி நிலவுகிறது. இந்நிலையில் ஓராண்டு ஆட்சியின் நிறைவாக, நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் செவ்வாய்க்கிழமை (இந்திய நேரப்படி புதன்கிழமை காலை) உரையாற்றிய டிரம்ப் தனது நிர்வாகத்தின் சாதனைகளைப் பட்டியலிட்டார்.

அமெரிக்க வரலாற்றிலேயே மிக நீண்ட அதிபர் உரையாக, டிரம்ப் சுமார் ஒரு மணி நேரம், 47 நிமிஷங்கள் பேசியதாவது: நமது தேசம் முன்னெப்போதும் விட வலிமையாகவும், செல்வந்த நாடாகவும் உள்ளது.

அமெரிக்க எல்லைகள் தற்போது வரலாற்றிலேயே மிக பாதுகாப்பான நிலையில் உள்ளது.

அமெரிக்காவுக்கு முன்னுரிமை அளிக்கும் எனது கொள்கையில் மாற்றமில்லை. வரும் ஜூலை 4-ஆம் தேதி, நமது தேசத்தின் 250-ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட உள்ளோம். நீங்கள் இதுவரை கண்டது ஒரு தொடக்கம் தான்; நாம் இன்னும் மேன்மேலும் வளருவோம். இது அமெரிக்காவின் பொற்காலம் என்றார்.

## இலங்கை: ஈஸ்டர் குண்டுவெடிப்பு வழக்கில் உளவுத் துறை முன்னாள் தலைவர் கைது

**கொழும்பு, பிப்.27:**

இலங்கையில் கடந்த 2019-இல் நடந்த ஈஸ்டர் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான வழக்கில், அந்நாட்டின் உளவுத் துறை முன்னாள் தலைவர் சுரேஷ் சல்லே புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

முன்னாள் அதிபர் மகிந்த ராஜபட்ச ஆட்சியில், 2015-க்கு முன்பு உளவுத் துறையின் தலைவராக சுரேஷ் சல்லே பணியாற்றி வந்தார். ஆனால், குண்டுவெடிப்பு நடந்த நேரத்தில் இவர் வெளிநாட்டில் தூதரகப் பணியில் இருந்தார்.

ராணுவத்தில் மேஜர் ஜெனரலாக ஓய்வுபெற்ற இவரை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் 3 நாள்கள் காவலில் எடுத்து விசாரிக்கவுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2019-இல், கொழும்பில் உள்ள தேவாலயங்கள் மற்றும் பெரிய ஹோட்டல்களைக் குறிவைத்து ஈஸ்டர் பண்டிகை நாளில் தொடர் குண்டுவெடிப்புகள் நடந்தன. உள்ளூர் பயங்கரவாத அமைப்பு நடத்திய இந்தத் தற்கொலைப் படைத் தாக்குதல்களில் இந்தியர்கள் உள்பட 270 பேர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதல் குறித்து இந்திய உளவுத் துறை முன்னதாகவே எச்சரித்தும், அப்போதைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டுகள் உள்ளன. முந்தைய அரசுகளின் அரசியல் தலையீடுகளால், இலங்கையின் தற்போதைய அரசு இந்த வழக்கை மீண்டும் விசாரிக்கிறது.

## ரஷ்ய பெண்கள் உடனான உறவை ஒப்புக்கொண்ட பில் கேட்ஸ் - எப்ஸ்டீன் விவகாரத்தில் மன்னிப்பு கோரினார்!

**வாஷிங்டன், பிப்.27:**




எப்ஸ்டீன் கோப்புகள் சர்ச்சையில் சிக்கிய மைக்ரோசாஃப்ட் இணை நிறுவனர் பில் கேட்ஸ், கேட்ஸ் அறக்கட்டளை ஊழியர்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார். மேலும், எப்ஸ்டீனுடனான தனது தொடர்புகளை ஒரு பெரிய தவறு என்றும் அவர் கூறியுள்ளார்.

தண்டனை பெற்ற பாலியல் குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீனின் கோப்புகள் சமீபத்தில் வெளியாகி சர்ச்சைகளை கிளப்பி வருகிறது. எப்ஸ்டீனுடன் தொடர்பு இருப்பதாகக் காட்டப்படும் பிரபலங்கள், அரசியல்வாதிகள், தலைவர்கள் உள்ளிட்ட பலரில் பில்கேட்ஸும் ஒருவராக உள்ளார்.

எப்ஸ்டீன் கோப்புகளில் மின்னஞ்சல்கள், நேர்காணல் டிரான்ஸ்கிரிப்டுகள், புகைப்படங்கள், அழைப்பு பதிவுகள் போன்ற பல்லாயிரக்கணக்கான ஆவணங்களில் சில பெயர்கள் மறைக்கப்பட்டு, கடந்த மாதம் அமெரிக்க நீதித்துறையால் ஆன்லைனில் வெளியிடப்பட்டன. இந்தச் சூழலில், பில் கேட்ஸ் தனது அறக்கட்டளை ஊழியர்களிடம் இப்போது பொது மன்னிப்பு கோரியுள்ளார். இது குறித்து அறக்கட்டளை செய்தித் தொடர்பாளர் பகிர்ந்துகொண்ட அறிக்கையில், ‘சமீபத்தியடவுன் ஹால் கூட்டத்தின்போது பில் கேட்ஸ் தனது செயல்களுக்குப் பொறுப்பேற்றார். அங்கு அவர் எப்ஸ்டீனுடனான தனது உறவுகளைச் சுற்றியுள்ள கேள்விகளுக்கு பதிலளித்தார்.

டவுன் ஹாலில், எப்ஸ்டீன் கோப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ரஷ்ய பெண்களுடன் தனக்கு இரண்டு உறவுகள் இருந்ததாக கேட்ஸ் ஒப்புக்கொண்டார். ஆனால், அந்த உறவுகள் எப்ஸ்டீனால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையது இல்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

எப்ஸ்டீனுடன் நேரத்தை செலவிட்டதும், மூத்த அறக்கட்டளை நிர்வாகிகளை அவருடன் சந்திப்புகளில் ஈடுபடுத்தியதும் ஒரு பெரிய தவறு என்று கேட்ஸ் ஊழியர்களிடம் கூறினார். இதனால் நிறுவனத்துக்குள் பாதிக்கப்பட்டவர்களிடம் அவர் மன்னிப்பு கேட்டார், “நான் செய்த தவறு காரணமாக இதில் ஈர்க்கப்பட்ட மற்றவர்களிடம் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்” என்று கூறினார். அதேபோல, “நான் சட்டவிரோதமாக எதையும் செய்யவில்லை. சட்டவிரோதமாக எதையும் நான் பார்த்ததில்லை. தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், பாதிக்கப்பட்டவர்களுடன், அவரைச் சுற்றியுள்ள பெண்களுடன் நான் எந்த நேரத்தையும் செலவிடவில்லை” என்று ஊழியர்களிடம் பில் கேட்ஸ் கூறினார்.



# நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க தமிழக அரசு மரியாதை!

# தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல்'



# தென்கொரியாவை அழித்துவிடுவோம்: வடகொரியா எச்சரிக்கை

# மூலிகை வளர்ப்பால் மண்ணும், விவசாயிகளும் நலன் பெறுவர்: குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு!

# ரத்த அழுத்த மாத்திரைகளுக்கு விடை கொடுக்கும் ஊசி


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 27.02.2026 வெள்ளிக்கிழமை இலவச இ-பேப்பர்